உ

சிவமயம்.

# திருச்சுழியற் புராணம்.

திருச்சுழியல்

ஆராவமுதாசாரியர்

இயற்றியது.

இஃது

திருச்சுழியற் கோயிற் திருப்பணி செய்யும்

தேவி கோட்டை

இளையாற்றுக்குடிக்கோயில்

பெருமரபூர் வகுப்பு

ராம. தி. அ. வகையார் வேண்டுகோளின்படி

யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டைச்

சைவப்பிரகாச வித்தியாசாலைப் பிரதிஷ்டாபகர்களாகிய

திருநெல்வேலி வாசிகள்

அம்பலவாண நாவலரவர்கள்

முன்னிலையில்

முன்னிருந்த பிரதிக்கிணங்கப்

பரிசோதித்து,

மேற்படி அவ்வகையாரால்

சென்னபட்டணம்

கலாரத்நாகரயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப் பெற்றது.

பிலவஸ்ரீ துலாரவி.

MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS

## சிவமயம்.

# விஞ்ஞாபனம்.

திருச்சுழியலிலே ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் சேரமான் பெருமாணாயனாரோடு வந்து சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடித் திருமடத்திலெழுந்தருளியிருக்குங்காலத்தில், ஒருநாளிரவு திருமேனிப்பெருமான் திருக்கையிற் பொற்செண்டுந் திருமுடியிற் சுழியமுமுடனே எங்குமில்லாத்திருவேடமாகக் காளையார்வடிவுகொண்டு அச்சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குக் கனவிலே காட்சிதந்தருளிக் "கானப்பேர்நாமிருப்பது" என்று சொல்லி மறைந்தருள, உடனே சுவாமிகள் கனவுநனவாக விழித்தெழுந்து "எம்பெருமான்றிருவருளிருந்தபடியென்னே" என்றுபாராட்டித், தாங் கனவிற்கண்டபேற்றைச் சேரமான்பெருமாணாயனாருக்குரைத்தருளித் திருமேனிப்பெருமானை வணங்கி அருள்பெற்று, அங்கிருந்தே "தொண்டரடித்தொழலுஞ் சோதியிளம்பிறையும்" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு திருக்கானப்பேருக்கு எழுந்தருளினார்.

திருச்சுழியலிலே சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குத் திருமேனிப்பெருமான் காளையாராகிக் காட்சிதந்தருளிய ஸ்தலம் "காளையார்கோயில்" என்றும், சோதிவனம் என்றும் வழங்குவதாயிற்று. அப்படியே அங்கே காளையார்கோயிலென்னு மாலயமும் இருக்கின்றது.

இந்தச் சரித்திரம் திருச்சுழியற்புராணநூலாசிரியர் பாடாதுவிட்டமையால் அதனைப்பாடித்தருகவென்று திருச்சுழியற்பணியாளர்களாகிய ராம. சீ. அ. வகையார். வேண்டிக்கொண்டபடி, யா. வ. திருநெல்வேலி சிவாசிகள் ஸ்ரீமத் அம்பலவாணநாவலரவர்களால் "காளையார்காட்சிச்சருக்கம்" எனப்பாடி இந்நூன்முடியிற்சேர்க்கப்பெற்றது.

சிவமயம்.

# சூ சீ ப த் தி ர ம்.


| படலம் | பக்கம். |
|---|---|
| கடவுள்வாழ்த்து ... ... ... ... | க |
| பாயிரம் ... ... ... ... | ச |
| தலவிசேடச்சருக்கம் ... ... ... | எ |
| பூமிதேவிபூசைச்சருக்கம் ... ... ... | கஉ |
| பாண்டியன் பிரமகத்திதீர்த்தசருக்கம் ... ... | கஎ |
| முத்திமாநகரச்சருக்கம் ... ... ... | உஉ |
| திரிசூலபுரச்சருக்கம் ... ... ... | உஎ |
| பிரளயஞ்சுழித்தசருக்கம் ... ... ... | ௩0 |
| பாவகரிநதிச்சருக்கம் ... ... ... | ௩௬ |
| கௌதமச்சருக்கம் ... ... ... | சச |
| மாலினிக்கு வேதாளசங்கைதீர்ந்தசருக்கம் ... | ௫௫ |
| பன்னகச்சருக்கம் ... ... ... | ௬உ |
| சித்திரத்துவசன் சாபந்தீர்ந்தசருக்கம் ... ... | ௬௫ |
| சித்திரரூபன்சாபந்தீர்ந்தசருக்கம் ... ... | எ0 |
| அட்டலிங்கச்சருக்கம் ... ... ... | எ௫ |
| அட்டதீர்த்தச்சருக்கம் ... ... ... | எஅ |
| காளையார்காட்சிச்சருக்கம் .. ... ... | அ0 |

உ

சிவமயம்.

# திருச்சுழியல் தேவாரம்.

## சுந்தரமூர்த்திநாயனார்

### பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊனாயுயிர் புகலாயக லிடமாய்முகில் பொழியும்
வானாய்வரு மதியாய்விதி வருவானிடம் பொழிலின்
றேனாதரித் திசைவண்டின மிழற்றுந்திருச் சுழிய
னானாவித நினைவார்தமை நலியார்நமன் றமரே. (௧)

தண்டேர்மழுப் படையான்மழ விடையானெழு கடனஞ்
சுண்டேபுர மெரியச்சிலை வளைத்தானிமை யவர்க்காத்
திண்டேர்மிசை நின்றானவ னுறையுந்திருச் சுழியற்
றொண்டேசெய வல்லாரவர் நல்லார்துய ரிலரே. (௨)

கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தங்கரைக் கேற்றக்
கொவ்வைத்துவர் வாயார்குடைந் தாடுந்திருச் சுழியற்
றெய்வத்தினை வழிபாடுசெய் தெழுவாரடி தொழுவா
ரவ்வத்திசைக் கரசாகுவ ரலராள்பிரி யாளே. (௩)

மலையான்மகண் மடமாதிட மாகத்தவண் மற்றுக்
கொலையானையி னுரிபோர்த்தவெம் பெருமான்றிருச் சுழிய
லலையார்சடை யுடையானடி தொழுவார்பழு துள்ள
நிலையார்திகழ் புகழானெடு வானத்துயர் வாரே. (௪)

உற்றானமக் குயரும்மதிச் சடையான்புல னைந்துஞ்
செற்றார்திரு மேனிப்பெரு மானூர்திருச் சுழியல்
பெற்றானினி துறையத்திறம் பாமைத்திரு நாமங்
கற்றாரவர் கதியுட்செல்வ ரேத்தும்மது கடனே. (௫)

மலந்தாங்கிய பாசப்பிறப் பறுப்பீர்துறைக் கங்கைச்
சலந்தாங்கிய முடியானமர்ந் திடமாந்திருச் சுழிய
னிலந்தாங்கிய மலராற்கொழும் புகையாலினைந் தேத்துந்
தலந்தாங்கிய புகழான்மிகு தவமாஞ்சது ராமே. (௬)

சைவத்தசெவ் வுருவன்றிரு நீற்றன்னுரு மேற்றன்
கைவைத்தொரு சிலையாலரண் மூன்றும்மெரி செய்தான்
றெய்வத்தவர் தொழுதேத்திய குழகன்றிருச் சுழியன்
மெய்வைத்தடி நினைவார்வினை தீர்தல்லெளி தன்றே. (எ)

பூவேந்திய பீடத்தவன் றானும்மட லரியுங்
கோவேந்திய வினயத்தொடு குறுகப்புக லறியார்
சேவேந்திய கொடியானவ னுறையுந்திருச் சுழியன்
மாவேந்திய கரத்தானெம சிரத்தான்றன தடியே. (அ)

கொண்டாடுதல் புரியாவரு தக்கன்பெரு வேள்விச்
செண்டாடுதல் புரிந்தான்றிருச் சுழியற்பெரு மானைக்
குண்டாடிய சமணாதர்கள் குடைச்சாக்கிய ரறியா
மிண்டாடிய வதுசெய்தது வாளூல்வரு விதியே. (க)

நீரூர்தரு நிமலன்றிரு மலையார்க்கய லருகே
தேரூர்தரு மரக்கன்சிர நெரித்தான்றிருச் சுழியல்
பேரூரென வுறைவானடி பெயர்நாவலர் கோமா
னூரூரன தமிழ்மாலைபத் தறிவார்துய ரிலரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

---

சுவாமி திருநாமம் - திருமேனிநாதர்.
தேவி திருநாமம் - (சகாயவல்லி) துணைமாலை.

---

## சுந்தரமூர்த்திநாயனார் திருநாட்டுத்தொகை

சுா - வது திருப்பாட்டு.

---

பண் - இந்தளம்.

---

திருச்சிற்றம்பலம்.

தென்னூர்கைமைத் திருச்சுழியற் றிருக்கானப்பேர்
பன்னூர்புக்குறையும் பரமர்க்கிடம் பாய்நலம்
மென்னூரெங்கள் பிரானுறையுந்திருத் தேவனூர்
பொன்னூர்நாட்டுப் பொன்னூர்புரிசைநாட்டுப் புரிசையே.

திருச்சிற்றம்பலம்.

---

உ

# சிவமயம்.

# கானப்பேரென்னும் காளையார்கோயில் தேவாரப்பதிகங்கள்.

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

தொண்டரடித்தொழலுஞ்சோதியிளம்பிறையுஞ்
சூதனமென்முலையாள்பாகமுமாகிவரும்
புண்டரிகப்பரிசாமேனியும்வானவர்கள்
பூசலிடக்கடனஞ்சுண்டகருத்தமருங்
கொண்டலெனத்திகழுங்கண்டமுமெண்டோளுங்
கோலநறுஞ்சடைமேல்வண்ணமுங்கண்குளிரக்
கண்டுதொழப்பெறுவதென்றுகொலோவடியேன்
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௧)

கூதலிடுஞ்சடையுங்கோளரவும்விரவுங்
கொக்கிறகுங்குளிர்மாமத்தமுமொத்துனதா
ளோதலுணர்ந்தடியாருன்பெருமைக்குநினைந்
துள்ளுருகாவிரசுமோசையைப்பாடலுநீ
யாதலுணர்ந்தவரோடன்புபெருத்தடியே
னங்கையின்மாமலர்கொண்டென்கணதல்லல்கெடக்
காதலுறத்தொழுவதென்றுகொலோவடியேன்
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௨)

நானுடைமாடெனவேநன்மைதரும்பரனை
நற்பதமென்றுணர்வார்சொற்பதமார்சிவனைத்
தேனிடையின்னமுதைமற்றதனிற்றெளியைத்
தேவர்கணாயகனைப்பூவுயர்சென்னியனை
வானிடைமாமதியைமாசறுசோதியனை
மாருதமும்மனலும்மண்டலமும்மாய
கானிடைமாநடனென்றெய்துவதென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௩)

செற்றவர்முப்புரமன்றட்டசிலைத்தொழிலார்
சேவகமுந்நினைவார்பாவகமுநெறியுங்
குற்றமிறன்னடியார்கூறுமிசைப்பரிசுங்
கோசிகமும்மரையிற்கோவணமும்மதனு

மற்றிகழ்திண்புயமுமார்பிடைநீறுதுதை
மாமலைமங்கையுமைசேர்சுவடும்புகழக்
கற்றனவும்பரவிக்கைதொழலென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௪)

கொல்லைவிடைக்கழகுங்கோலநறுஞ்சடையிற்
கொத்தலரும்மிதழித்தொத்துமதனருகே
முல்லைபடைத்தநகைமெல்லியலாளொருபான்
மோகமிகுத்திலகுங்கூறுசெயொப்பரிசுந்
தில்லைநகர்ப்பொதுவுற்றாடியசீர்நடமுந்
திண்மழுவுங்கைமிசைக்கூரெரியும்மடியார்
கல்லவடப்பரிசுங்காணுவதென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௫)

பண்ணுதலைப்பயனார்பாடலுநீடுதலும்
பங்கயமாதனையார்பத்தியுமுத்தியளித்
தெண்ணுதலைப்பெருமானெனஎழுவாரவர்த
மேசறவும்மிறையாமெந்தையையும்விரவி
நண்ணுதலைப்படுமாறெங்ஙனமென்றயலே
நைகிறவென்னைமதித்துய்யும்வணம்மருளுங்
கண்ணுதலைக்கனியைக்காண்பதுமென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௬)

மாவையுரித்ததள்கொண்டங்கமணிந்தவனை
வஞ்சமனத்திறையுநெஞ்சணுகாதவனை
மூவருருத்தனதாமூலமுதற்கருவை
மூசிடுமால்விடையின்பாகனையாகமுறப்
பாவகமின்றிமெய்யேபற்றுமவர்க்கமுதைப்
பானறுநெய்தயிரைந்தாடுபரம்பரனைக்
காவலெனக்கிறையென்றெய்துவதென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௭)

தொண்டர்தமக்கெளியசோதியைவேதியனைத்
தூயமறைப்பொருளாநீதியைவார்கடனஞ்
சுண்டதனுக்கிறவாதென்றுமிருந்தவனை
யூழிபடைத்தவனோடொள்ளரியும்முணரா
வண்டனையண்டர்தமக்காகமநூன்மொழியு
மாதியைமேதகுசீரோதியைவானவர்தங்
கண்டனையன்பொடுசென்றெய்துவதென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (அ)

நாதனைநாதமிகுத்தோசையதானவனை
ஞானவிளக்கொளியாமூனுயிரைப்பயிரை
மாதனைமேதகுதன்பத்தர்மனத்திறையும்
பற்றுவிடாதவனைக்குற்றமில்கொள்கையனைத்
தூதனையென்றனையாடோழனைநாயகனைத்
தாழ்மகரக்குழையுந்தோடுமணிந்ததிருக்
காதனைநாயடியேனெய்துவதென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௯)

கன்னலின்னமுதைக்கார்வயல்சூழ்கானப
பேருறைகாளையையொண்சீருறைதண்டமிழா
லுன்னிமனத்தயராவுள்ளுருகிப்பரவு
மொண்பொழினாவலர்கோனாகியவாரூரன்
பன்னுமிசைக்கிளவிபத்திவைபாடவல்லார்
பத்தர்குணத்தினராயெத்திசையும்புகழ
மன்னியிருப்பவர்கள்வானினிழிந்திடினு
மண்டலநாயகராய்வாழ்வதுநிச்சயமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

---

### பண் - கொல்லி.

---

திருச்சிற்றம்பலம்.

பிடியெலாம்பின்செலப்பெருங்கைமாமலர்த்தழீஇ
விடியலேதடமூழ்கிவிதியினால்வழிபடுங்
கடியுலாம்பூம்பொழிற்கானப்பேரண்ணனின்
னடியலாலடைசரணுடையரோவடியரே. (௧)

நுண்ணிடைப்பேரல்குனூபுரமெல்லடிப்
பெண்ணினல்லாளையோர்பாகமாப்பேணினான்
கண்ணுடைநெற்றியான்கருதியகானப்பேர்
விண்ணிடைவேட்கையார்விரும்புதல்கருமமே. (௨)

வாவிவாய்த்தங்கியநுண்சிறைவண்டினங்
காவிவாய்ப்பண்செய்யுங்கானப்பேரண்ணலை
நாவிவாய்ச்சாந்துளும்பூவுளுஞானநீர்
தூவிவாய்ப்பெய்துநின்றூட்டுவார்தொண்டரே. (௩)

நிறையுடைநெஞ்சுளுநீருளும்பூவுளும்
பறையுடைமுழவுளும்பலியுளும்பாட்டுளுங்
கறையுடைமிடற்றண்ணல்கருதியகானப்பேர்
குறையுடையவர்க்கலாற்களைகிலார்குற்றமே. (௪)

ஏனப்பூண்மார்பின்மேலென்புபூண்டீறிலா
ஞானப்பேராயிரம்பேரினானண்ணிய
கானப்பேரூர்தொழுங்காதலார்தீதிலர்
வானப்பேரூர்புகும்வண்ணமும்வல்லரே. (௫)

பள்ளமேபடர்சடைப்பாற்படப்பாய்ந்தநீர்
வெள்ளமேதாங்கினான்வெண்மதிசூடினான்
கள்ளமேசெய்கிலார்கருதியகானப்பே
ருள்ளமேகோயிலாவுள்குமென்னுள்ளமே. (௬)

மானமாமடப்பிடிவன்கையாலலகிடக்
கானமார்கடகரிவழிபடுங்கானப்பே
ரூனமாமுடம்பினிலுறுபிணிகெடவெண்ணின்
ஞானமாமலர்கொடுநணுகுதனன்மையே. (௭)

வாளினான்வேலினான்மால்வரையெடுத்ததிண்
டோளினானெடுமுடிதொலையவேயூன்றிய
தாளினான்கானப்பேர்தலையினால்வணங்குவார்
நாளுநாளுயர்வதோர்நன்மையைப்பெறுவரே. (௮)

சிலையினான்முப்புரந்தீயெழச்செற்றவ
னிலையிலாவிருவரைநிலைமைகண்டோங்கினான்
கலையினார்புறவிற்றேன்கமழ்தருகானப்பேர்
தலையினால்வணங்குவார்தவமுடையார்களே. (௯)

உறித்தலைச்சுரையொடுகுண்டிகைபிடித்துச்சி
பறித்தலும்போர்த்தலும்பயனிலைபாவிகாள்
மறித்தலைமடப்பிடிவளரிளங்கொழுங்கொடி
கறித்தெழுகானப்பேர்கைதொழல்கருமமே. (௧௦)

காட்டகத்தாடலான்கருதியகானப்பேர்
கோட்டகத்திளவரால்குதிகொளுங்காழியா
னாட்டகத்தோங்குசீர்ஞானசம்பந்தன
பாட்டகத்திவைவலார்க்கில்லையாம்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருச்சுழியற்புராணம்.

## கடவுள் வாழ்த்து.

### காப்பு.

நீதிக் குஞ்சர நீர்மை யசரமாய்ப்
பேதிக் குஞ்சர வாய்ப்புக்கும் பேறதாஞ்
சோதிக் குஞ்சரக் கண்ணுமைக் குஞ்சுதப்
போதிக் குஞ்சரம் பொன்னடி போற்றுவாம்.

### வாழ்த்து.

திங்கண்மும் மாரி பெய்க புரவலர் செங்கோ லோங்க
மங்கையர் கற்பு நீட மாநிலஞ் செழித்து வாழ்க
புங்கவர் கருணை கூர்க பூசுரர் சுருதி பொங்க
சங்கரன் றிருவெண் ணீறுஞ் சைவமுந் தழைக்க மாதோ. (க)

### நூற்பயன்.

சிவனுமைக் கருளிச் செய்த திருச்சுழிப் புராணந் தன்னைக்
கவனமற் றின்றிக் கேட்போர் கருத்துறப் படிப்போ ரெல்லாம்
புவனபோ கங்க டுய்த்துப் புண்ணிய புருட ராகி
யவமிருத் தின்றிக் காலன் றனைக்கடந் தடைவார் முத்தி. (உ)

### திருச்சுழி நாதர்.

திருச்சுழி யெனுமவர்க் குறுதி செந்திருத்
திருச்சுழி தனைநினைப் பவர்க்குத் தீங்கிலை
திருச்சுழி கண்டவர் தேவ ராதலாற்
திருச்சுழி யரனடிக் கன்பு செய்துமால். (ங)

### சிவபெருமான்.

ஊனாகி யுயிராகி யொளியாகி வெளியாகி யுருவ மாகி
வானாகி நிலனாகிப் புனலாகிக் கனலாகி வளியு மாகித்
தேனாகிச் சுவையாகி மலராகி மணமாகிச் செக மீரேழுந்
தானாகி நானாகி நின்றபரஞ் சுடர்சரணந் தலைமேற் கொள்வாம். (ச)

கறைகொண்ட மணிமிடறுங் கண்கொண்ட நுதலுமலர்க் கடுக்கை மார்பும், பிறைகொண்ட செழுஞ்சடையும் பெண்கொண்ட வொருபுடையும் பிணையார் கையு, மறைகொண்ட திருவாக்கு மடியவர்மேன் முழுநோக்கும் வனப்பு மாகித், துறைகொண்ட வொளிப்புனரிச் சுழியல்குடி கொண்டவர்க்குத் தொண்டு செய்வாம். (௫)

## மணக்கோல நாதர்.

விடங்காட்டித் திருமிடற்றிற் பிறைகாட்டிப் படர்சடையில் விரித்த நாகப், படங்காட்டி யரைக்கசைத்த புலியதளி னுடைகாட்டிப் பவள வாயா, லிடங்காட்டித் தழற்கணிச்சி வலங்காட்டிக் கௌதமற் கன் றிரங்கித் தில்லை, நடங்காட்டி மணக்கோலங் காட்டியபூ மீசனடி நம்பு வோமால். (௬)

## சபாபதி.

மெய்யனைக்குன்ற வில்லியை மான்மழுக்
கையனைக்கொடுங் காலனைக் காய்ந்தவென்
னையனைத்தில்லை யம்பலக் கூத்தனைச்
செய்யனைச்சிந்தை செய்வதென் செய்கையே. (௭)

## பிரளய விடங்கர்.

உருச்சுழிக்குஞ் சூலைதவிர்த் தொருபுலவன் றனையாண்டான்
மருச்சுழிக்குந் திருமுடிக்கு மணந்தருகே தகைவேண்டான்
கருச்சுழிக்கு ளடியார்க ளமிழ்ந்தாமற் கரையேற்றுந்
திருச்சுழிக்குட் பரஞ்சுடரைத் தினந்தினமும் பணிகுவமால். (௮)

## திருமேனி நாதர்.

வருமேனிப் பிறப்பொழித்து மருவியசா யுச்சியமே
தருமேனிக் கவலையினித் தளர்வொழிநீ மடநெஞ்சே
கருமேனிப் பரந்தாமற் கொருபாகங் கலந்தளித்த
திருமேனிப் பெருமானைப் பணிகமலச் சேவடியே. (௯)

## துணைமாலை யம்மை.

இணைமாலைச் சொலுங்கூந்த லிமயமட மங்கையரா
வணைமாலைக் கணையாக்கித் திரிபுரத்துக் கனலூட்டி
பணைமாலை யொழிப்பதற்குப் பவளவிதழ்த் தேனூட்டுந்
துணைமாலைப் பரைகமலச் சேவடியைத் தொழுவாமே. (௧௦)

### வேலடி விநாயகர்.

நாமனைப்போற் கரும்பெடுத்துத் தருமனைப்போற் கயிறேந்திக் கமழ்பூங் கொன்றைத், தாமனைப்போன் மதிசூடித் தம்பியைப்போன் முகமாறுந் தகைமைத் தாகி, மாமனைப்போற் கோடேந்திக் குறுமுனி போற் கடலையெலாம் வாரித் துய்த்துப், பூமனைப்போ லெழுதிவைக் கும் புகழுடைவே லடிக்களிற்றைப் போற்றல் செய்வாம். (௧௧)

### சுப்பிர மணியர்.

வாரகற்று முலைக்குறத்தி யுடன்செந்தூர் வதிந்தானைப்
பாரகத்துப் பலகுன்று பழனிமலை யமர்ந்தானைச்
சீரகத்தென் பரங்குன்று சோலைமலை சிறந்தானை
யேரகத்துச் செவ்வேளை யெவ்வேளை யும்பணிவாம். (௧௨)

### சுழியற் சோக்கம்மை.

நந்தரி தேடிய பொருளை நான்சொல
வந்தரி தாம்பொருள் வாக்கு நல்குவா
ளந்தரி புரகரி கௌரி யாமளை
சுந்தரி பைரவி சுழியற் சொக்கமை. (௧௩)

### சரசுவதி.

சேவிலிருந்த பரன்சரிதஞ் சிறிதுபகரத் திசைமுகத்தோ
னாவிலிருந்து சுருதிமறை நான்கிலிருந்து வெண்கமலப்
பூவிலிருந்து வாகனமாம் பூரத்திருந்து கவிஞரியற்
பாவிலிருந்திவ் வுலகுநிறைந் திருந்தாளிருதாள் பரவுதுமால். (௧௪)

### திருஞானசம்பந்தர்.

பிரமபுரச் செழுஞ்சுடரை வேணுபுரக் கோவைப்
பேசுகொச்சை வயவமுதைப் பூந்தராய்ப் பேற்றைச்
சிரபுரக்கல் விக்கடலைப் புறவநான் மறையைத்
திருத்தோணி புரக்கனியைச் சண்பைநறுந்தேனை
விரகுறுகா ழிப்பொருளைக் கழுமலப்பே ரொளியை
மிகுபுகலிக் குணவரையை வெங்குருநா யகத்தைத்
தரணியழ ணழித்தபர சமயகோ ளரியைத்
தப்பாமற் றினந்தோறு மெய்ப்பாகப் பணிவாம். (௧௫)

### திருநாவுக்கரசர்.

புல்லோடுந் தழையோடும் பூசிப்பார் தமக்கெதிரே
வல்லோடுந் தனத்துமலை மகளோடும் வருவானைச்
சொல்லோடும் பொருளோடுந் துணிவோடும் பாடிநெடுங்
கல்லோடு மிதந்தானைக் கருத்தோடும் பணிகுவமால். (௧௬)

திருநாவலூரர்.

வேலால் வரைதடிந்த வித்தகனைப் பெற்றவனைக்
கோலால முடியானைக் கொர்சனகா தியர்க்கருளும்
பாலால நிழலானைப் பரவைபாற் றூதுவிட்ட
வாலால சுந்தரன்ற னடிக்கமலம் பழிச்சுதுமால். (கள)

திருவாதவூரர்.

குதிரைகொளத் தரும்பொருளாற் குருந்தடியிற் பணிபுரிந்து
மதுரையிற்பாண் டியனூர்முன் * மாயுவயங் கண்டானை
யெதிரெய்திப் பெருந்துறையிற் றனைப்புரந்த வெழிற்கோலங்
கதிர்மணியார் கழுக்குன்றிற் கண்டானைத் தினம்பணிவாம். (கஅ)

சண்டேசுராதிநாயன்மார்.

தந்தைதா ளெறிந்தாரைத் தன்மகவை யறுத்தாரை
வந்தவர்க்கி யாதகொடை கொடுத்தாரை மதமாக்கை
சிந்தமழு வெறிந்தாரைச் சிவனடிக்கீழ்ச் சேர்ந்தமற்றச்
சந்தமுறு மடியாரை யெனதிதயந் தனிற்சேர்ப்பாம். (கக)

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

---

# பாயிரம்.

நகமக ளிடத்தெம் பெம்மா னல்கிய வழியிற் போந்த
நகுபதி னெண்பு ராணந் தனிற்சிவ புராணம் பத்திற்
பகர்தரு காந்தந் தன்னுட் சேத்திர காண்டப் பண்பிற்
புகறிருச் சுழிப்பு ராணந் தமிழினாற் புகல லுற்றேன். (க)

அவையடக்கம்.

அம்புவிக் கமிழ்த மாகு மாவின்பா லதுபூ ரித்த
கும்பமட் குடமா னாலு மிகழ்ந்திடாக் கொள்கை போலச்
செம்பதப் பாக மில்லா வென்மொழித் தீங்கு பாரார்
நம்பர்மெய்ச் சரிதத் தாலே களிப்பர்கற் றுணர்ந்த நல்லோர். (உ)

நைமிசாரணியச் சிறப்பு.

விடையவ னுலகென விடையவ னருகென விடையவ னுருவெனவே
யடைவுறு பதவிகள் பெறமிகு தவமுய லறிஞர்க டொகையிலரே
புடைவரு கொடுவரி யுடனுழை யொருதுறை புனலுண வரியுடனே
நடைமெலி பிடியொடு தடமிசை புனலுகர் நைமிச வுயர்வனமே. (ங)

---

* மாயு - நரி.

அதிர்சினை யிடரவா வதன்முது இனிலெலி யழகொடு தவழ்வனவே
யெதிர்கலு ழனுமெரு வையுநிறை இளிகளு மிகலற மருவினவே
கதிபெற விருடிகள் சதுர்மறை பயிலொலி கடலொலி யெனியவே
நதிபல பலபொழி னறுமலர் பொதுளிய நைமிச வுயர்வனமே. (௪)

## வேறு.

ஏல வேகுருந் தேறலான் மாமரு வியதா
லாலு கந்ததாற் றிகிரியேந் தியவணி யதனு
னீலு மேகமே லாயதாற் கோடணி நீரான்
மாலெ னும்படி வயங்கிய நைமிச வனமே. (௫)

வேங்கை யானதாற் குரைமா றடக்கிய வேலாற்
றுங்கு செச்சையால் வள்ளியே படர்தரு தகவா
லோங்கு வாகையான் மயிலுவந் தேறலா லுவமை
தாங்கெ யற்கிணை யாயது நைமிச ககனம். (௬)

மேக மேறலாற் பார்க்கவா யிரங்களும் வியப்பா
லாக மேகரு நிறத்ததாற் சசியணை வதனு
ளுக மேயதான் மாதவர் குழாங்கள்சேர் நலத்தாற்
பாக சாதனற் கொப்பது நைமிசப் பழுவம். (௭)

செருந்தி கோங்குசந் தனம்வன்னி யிலவுதிந் திருணி
குருந்து பாடலும் விளாவிரைக் கூவிளங் குச்ச
காந்தை மாதவி யிருப்பைகா யாபூளை ஞாழல்
பொருந்தி யோங்கியே வளர்வது நைமிசப் பொதும்பர். (௮)

அரசு கிஞ்சுக மகில்குமிழ் வேங்கையா மலக
மருது குங்கும மராமகிழ் கடம்புமா துளைமால்
குரவு நாவலா சினியத்தி யசோகுபூங் கொன்றை
மருவி மாதவர்க் கிருக்கையா நைமிச வனமே. (௯)

மந்த மாருத மசைந்திடக் கொழுத்தநுண் மணலுஞ்
சிந்து பூநிறை பாறையும் பிலமும்வே திகையும்
கொந்து சேர்மல ரோடையுந் தடங்களுங் குழுமி
யந்த ணாளருக் காயது நைமிச வடவி. (௧0)

தென்கு திக்குஞ்செந் தாமரைத் தடத்தளி செருக்கு
மீன்கு திக்குந்தண் ணோடையிற் குருகொலி விம்மு
மான்கு திக்கும்பொன் வண்டலின் மயிற்குல நடிக்கு
நான்கு திக்கினு மாகுதிப் புகைமண நாறும். (௧௧)

இன்ன வண்ணமார் நைமிச வனத்திலோ ரிடத்தி
னுன்ன தந்தரு பழுமரச் சாயையி னூடே
பன்னு சீர்மலி பன்னசா லையினிடைப் பரந்த
தொன்னெ றிக்கலை யுணர்தரு மாதவச் சூதன். (கஉ)

பிருகு காசிப னத்திரி கோசிகன் பிசிண்டன்
சுருதி ரோமசன் விபாண்டக னங்கிராச் சுமந்து
வருபு லத்தியன் பரத்துவா சன்சுகன் மதங்கன்
கரக மாதவன் வசிட்டன்ம ரீசிமார்க் கண்டன். (கங)

அகக னற்சம தக்கினி பார்க்கவ னநந்தன்
சநகன் றேவலன் சௌனகன் முதலிய தவத்தோ
ரினிய கேள்வியின் வேட்கையர் சூழ்ந்தினி திருப்ப
புனையு மாமணிப் புலியதட் டவிசின்மேற் பொலிந்து. (கச)

மாத வர்க்கெலா மிருசெவி குளிர்ந்துள மகிழ
மாத வர்க்கெலாம் புளகமெய்ம் மலிதர வயங்க
மாத வர்க்கெலாங் கேள்விமே லாதரம் வளர
மாத வர்க்கெலாம் ஞான்வா னந்தவாழ் வாக. (கரு)

வேத சங்கிதைச் சுருதியி லளப்பிலா விரிவுங்
கோதி லங்கமோ ராறினு மிணங்கிய குறிப்பு
மோது மொன்பதிற் றிரட்டிய புராணத்தி னொழுங்கு
காத னூர்வினை யாட்டுமெய் யடியவர் நலனும். (கசு)

தெண்டி ரைக்கடற் படுமமு தத்தினைத் திருமா
லண்ட ருக்கெலாங் களிப்புற வழங்குமா றதுபோல்
விண்டு ரைத்தல்கேட் டளவளா யிருக்குமவ் வேலை
மூண்ட கத்தனுக் கிணைபுகல் சௌனக முனிவன். (கஎ)

சூத மாமுனி வாண்முக நோக்குறீஇச் சுருதி
வேத மார்கரு கூலமே யாறங்க வீடே
நீதி யாகம புராணங்க ணிறைகளஞ் சியமே
பேதி யாக்குணக் குன்றமே யருட்பெருங் கடலே. (கஅ)

அருந்த வப்பரா சரனருள் வியாதனு லடைவே
திருந்து மாகம புராணங்கள் கற்றறி திறத்தாற்
பொருந்த வித்துணைப் போதுநீ புகன்றவை செவியா
லருந்தி னுமெனக் கேட்டன மையகே ளின்னும். (ககூ)

தலவி சேடமுந் தீர்த்தமார் விசேடமுந் தக்க
நிலவு வேணியன் மூர்த்திமெய் விசேடமு நிமல
னலகி லாவருட் கருணையா லமைந்திடு சிறப்பிற்
றுலகி லெப்பதி யப்பதி யுளங்கொள வுரைப்பாய். (௨0)

என்று கூறலுஞ் சூதமா முனிகளித் திசைந்து
நன்று நன்றுநும் வேட்கையுஞ் சிரத்தையு நயந்தோ
மின்றெ ஞுதர மிகுதியாற் றெரிந்தவா றிசைப்பன்
கொன்றை வேணிய னிடைவிடா தமர்திருக் கோயில். (௨௧)

இன்ன தென்னவே கறைமிடற் றண்ணலை யிறைஞ்சிப்
பெருகினி ருந்தமுமாய்த் திருமறு மார்பனைப் போற்றிப்
பின்னு செஞ்சடை வியாதனைக் கருத்துறப் பிணித்து
நன்னெ றிப்புனி தத்தல நவிலுவா னயந்தான். (௨௨)

பாயிரம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௨௨.

## தலவிசேடச்சருக்கம்.

அம்பென்பெ ருக்கறுகு வெண்டும்பை மத்தமதி யங்கொன்றை
கொக்கிறகு தன்றுஞ்ச டைச்சிவனை, விம்பம்பெ றத்தரும மொண்
சம்பு கொக்குமகிழ் விண்கண்ட பொற்பரசி னின்றன்பு பெற்றநகர்,
செம்பொன்க லித்தசபை யின்கண்கு னித்தல்செக செஞ்செஞ்செ
ணக்கிணக திந்திந்தி மித்திமென, நம்புந்த வக்கௌத மன்கண்கொ
ளப்புரியு நம்பன்றி ருச்சுழிய னம்பன்றி ருச்சுழியல். (௧)

தடமும் பழக்கதலி வனமுஞ் செழித்தமுகி றவழும் பொழிற்
செறிவு மணுகுந் தவத்தர்புக, லிடமுஞ் சுடர்க்கொடியு மணிமண் டபப்
பொலிவு மெழிகம் பலைக்கடலும் வயலும் புனற்குளமு, மடமுங் கடை
த்தெருவு மெயிலுந் திருத்தரும மாமுங் கதித்தபல வளமுஞ் சிறக்கு
நகர், விடமன்று துய்த்தமர ருயிர்தந்த முத்திபுர விமலன் றிருச்சுழி
யல் விமலன் றிருச்சுழியல். (௨)

சாலேஞ் சினத்தவுண ருல்வந் தடுத்தவினை தாழும் படிக்கினிது
பார்மின் றனக்கருளி, நீடுங் கொடிச்சிகர மாடம் பளிக்கறைநி லா
முன்றிநெறற்றிபல கூலம் படைத்தநகர், காடேந் துணித்துநிவர் மேடேந்
திருத்தியெழில் காணுந் திறத்திலுயர் மாறன் புதுக்கியது, நாடும் படிக்
குளரி தேடும் பதிப்புவன நாதன் றிருச்சுழிய னுதன் றிருச்சுழியல்.

## வே று.

பொங்கு பேரலைக் கடல்புடை சூழ்தரும் புவியிற்
திங்க ளின்வழித் தென்னவன் பாண்டிமண் டலத்திற்
கங்கை யென்றுல கோர்புகழ் வையையங் கரையிற்
கொங்கு மாமலர்த் தடஞ்செறி நகர்தமிழ்க் கூடல். (௪)

அப்ப திக்குநேர் தெக்கிண திசையினி லாகச்
செப்பும் யோசனை யிரண்டள வினிற்சதா சிவமா
யொப்பி லாப்பர மாநந்த விலிங்கத்தி னுருவாய்த்
துப்பு நேர்சடை யுமாபதி யமர்திருச் சுழியல். (௫)

நீல மேனியன் முதலியோர் பயங்கொள நெடுநீர்
ஞால மூங்குல வரைகளும் புதைக்குமந் நாளிற்
பால லோசனன் றென்னவன் படுந்துயர் பார்த்துச்
சூல மாமுனைக் கேந்திய நகர்திருச் சுழியல். (௬)

பொருநி ரைக்கடல் பரந்துல கனைத்தையும் புதைத்துப்
பரிதி மண்டல முழுகுறத் திவலைகள் பரப்பி
வருமு காந்தநீர் பிலமுறச் சுழித்திடர் மாற்றிச்
சுருதி நாயக னிடைவிடா தமர்திருச் சுழியல். (௭)

சேட்டி ளங்கதிர் பரப்பிய பரிதியஞ் செல்வ
னாட்டி லங்கிழை யுமையுடன் சிவனுறை நகரங்
கோட்டி லஞ்சுகம் பாடிய தண்டலை குளிர்பூந்
தோட்டில் வண்டிசை முரறடஞ் செறிதிருச் சுழியல். (௮)

உறைவ தற்கிட மிதுவென வறமெலா மொருங்கே
முறையி னுவன்மா மகிழுர செனப்பரன் முன்னே
யறையு நாற்றருச் சதுர்யுகந் தொறுந்தொறு மதுவாய்த்
துறைகொள் கௌவையங் கடலரு கமர்திருச் சுழியல். (௯)

எம்பி ரான்றிருக் கோயின்முன் றருமங்க ளெய்தி
யும்பர் சம்புகு தம்மகிழ் போதியென் றுரைக்க
நம்பு தாவர விநாயக னெனும்பெயர் நண்ணத்
தும்பி மாமுகன் யுகந்தொறு மமர்திருச் சுழியல். (௧௦)

இந்து சேகர னூர்வய லூரிது வென்று
முந்து சீர்கெழு முத்திமா நகரென்று முறையாற்
கொந்து லாந்தடச் சூலநன் னகரென்றுங் குறிப்பா
னந்தி நம்பனூர் சுழியலென் றும்மத னாமம். (௧௧)

எத்த லங்களி லிருந்துசெய் பாவங்க ளெல்லா
நித்தன் முத்திமா நகர்கண்ட காலையி னீங்கு
மத்த லத்திற்செய் பாவங்க ளத்தலத் தன்றி
யெத்த லத்திற்சென் றிருக்கினு மிறைஞ்சினு மேகா. (௧௨)

சாரல் வெள்ளியங் கைலையே பன்னக சயில
மார நீர்க்கௌண் டின்னிய நதிகங்கை யாகு
நார வேணியம் பரமனே சுழியற்கு நாத
னூரில் வாழ்பல மனிதர்கள் யாவரு மும்பர். (௧௩)

அறிவி னூற்றவம் புரிவது மவரவர் பேறு
மறுவி லாச்சுழி யலின்மனி தர்க்குமாத் திரமோ
பறவை யண்டசங் கிருமிகீ டம்பல மிருக
மிறுதி யிற்சிவ பதம்பெறும் பிறவியு மிலையே. (௧௪)

வாக்கி னூற்றெறுங் கைகளா லடங்கிலா மனத்தா
னேக்கி னூற்செய்த பாவங்க ளனைத்தையு மொறுக்குந்
தாக்கி யேதொடர் பஞ்சமா பாதகந் தனையும்
போக்கு மேபடிந் தாடவுன் னிலுமொலிப் புணரி. (௧௫)

நிறைகு ணத்தினன் சுழியலைக் கருத்துற நினைக்கப்
பிறைமு டிப்பிரான் சுழியலென் றொருதரம் பேசக்
கறைமி டற்றினன் சுழியலைக் கண்ணுறக் காண
மறையி ரைக்குமே சிவபதந் தருமென மகிழ்ந்து. (௧௬)

பொடிய ணிந்தமெய்க் கனல்விழிக் கைலையெம் புனிதன்
படிய டங்கிய தலந்தொறுங் கலந்தருள் பயில்வான்
கொடிம ருங்குலா ளுடனிடை விடாதமர் கோயி
லடியர் சிந்தையுஞ் சுழியலு மெனமறை யறையும். (௧௭)

அறிந்து செய்தபா வம்மறி யாதுசெய் பாவ
மறந்து செய்தபா வம்மற வாதுசெய் வஞ்சஞ்
சிறந்த பூமிநா யகன்றிருச் சுழியலைச் சேர்ந்தாற்
பறந்து போஞ்சண்ட மாருதத் தகப்பட்ட பஞ்சாய். (௧௮)

விரித்த வேணியன் சுழியலில் வந்தொரு வேளை
தரித்த கன்றபே றிறுதியிற் பெறுவர்சா லோகஞ்
சிரித்து மூவெயி லெரித்தவ னூர்தனிற் செனித்து
மரித்தபேர்முத்த ராவர்மீண் டுலகினில் வாரார். (௧௯)

எறிதி ரைக்கட லுலகினி லவரவ ரியற்றிப்
பெறுப லத்தினு மாகுதி விரதங்கள் பிறவு
முறுத வத்தினைச் சுழியலி னியற்றினோர்க் குதவு
மறுத லீத்தினிற் கிடைப்பதற் காயிர மடங்கே. (உ0)

காசி யிற்றிருக் காளத்தி யிற்கழுக் குன்றி
லீசர் தில்லையிற் குடந்தையிற் கமலையி லியற்றும்
வாசி வேள்வியா யிரந்தரும் பலனெலாம் வழங்கு
மாசை யாற்சுழி யலிலரு ளொருபிடி யன்னம். (உக)

எவர்க ளாயினுஞ் சுழியலி லெவ்வள வேனுஞ்
சிவதி ருப்பணி செய்குது மெனநினைத் தானு
மவரி ருப்பது கைலையே யையமேற் றேனு
மூவகை யான்முடிப் பவர்பெறும் பயனுரைக் கொணுமோ. (உஉ)

கொந்து சேரொலிப் புணரியி லாற்றினிற் குளிக்க
மூந்து வேள்விகள் செபதப விரதங்கண் முயலப்
புந்தி யாலருச் சனைசிவ பூசனை புரிய
வெந்தை முத்திமா நகரலா துலகினி லில்லை. (உ௩)

சூல தீர்த்தமுங் கவ்வுவ தீர்த்தமுந் தொல்லை
ஞால தீர்த்தமுங் காலவ தீர்த்தமும் ஞானச்
சீல தீர்த்தமும் பிரமதீர்த் தமுந்திரி நயன
கூல தீர்த்தமுங் கோடிதீர்த் தமுங்குளிர் காவும். (உச)

புனித நீரொலிப் புணரியும் பன்னகப் பொருப்பு
மினிய பாவக ரியுஞ்சிவ லிங்கமோ ரெட்டும்
பனிம திச்சடைக் கறைமிடற் றனல்விழிப் பரமாந்
தனிமு தற்கொரு நீழலாம் புன்னையந் தருவும். (உ௫)

போதி யுந்திருப் போதிவி நாயகப் பொருளு
மோது நீத்தத்தாற் கீட்டிசைப் பார்த்தமுக் கணியும்
வீதி யுஞ்சைவர் மடங்களுந் தடங்களும் விமலன்
மாதி னோடமர் கோயிலும் போலில்லை மண்ணில். (உ௬)

நிலத்தி லிங்கங்கள் யாவைக்கு முறுதியாய் நிறைந்து
பிலத்தி னூடுற வேர்நிறீஇ நிமிர்ந்துருப் பெற்றுப்
பலித்த காரண மாணிக்க நீடொளி பழுத்துக்
கலித்த வூழிகள் பலபல சதுர்யுகங் கண்டு. (உ௭)

நாத விந்துவாய்ச் சச்சிதா னந்தமாய் நடுவு
மாதி யுந்தமு மின்றிமற் றகண்டபூ ரணமாய்ச்
சீத ரன்முதற் கயிலையிற் சிறப்பிது வென்றே
வேத நாயக னிருக்கின்றான் சுழியலின் மேவி. (உ௯)

சூல னன்னகர்ப் பரஞ்சுடர் தனையொரு துணிவாய்க்
காலை யிற்றொழுப் புரவிவேள் விப்பயன் காட்டு
மேலு முச்சியி லிராசசூ யப்பய னெய்து
மாலை யிற்றொழச் சிவன்முத் திக்கென்சொல் வழக்கே. (௩௰)

வே று.

பாலபி டேக நெய்யபி டேகம் பச்சிள நீரபி டேக, மேலதற் கோலப் புனலபி டேக மியற்றினோர் வேட்கையின் படியே, காலதாம் புவி யெய்துத றிண்ண னளினஞ்சண் பகமெருக் கிதழி, நீலவுற் பல மிட் டேத்தினோர் செல்வந் துய்த்துப்பின் கைலையை நீங்கார். (௩௦)

மாயிரு ஞாலத் தரியகோ கருண மாபல லிலிங்கத்தின் முடிமே லாயிர வில்வத் தளம்பழு தகற்றி யருச்சித்த பலனெலா மளிக்கும் பாயொளி விரிக்குங் கௌத்துவ மார்பன் பங்கயன் றேடருஞ் சுழிய னாயகன் முடிமேற் சிவநிசி வேளை தூவுமோர் நறுந்துணர் வில்வம். ()

வடதிசை யதனிற் காலவ தீர்த்தந் தெக்கிணங் கோபிதார் வனமாக், குடதிசை பனகக் குவடுகீட் டிசைக்குக் கண்ணுவ தீர்த்தமுங் குறிப்பி, னடுவுறும் பூமி யடங்கலுங் காசி தன்னினு மேற்றமா னவில் வர், கடவுண்மா நதியாங் கவுண்டினி யாற்றின் மணலெலா மிலிங்க மாக் கவினும். (௩௨)

தார்மலி யிதழிச் சடையனைத் தவள விடையனைச் சடைமுடி யவனைக், கார்முகி றவழு மணிமதிற் சுழியற் கறைமிடற் றண்ணலைக் கண்டு, சீர்மலி நியம விதியினாற் பூசை சிறந்தவைந் தெழுத்தினாற் புரிந்து, பார்மக டனது வினையொழித் துவந்தா ளென்றனன் பயின் மறைச் சூதன். (௩௩)

தலவிசேடச்சருக்கம் முற்றிற்று.

---

ஆ. திருவிருத்தம் - எச.

---

## பூமிதேவி பூசைச் சருக்கம்.

சாற்றிய மாற்றங் கேட்டதோர்கடவுட் சவுனக முனிவரன் றவத்தோய், சேற்றிதழ்க் கமலமலர்த்துசெங் கதிர்போல் வந்தெமைத் தெருட்டலாற் றெளிந்தே, நீற்றொளிச் சுழியல் விமலனைப் பூமி பணிந்திடர் நீங்கிய நீர்மை, தோற்றுமவ் வகையாற் புகலுதி யெனலுஞ் சூதமா முனிவரன் சொல்வான். (க)

தரணியி லவுணர் குழுவினுக் கெல்லாந் தலைமையா நிலைபெறுந் தக்கோர், முரணுறு பகையைக் கடைக்கணுற் பார்த்து முருக்கிய புயவலிச் செருக்கோர், திரணெடுங் குவடு பலகொளீப் பத்தா டியதிறல் வலியினிற் சிறந்தோ, ரிரணியக் கண்ண னிரணிய னென்னும் பெயருடைத் தானவ ரிருவர். (உ)

கோடியர் பசும்பொற் குவட்டினி லேறிப் புணரியிற் குபீரெனக் குதிப்பார், காடுறு மலைகள் பலபல பிடுங்கிக் கடற்குழி தூர்ந்திடக் குவிப்பா, ராடுவெம் பசிக்கு நினைந்தடி யடிசி லகடுவா டாவகை யடைவார், நீடிய பொழுதுபோக்குதல் புரியுங் கொலைத்தொழி லல்லது நினையார். (ங)

பாவமீ தியற்றுந் தருமமீ தென்னும் பகுதியைக் கனவிலும் பாரார், தேவர்மா முனிவர் மதக்குட நமக்குச் சுமப்பதே நீதெனத் தெளியார், கோவமே யலது கணப்பொழு தெனினுங் குளிர்முகக் கருணைசற் றறியார், யாவரும் வெருவு மறத்தொழி லல்லா லிரக்கமென் னத்தனை யில்லார். (ச)

குண்டுநீர்த் தமரக் கடல்களைக் கடப்பார் பெரும்புறக் கடலினிற் குளிப்பா, ரண்டகோ ளகையைத் தடவுவார் மேருத் திகிரியி லரசுவீற் றிருப்பா, ரெண்டிசா முகத்தி னிறுத்திய களிற்றின் வால்பிடித் திருத்துவார் விடுப்பார், கண்டதோர் பிலத்துட் புகுந்துபா தாளலோகமுங் காவல்பூண் டாள்வார். (ரு)

இன்னதன் மையரா மவுணர்தந் தலைவ ரிணையிலா ரிருவர்மற் றிவருட், பின்னவ னவன்பே ரிரணியக் கண்ணன் பிஞ்ஞக னளித்தபேர் வரத்தாற், பன்னகஞ் சுமந்த நிலமக ளிருப்பை யதிர்ந்திடந் தெடுத்தொரு பாய்போற், றன்னது கக்கத் திடுக்குறீஇ நடந்து தருக்கொடு பாதலஞ் சார்ந்தான். (சு)

பூமியை யிழந்த புழுக்கத்தான் வருந்திப் புரந்தரன் முனிவர்புத் தேளிர், தாமரைத் தவிசி னினிதுவீற் றிருக்குஞ் சதுர்முகன் றன்

னொடு சனற்ற, மாமறை விரிஞ்சன் வயிரவாட் குரிசில் கடவுளர் மாத வுரோடுங், தேமலர்ப் படலைத் துளவமா றுயிலும் பாற்கட லிடத்தி னிற் சென்றான். (எ)

பாற்கடற் றுயிலுங் கருங்கடல் வண்ணன் பங்கயத் தோன்வர வுணர்ந்து, நூற்கலை மடந்தை யேய்ந்தநா வானை நோக்கலு மியாவ ரும் பணிந்து, சூற்கரு முகிலே நீலமால் வரையே சுரர்க்கெலா முயிர் தரு மருந்தே, மேற்கரு மங்க ளெய்திய தைய கேட்டரு ளெனவி ளம் புவரால். (அ)

தானவர்க் கிறைவ னிரணியக் கண்ண னெனுங்கொடுந் தொழிற் றறு கண்ணன், வானவர் தவத்தர் மனநடு நடுங்க விடுக்கண்செய் பவ ன்மதி யாம, ஞானில மடந்தை தன்னையின் றெடுத்துக் கொண்டுபா தலம்புக நடந்தான், றேனவிழ் துளவத் திருநெடு மாலே யெனமு றை யிட்டன ரிரண்டு. (கூ)

அம்மொழி நெடியோ னிருசெவி புகுமு னெழுந்தது சீற்றமா முனலம், விம்முறூ தண்டப் பரப்பெலா மளாவி விரிதிரைப் பரவை யைச் சுவற்றிக், கும்மகண் மீள வவுணர்கோன் மாள வானவர் குறை யெலாந் தீரக், கொம்மைவெம் முலைமா வகலனு மிரங்கிக் கோலத்தி னுருக்கொடு நடந்தான். (க0)

காந்தினன் சினந்து கீழுறப் பார்த்தா னடுக்கெலாந் தகர்ந்திடக் கடந்து, நீந்தினன் கனகக் கண்ணனைக் கொன்று னிலமக டனைநுதி மருப்பி, லேந்தினன் மீண்டான் பண்டுபோ லவனை யிருத்தினன் வருத்தமற் றகற்றப், போந்தநான் முகனும் வழுத்தின னிமையோ ரிறைஞ்சினர் பூமழை பொழிந்தார். (கக)

புவனமா மடந்தை நிசாசரன் செங்கை தீண்டிய தீண்டன்மெய் பொறுமற், கவனமா யிந்தப் பாவமெவ் வாறு கழியுமென் றேயுளந் தளர்ந்து, பவமகற் றுதற்கும் பரிந்துகாப் பதற்கும் பனிவரை மகட னந் தழுவுஞ், சிவனலா தில்லை யெனவொரு துணிவாற் சேமமார் கயிலையைச் சேர்ந்தாள். (கஉ)

கயிலையிற் புவிமான் வந்தமை நந்தி கண்டுபோய்க் கண்ணுதற் கியம்பச், சயிலவில் லுடையான் விடுத்திடென் றலுமே தலமகள் வந் ததற் பிரனே, யயிலெயிற் றவுணன் செங்கைதீண் டியதோர் கொடு மையா லயர்கின்றே னற்றேன், பயிலுமித் தோடந் தீர்த்தரு ளுதவின் பரமென விருபதம் பணிந்தாள். (கங)

மலைமகள் கடல்சூழ் நிலமகண் மயங்கு மயக்கினைப் 'பார்த்தந் தோ விந்தத், தலமகள் பழங்க ணெய்தியுள் ளுடையத் தருமதோ தவிர்த்தரு ளெனலும், கலைமதி நுதற்ற னிடத்தினை நோக்கிக் கடைக்கணித் திளநகை புரிந்து, மலர்முகக் கருணை மீக்கொளத் தலையால் வரனிதை வகுத்தனன் மாதோ. (கச)

தென்னவன் றமிழ்நாட் டிலகுகூ டலுக்குத் தெக்கிணத் திரண்டியோ சனையிற், பன்னருஞ் சிறப்பிற் கோபிதார் வனத்துக் குத்தர பாரிசந் தன்னிற், புன்னைநன் னீழ லிடைவிடா திருப்போம் வந்தெமைக் கண்டுபூ சித்தா, லுன்னது பழங்கண் டீர்க்குது மென்ன விடைகொண்டா ளுலகமான் மீண்டாள். (கரு)

இருவிலப் பாவை யிமயமால் வரையார் நதிவரை பலகடந் தேகிச்
சரயுகோ மதிநீர் யமுனைபா ரதிநற் பகீரதி யிவைகண்டு தணந்து
குரைபுனற் றுங்க பத்திரை பம்பை யாறுகோ தாவரி முகரி [யர்ந்து.
பெருகுபா லாறு பெண்ணைகா விரிவெள் ளாறுவை கையுங்கண்டு பெ

குன்றவிற் பெருமா னுரையடை யாளக் குறிப்பினுற் கோபிதார் வனத்திற், சென்றதன் வடபாற் புன்னைநன் னிழலிற் சிவக்குறி யிருப்பது கண்டா, ளென்றவப் பயனே யிருகணுண் மணியே யிமையவர்க் குயிர்தரு முதலே, நன்றெனப் பூசை புரியத்தன் பெயராற் றீர்த்த மொன் றியற்றினு ளயர்ந்து. (கஎ)

பூமிதீர்த் தத்திற் புனல்குடைந் தாடிப் புனிதவெண் ணீறுமெய்க் கணி
சோமசே கரனை மஞ்சன மாட்டித் தூய்மலர் கூவிளந் தூவி [ந்து
மாமறைப் படிசோ டசவுப சாரம் வரிசையா னியற்றிவான் பொருட்கு
நாமமும் பூமி நாதனென் றிசைத்துத் தோத்திர மிவ்வண நவின்றாள்.

வேறு.

அங்கண கணபண வரவம் பூண்டகைக்
கங்கண மலைமகள் கணவ காரண
சங்கர திருமல தவள நீறணி
புங்கவ சிவசிவ பூமி நாதனே. (கக)

நண்ணியா வரும்பணி சரண நாண்மதிக்
கண்ணிய மலைமகள் கலந்த பொற்புயத்
திண்ணிய கடல்விடந் தேவர்க் காயுண்ட
புண்ணிய சிவசிவ பூமி நாதனே. (உ0)

பேர்கதி யடியவர்க் கருளு மண்ணவ
மரகத மயிறழூ வியம ணோத
ஹரகர சங்ர வாதி நாயக
புரகர சிவசிவ பூமி நாதனே. (உக)

அடியவர் பணிமல ரடிம கேசபொன்
முடியய னறிகிலா நிமல முக்கண
கொடியிடை யுமையொரு பாக கோலவெண்
பொடியணி சிவசிவ பூமி நாதனே. (உஉ)

நாரண னான்முகன் றேடு நாயக
காரண காலனுங் கூற்றைக் காய்ந்தரு
ளாரண பல்லுயிர் யாவைக் கும்பரி
பூரண சிவசிவ பூமி நாதனே. (உங)

நீண்டமா லறிகிலா நிருத்த வாநந்த
தாண்டவ வெனதுசஞ் சலந்த விர்த்தெனை
யாண்டவ புலியத ளுடுத்த ராவணி
பூண்டவ சிவசிவ பூமி நாதனே. (உச)

பராபர தயாபர பால லோசன
கராசல முரித்துரி போர்த்த கஞ்சுக
சராசர வகுப்பினுக் குறுதித் தம்பமாம்
புராதன சிவசிவ பூமி நாதனே. (உரு)

நீதர வுரியதென் றனக்கு நின்னரு
ளாதர வுனையலா லாருண் டையனே
சீதர னயனறி யாத செஞ்சிலைப்
பூதர சிவசிவ பூமி நாதனே. (உசா)

மின்னகு மூவிலை வேல மூவர்க்கு
முன்னவ கைலையி லெனக்கு முன்னர்நீ
சொன்னது மறுதெதிர் வந்து தோன்றினை
புன்னையிந் தண்ணிழற் பூமி நாதனே. (உஎ)

வேறு.

என்று துதிக்கு மவ்வளவி லிமையோர் பெருமா னிணரிதழி
துன்று சடையும் பிறைக்கொ ழுந்துந் துலங்கு மார்பிற் புரிநூலும்
வென்றி மழுமா னணிகரமுங் கறைசேர் மிடறு மாய்வந்து
நின்ற பவள வாய்மலர்ந்து நிலமான் களிக்க நிகழ்த்துவான். (உஅ)

அகில மகளே நமதிருப்பி னீவந் தெய்து மனவினிலே
பகர வரிய வினையகன்று பரந்து கதிர்மூன் பனியான
திகழ வுயர்மா பூசைநமைச் செய்ய மகிழ்ந்தே மெமைப்புகழ்ந்த
புகழால் விருப்புற் றுனக்கெதிரே வந்தோ மென்றான் புவனேசன். ()

கண்டா ளிருகண் களிகூரக் கைலைப் பெருமா னருளியதுட், கொண்டாண் மகிழ்ந்தாள் பணிந்தெழுந்தாள் கொவ்வைத் துவர்வா யிடத்தானே, தொண்டா மெளியேன் றனக்கிரங்கி யெந்தாய் வந்தாய் துகடீர்த்தாய், விண்டா தரவாற் கேட்குமிந்த வரந்தா வென்றாள் விளம்புவாள். (௩0)

கருணைக் கடலே சிவக்கொழுந்தே கைலைப் பொருப்புக் கனியேயென்
னருமைப் பொருளே யாருயிரே யமுதே முக்க ணருமருந்தே
தருணச் சுடரே சுடர்மணியே தயங்கி வாடும் பயிர்க்குதவும்
பருவப் புயல்போ லெனைப்புரந்த பரமே விண்ணோர் பாக்கியமே. ()

உன்பேர் பூமி நாதனென வூழி பலவு நிலைநிற்க
வென்பே ராக நானியற்றுந் தீர்த்தம் படிவா ரெல்லோர்க்கு
மன்பா லுன்னைத் துதித்தபுகழ் கற்போர் கேட்போர் யாவருக்குந்
தென்பா லிறைக்குள் ளாக்காமற் கொடுக்க வேண்டுஞ் சிவபூதமே. ()

என்றா ளுடனே கேட்டவரா மீந்தோ மென்று னெம்மானு
நின்று டொழுதாள் சரணமையா நிமலா வென்றாள் விடைகொண்டா
சென்றாள் புனித பவித்திரையா நிலமான் றேவர் தலைமைக்காக்க [ள்
வன்றுழியினஞ் சுண்டபிரா னிருந்தான் புன்னை யகநீழல். (௩௩)

## வேறு.

புன்னைநன் னீழல் வைகும் புராதன பூமி நாதன்
முன்னையோர் காலந் தன்னின் முதுமறை யந்த ணாளன்
றன்னைமுன் வதைத்த பாவ நீக்கிநீ டரணி காத்த
தென்னவன் றன்னைக் காத்தா னென்றனன் றிருந்தச் சூதன். (௩௪)

## பூமிதேவிபூசைச்சருக்கம் முற்றிற்று.

---

ஆ திருவிருத்தம் ௧0௮.

# பாண்டியன் பிரமகத்திதீர்த்த சருக்கம்.

சவுனக முனிவன் மீண்டும் வினவுவான் றவத்தின் மிக்கோய்
புவிதனின் மறையோற் கொன்ற பாதக முழுதும் போக்கிக்
கவுரியன் றன்னைக் காத்தா னெம்பிரா னென்னுங் காதை
நவையற வெமக்குச் சொல்வா யென்னலு நவில்வான் சூதன். (௧)

புண்டொரு காலந் தன்னிற் பாரத கண்ட வைப்பிற்
றண்டமிழ் மலயக் குன்றந் தழுவிய பாண்டி நாட்டிற்
கொண்டல்கண் படுக்குஞ் சோலைக் கூடலம் பதியில் வாழ்வோன்
மண்டலம் புரக்குங் கோமான் பராக்கிரம வழுதி யென்பான். (௨)

பல்லுயிர்க் கிரங்கு நெஞ்சான் கருணையாற் பார்க்குங் கண்ணன்
கல்லெனத் திரளுந் தோளான் கருதலர் வணங்கு காலான்
வல்லெனப் புடைக்குங் கொங்கை மங்கையர் விரும்பும் வாகான்
செல்லெனக் கொடுக்குங் கையான் சிவனடிக் கன்பு செய்வான். (௩)

ஒருகுடை நீழ றன்னி லுலகெலாங் காவல் செய்வான்
சுருதியந் தணர்கற் றோர்தந் துயர்கெட நினைக்குந் தூயோன்
மருமலர் நிம்பத் தாரான் மனுமுறை தவறா வள்ள
றருமமும் புகழு மோங்கத் தனியர சியற்று நாளில். (௪)

மதிதவழ் புரிசைக் கூடன் மாநக ரந்த ணாளன்
முதியவன் விரதம் வேள்வி நியமங்கண் முயலு சீரான்
சதுமறை யிருமூன் றங்கம் வல்லவன் சார சீல
னதிகமாந் தவத்தில் வந்த கான்முளை யவன்பேர் சாரன். (௫)

ஓதியும் பலநூ லாய்ந்து மொழுக்கத்தி னிலைபே றுயுஞ்
சாதியில் வேட்டு மேன்மை தந்தையிற் சிறப்ப தாயும்
போதில்வாழ் விரிஞ்சன் மேனாட் பொறித்திடு விதியின் கோட்பாற்
றீதலா லாழ்ந்து மாயக் கணிகையர் வசத்த னானான். (௬)

மந்திர மறந்தான் கல்வி மார்க்கமு மறந்தான் செய்யுஞ்
சந்தியை மறந்தான் வேத சாத்திர மறந்தான் சூழ்கும்
புத்தியை மறந்தான் வேட்ட பூவையை மறந்தான் வேள்விச்
சிந்தையை மறந்தான் றாயைத் தந்தையை மறந்து திரிந்தான். (௭)

சாரசி லன்கு மாரன் மிகத்துரா சார ஞகிச்
சோரஞு ஞனென் றியர்ருஞ் சொல்லுமக் கொடுஞ்சொ லென்று
மீரவா ணெஞ்ச கம்போழ்ந் திடுதலா லேக்கங் கொண்டே
யாரண வல்லோன் மாண்டான் மனைவியு மவன்போ லானுள். (அ)

பூசுரன் றேடி வைத்த பொருளெலா மழித்துப் பின்னும்
வேசையர்க் கீய வேண்டிக் காலிகள் றெல்லாம் விற்று
ஞசையாற் றன்போ லிவ்வா றலைபவ ரொடுகூட் பாகிப்
பாசமாம் பங்கு விற்றுன் மனையையும் விற்றுன் பாவி. (கூ)

உள்ளன வெல்லா மீந்தான் கொடுக்கவே றுறுதி காணுன்
றள்ளருங் காமப் பித்தந் தலைக்கீடாய்த் தனைச்சு ழுற்ற
கள்ளிரு டன்னிற் சென்று நகர்மனை தொறும்பு குந்து
கள்ளத்தாற் கிடைத்த தெல்லாங் கவருநா டன்னி லோர்நாள். (க0)

புரவல னகர்சோ திக்கப் போந்தனன் கங்குற் போதி
லொருமனை யகத்திற் சார ஞெதுங்கிின் றற்ற நோக்கித்
திருடிஞன் கண்டு கொண்டார் துரத்திஞர் சிதறி யோடி
வருகையிற் கள்வ னென்றே துணித்தனன் வழுதி வாளால். (கக)

பிடித்தது பிரம கத்தி பெருந்தகை கலங்கி நெஞ்சந்
துடித்தனன் சென்றுன் கங்கை யாடிஞன் றெலைந்த தில்லை
முடித்துயிர் குடிப்பே னென்ஞு முழக்கமாய்த் தொடர வஞ்சி
யடித்தலஞ் சேப்பப் பன்ஞு ளலைந்தன னவனி யெங்கும். (கஉ)

உருக்கொடு முன்னே நிற்கு முறுக்கிவா ளெயிறு காட்டும்
வெருக்கொள விழித்துப் பார்க்கு மேல்விழுந் தலறி யார்க்கும்
பொருக்கென வெழவு மொட்டா தோடிஞற் போக வொட்டா
திருக்கவு மொட்டா திவ்வா றிடைந்தனன் றுயிலு மில்லை. (கங)

கண்டதோர் கோயி லெல்லாங் கைகுவித் திறைஞ்சி வீழ்வான்
கண்டதோர் தீர்த்த மெல்லா மாடுவான் பேறு காணு
னண்டர்நா யகனே யென்ன குறைசெய்தே னடியே னென்பான்
கொண்டமெய் வருத்தந் தீரக் கோபிதார் வனத்தில் வந்தான். (கச)

வருந்திய வழுதி வந்து கோபிதார் வனத்திற் றன்கால்
பொருந்திய வுடனே விட்டுப் போயது பிரம கத்தி
திருந்திய வுளத்த ஞகிச் சுமைக்கனந் தீர்ந்தா ஞகி
யிருந்தன ஞத்தி நீழ லீரிரு யடிகை மட்டும். (கரு)

வேறொரு புதுமை தேடான் மெய்யரு ளிதெனக் கண்டான்
றேறினன் பிரமகத்தி தீர்ந்தது திண்ண மென்பா
னறணி சடையான் காட்டு மதிசய மிக்குண் டென்றே
தூறணி செடிக டோறும் வனமெலாஞ் சுற்றிப் பார்த்தான். (கசு)

உலாவினன் செறிய னந்த வனத்துக்குத் தரம தாகப்
பலாமகிழ் கடம்பு சூதம் வயின்வயி னெல்லாம் பார்த்தா
னிலாவுமிழ் மலர்ப்பூம் புன்னை நெருக்கத்தை நீக்கிச் சென்றான்
கலாமதி மிலைந்த வேணிப் புராதன விலிங்கங் கண்டான். (கஎ)

சிவசிவ மகேச கங்கா தரதிரு நீல கண்ட
தவளமால் விடையீ சான தற்புரு டாவ கோரா
கவிலரும் வாம தேவ சத்தியோ சாத நாயேன்
பவவினை யொழித்த சம்பு மலைமகள் பரித்த பாகா. (கஅ)

வெள்ளிவெற் பிமகே தாரங் காசிகா ளத்தி வேளூர்
தள்ளருந் தில்லை யண்ணா மலையாரூர் குடந்தை சண்பை
யொள்ளிய நாவல் காஞ்சி யொற்றியூர் மருது சேடை
கள்ளவிழ் கடம்பு தன்னின் மகிழ்வுகொல் புன்னைக் கானம். (கக)

பன்னகப் பள்ளி மாயோன் வராகமா யிடந்து பார்த்து
மன்னமாய் விரிஞ்சன் றேடிப் பார்த்துஞ்சற் றறியா யின்று
மென்னையே புரக்க வேண்டி யிங்கெழுந் தருளப் பெற்றேன்
புன்னைநன் னீழல் வைகும் புரகர போற்றி போற்றி. (உ0)

போற்றியென் றிறைஞ்சி வீழ்ந்து புளகமெய் பொடிப்பக் கண்ணீ
ரூற்றிருந் தொழுகி யோட வுவகையங் கடலுண் மூழ்கி
நீற்றனைப் பரமா நந்த நிமலனைக் கருத்துட் பூட்டி
வேற்றுணர் விலன்றி யானித் திருந்தனன் வேந்த னங்கு. (உக)

புரவல பிரம கத்தி போயதித் தலவி சேடந்
திரமுறு சூல தீர்த்தப் புனலபி டேகஞ் செய்து
பரமென வருச்சித் தேத்திப் பதங்களிற் பணிந்தாற் கேட்ட
வரமெலாந் தருவ மென்ன வெழுந்தது விண்ணில் வாக்கு. (உஉ)

தொனித்தமை செவியிற் றுக்கத் துணுக்கென வெழுந்தி தேதோ
தனிப்பெருங் கானந் தன்னுண் மனுவுண்டோ சத்தங் காட்டக்
கனித்திருக் கொவ்வை வாயாள் கணவன்கா ரணமீ தென்றே
நினைத்தைய நீங்குமுன்னே தோன்றிற்று நிறைநீர்க் குட்டம். (உங)

ஈதன்றோ சுகன வாணி யியம்பிய சூல தீர்த்த
மாதலா லெமக்குப் பேறு கிடைத்ததற் கைய மில்லை
பூதலத் திடருந் தூர்க்கித் தலமலாற் புகலு மில்லை
மாதொரு பாகங் கொண்ட வரதனே சரண மென்று. (௨௪)

புன்னையே கடம்ப தாகப் புரந்தரன் றானே யாக
மன்னிய சூல தீர்த்த மாதங்கக் கஞ்ச மாக
முன்னவ னும்பூ மீசன் முதல்வன்சொக் கேச னாகத்
தென்னவன் பூசை யாற்ற வொருப்பட்டான் செயல்வே றின்றி. ()

கண்ணகன் ஞாலந் தாங்குந் தோளுடைச் செழியன் கங்கைப்
புண்ணிய தீர்த்தம் போலுஞ் சூலதீர்த் தத்திற் போந்து
நண்ணிய புனலுண் மூழ்கி நவிலுமைந் தெழுத்தைப் பற்றி
வெண்ணிறப் புனிதபூதி விதிமுறை சாத்திக் கொண்டு. (௨௬)

புனிதனைச் சூல தீர்த்தப் புனலின்மஞ் சனம தாட்டிப்
பனிமல ரறுகு பூளை பச்சிலை பிறவுஞ் சாத்திக்
கனிபல பறித்து வைத்துக் கசிந்துள முருகி நின்று
நனிமகிழ் கூர்வ தாகத் தோத்திர நவில்வ தானுன். (௨௭)

உம்பரா லறிய வொண்ணு வொருதனி முதலே போற்றி
யிம்பரா ருயிர்போ லென்பா லெய்திய வைய போற்றி
யம்பரா வனைய தாகக் கொண்டெயி லட்டாய் போற்றி
யம்பரா பரனே பூமி நாதனே போற்றி போற்றி. (௨௮)

விடமமு தாக வுண்ட விண்ணவர்க் கிறைவா போற்றி
வடவரை குழைய வாங்கும் வரிசிலை யவனே போற்றி
படவரா வமளி யானு மறியொணாப் பரனே போற்றி
நடனஞ்செய் சிதனே பூமி நாதனே போற்றி போற்றி. (௨௯)

தஞ்சமென் றடைந்த வேத மிருகண்டு தனயன் றன்னை
யஞ்சலென் றவனுக் காக வுருத்தெழுந் தலறி வீழ
வஞ்சகக் கூற்றைக் காலா லுதைத்தமா தேவ போற்றி
நஞ்சணி கண்ட பூமி நாதனே போற்றி போற்றி. (௩௰)

அக்கனே கயிலை யானே யம்பலக் கூத்த னேபெண்
பக்கனே திருக்கா ளத்திப் பரமனே யால வாயிற்
சொக்கனே புன்னைக் காட்டிற் றோன்றிநின் றென்னை யாண்ட
நக்கனே சிவனே பூமி நாதனே போற்றி போற்றி. (௩௧)

பூமிநா யகனே போற்றி போற்றியென் றேத்தி நின்ற
தேமலர் நிம்பத் திண்டோட் டென்னவற் கருள் வேண்டிக்
காமனை யெரித்த நெற்றிக் கண்ணுடை யண்ணல் பெண்ணோர்
வாமபா கத்த னாகி விடையின்மேல் விரைவின் வந்தான். (௩௨)

வேறு.

சடையுந் தவளப் பிறைக்கொழுந்துந் தழற்கண் ணுதலு மானுமழுப்
படையுங் கரமுங் கறைமிடறும் பணிக்கச் சிறுக்கும் புலியதளி
னுடையுந் திருநீற் றுத்துளமு முமையா ளொருபா கமும்வெள்ளை
விடையி லமரும் பரனழகைக் கண்டான் வழுதி விழிகுளிர. (௩௩)

தொழுவன் குதிப்ப னடமிடுவன் சூழ வருவன் முடிதாழ்த்தி
விழுவன் விழியிற் புனலுகுப்பன் வியர்த்து மேனி புளகமெழ
வெழுவன் சிவனே சிவனேயென் றிருகை தலைமேற் குவித்திடுவன்
மழுவன் முகம்பார்த் தையவொரு வரமீ யென்று வழுத்திடுவன். ()

பையா டரவ மரைக்கசைத்த பரமா சுடலைப் பொடிபூசு
மெய்யா பொய்யா வரங்கொடுக்கும் விமலா தொல்லை வினைப்பயனு
லையா வகையென் றனைப்புரந்த நம்பா பூமி நாதாவெ
னையா வடியேன் சீவன்முத்தி யணையும் படிதந் தருணீயே. (௩௫)

மாண்டா ரலதா ரிருந்தார்கள் வாழ்வு மரசும் போதுமினி
வேண்டா வென்று வேட்கையிது கேளாய் விண்ணோர் பெருமானே
ஆண்டா விளக்கே சுடர்மணியே துன்பக் கவலை தவிர்த்தென்னை
யாண்டா யடியேன் சீவன்முத்தி யணையும் படிதந் தருணீயே. (௩௬)

வெம்பா தகத்துக் கிடமாக்கிப் பாசத் தளையின் மிகப்பூட்டும்
வம்பார் புவியிற் பிறந்துபிறந் துழன்று திரிய மாட்டேனையா
னம்பா பரிதி குடிநாடா நக்கா பூமி நாதாமா
லம்பா வடியேன் சீவன்முத்தி யணையும் படிதந் தருணீயே. (௩௭)

அருணீ யெனலுங் காமாரி யரசே யஞ்சேல் கேட்டவரந்
தருவே மெமக்குச் சினகரமுஞ் சமைப்பித் திந்தத் தலத்தின்மலர்த்
திருவார் புரமொன் றுண்டாக்கிச் சிறப்பித் திங்கு நீங்காம
லிருநீ யென்னப் புகன்றுமின்னின் மறைந்தா னென்று னியற்குதன்.

பாண்டியன் பிரமகத்திதீர்த்த சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௧௨௬.

## முத்திமாநகரச் சருக்கம்.

சொன்ன மொழியாற் சௌனகனும் வினவுந் தவத்தோய் துகடீர்ந்த
தென்னன் றனக்குப் பேறுகிடைத் ததுகொ லென்னத் திகழ்சூதன்
பின்னு நெடுங்கான் றுணித்துவள நகரம் புதுக்கிப் பெருங்கோயில்
புன்னை நிழலாற் கியற்றிமுத்தி யடைந்தா னென்றான் புகலுவான். (க)

ஆழ்ந்த பிறவிக் கடல்வீழா தருணீ சிவன் முத்தியென
வீழ்ந்து பணியு மவ்வளவில் விடைமே லுமையா ளுடன்றோன்றிந்
தாழ்ந்த சடையா னுறுதிமொழி புகன்று மறையத் தளர்வகன்று
சூழ்ந்த கவலை யொழிந்தோட வெழுந்தான் வழுதி துணுக்கென்ன. ()

துண்ணென் றெழுந்து வனமகன்று துகடீர்ந் தொருசீ றூர்புகுதக்
கண்ணென் றுமிலார் தமக்குவிழி கிடைத்தா லென்னக் களிகூர்ந்து
தண்ணென் றியவேம் பணிவழுதி தனைக்கண் டவ்வூர்ச் சனமெல்லா
நண்ணு மிறும்பூ துடனடியில் வீழ்ந்து பணிந்தார் நனிகூடி. (ங)

தன்னை யிறைஞ்சும் பைஞ்ஞாலந் தனைப்பார்த் திந்தத் தலத்துள்ளீர்
முன்னை வினையாற் பிரமகத்தி மூண்டு புவியிற் றிரிந்துழன்றே
னென்ன திடரை மாற்றியெனக் கெதிராய் நிமல னிவ்வனத்திற்
புன்னை யடியி லிருக்கின்றா னென்ன வழுதி புகன்றிருந்தான். (ச)

மறையோற் செகுத்த பழியாலே பதிவிட் டகன்று வனம்போய
விறையோற் கண்டேங் கண்டேமென் றெவரும் பகரு மொழிவழியே
முறையாற் பணியு முடிவேந்த ரமைச்சர்கிளைஞர் முதியோர்கள்
குறையாக் கடலந் தானையுடன் வந்தான் மதுரைக் கோமைந்தன். (ரு)

கூட்டிற் றருமன் கவர்ந்தவுயிர் திரும்பி வருமக் கொள்கையெனப்
போட்டுத் தேடும் பொருள்கடலிற் கிடந்து கரத்திற் போந்ததென
மீட்டுத் திருமால் சாந்தபனிக் களித்த மகவின் வீறென்ன
வாட்டத் துடன்வை கியகுமரன் கண்டான் பயந்த வாள்வேந்தை. ()

கண்டு பணியு மகவையிரு கரத்தா லெடுத்தான் மோந்தணைத்தான்
தெண்ட னிடுமன் னவரமைச்சர் சேனைத் தலைவர் யாவரையுங்
கொண்ட கருணைப் பார்வையினா னோக்கி யுவகைக் கொழுந்தோட
வண்டு படியுந் தார்மார்ப னிருந்தா னமைச்சன் வழுத்துவான். (எ)

தன்னாணை மையினாற் பகைதடிந்து தாய்போ லுலகந் தனிகாக்குந்
தென்னா தருமப் பயிரோம்பு நீயி லாத செழுமதுரை
யின்னா ளளவுங் கமலமிலாத் தடமா மதியி லாவிசும்பா
மின்னார் சுடரில் லாமனையாச் சான்றோ ரில்லா வீணவையா. (அ)

தயங்கிச் சனங்கண் மழையின்முகங் காணாப் பைங்கூழ் தானாகி
மயங்கிப் பசித்துத் தாயின்முகங் காணா மதலை யதுவாகிப்
பயங்கொ ளுளத்த ராய்வாடும் வாட்டங் கழியப் பாவொளியால்
வயங்கு மணிப்பூண் மன்னவனே வருக நகர்க்கு வருகவென்றான். (௯)

மாற னமைச்சன் பகர்ந்தவுரை கேட்டுக் களித்து மதிவல்லோய்
கூற வரிய கொடும்பாவஞ் சூழ்ந்து வெருட்டிக் கோட்படுப்பத்
தேறா வகைகா ணாமலெங்குந் திரிந்தேன் பாற்றுஞ் செயல்காணே
னாறு மலர்ப்பூம் புன்னைநிழ லிருந்தான் புரக்க நமதீசன். (௧0)

கரிய மிடறுஞ் செஞ்சடையுஞ் சங்கக் குழையுங் கண்மூன்று
மெரியு மழுமா னணிகரமும் புலித்தோ லுடையு மெழின்மார்பும்
பெரிய முலைச்சிற் றிடைத்துவர்வாய்ப் பெண்ணா ரிடப்பா கமுமெதிரே
தெரிய விடைமேல் வந்துவினை போக்கி யெமக்குத் திருவாக்கால். ()

இக்கா னகத்தை வெளியாக்கிப் புரமுண் டாக்கி யெமக்கெழிலா
மிக்கா லயமு மியற்றிப் பூசை விழாநடத்திற்
றிக்கா ரறிய நீவேட்ட பரிசே தருவேஞ் சீவன்முத்தி
மைக்கார் படிதண் டலைமதுரை மன்னா வென்றான் மறைந்திட்டான்.

ஆகை யாலித் தலமதுரை யாமிச் சிவனே சொக்கேச
னாக வனமே கதம்பவனஞ் சூல தீர்த்தம் பொன்னளினந்
தோகை யிடத்தான் பணித்தபணி தணிவே னல்லான் மறுப்பதிலை
யேகு முமதூர்க் கினிநீவி ரென்றான் வினையை வென்றானே. (௧௩)

குரிசி லறிய மதியமைச்சன் கூறா நினது கோமைந்தற்
கரசு நிறுவித் தமிழ்மதுரைக் கிருத்த வெனவேந் ததற்கிசைந்து
பரிசின் மறையோர்க் குதவிமணிப் பைம்பொன் முடிசூட் டினனவ்வூர்
வரிசை தரவே யின்னுமுடி மன்னர் கோட்டை யாயதுவே. (௧௪)

கோமைந் தனைமார் புறத்தழுவி யுச்சி மோந்து விடைகொடுத்தான்
மாமந் திரிசே னாதிபர்க்கு மன்னர் தமக்கும் விடைகொடுத்தான்
பூமின் வளரு மதுரையிற்போய்ச் சிங்கா தனத்திற் பொலிந்தேறி
நாம வடிவேற் காளைசெங்கோ னடத்தி யரசு புரிந்திருந்தான். (௧௫)

வேறு.

மைந்த னேகிய பின்ப ராக்கிரம வழுதி யாகிய பழுதிலான்
புந்தி யாற்றிரு வஞ்செ ழுத்தும் விபூதி யும்பொரு ளாமென
வந்த மால்விடைப் பூமி நாதனை யந்தி சந்தி யிறைஞ்சியே
யெந்தை யாரருள் செய்த வண்ண மியற்று வேனென வெண்ணியே.

மாடி றைஞ்சிய சிலதர் தங்களை வமினெ னுவய லூர்ப்பெருங்
காட டங்க முருக்கி நூறி யதிற்றி ருப்பதி காண்குவ
னூடு றுந்தொழி லவரை யழையுமி னெனவி ளம்பலு நன்றெனு
வோடி யங்கவர் வருக வென்னலும் வந்து கூடினு ருவகையால். (௧௭)

நவிய மேந்தின ரொள்ளி லைக்கொடு வாளு மேந்தினர் நவையிலாக்
கவையு மேந்தினர் தடியு மேந்தினர் கவணு மேந்தினர் காலினிற்
றுவட ருங்கழ லொடுபொ ருந்திய காடு தாங்கியுஞ் சூழவே
புவன மன்னனை வந்து கண்டடி போற்றி னர்பணி சாற்றெனு. (௧௮)

வந்த வர்க்கடை காய்ப டீரம் வழங்கி மன்னன் மகிழ்ச்சியோ
டிந்த முட்பொதி யடவி தன்னிலிவ் வெல்லை மட்டெறி வீரெனச்
சுந்த ரச்சுடர் மணிய தாகிய சோதி பாத மிறைஞ்சியே
பந்த முற்றுயர் காடெ லாந்தொழி லவர்க லந்து டரந்தனர். (௧௯)

பரும ரங்களை விழவெ றிந்தனர் துணிகள் வேறு படுத்தின
ரருகு துன்றிய வனமெ லாங்கொடு வாளி னுல்வெளி யாக்கினர்
மருவு முட்பொதி மாறு தூறுகள் கவையி னுலயல் வாங்கினர்
தெரிய வேசுழி பலகு வித்தன ரெரிம டுத்தனர் சிதைதர. (௨௦)

காட்டை வெட்டி விசால மாவெளி கண்ட பின்கன மாயுயர்
மேட்டை வெட்டி யெறிந்து தாழ்வு நிரந்தொ ருப்பட மேவினர்
காட்டை யன்பொடு காத்த கொற்றவ னகர முந்திருக் கோயிலும்
பேட்டை தெற்றிகண் மடமு முள்ளன பெரிதி யற்றுதல் கருதியே.()

அங்க மாறு முணர்ந்த சிற்ப விசித்ர மாந்தொழி லறிவுளோர்
தங்கள் வாண்முக நோக்கி யன்பொடு வழுதி பண்ணவத் தபதிகா
ளங்கண் மாநிலத் தரிய வாகவோர் பதிவ ளம்பெற வாக்கிவெண்
டிங்கள் சூடிய நம்ப னுக்கொரு சினக ரஞ்சமைப் பீரெனு. (௨௨)

சேலி னுலுயர் கொடியி னுனுரை செய்த வெல்லை வுரைக்குமே
கோலி னுலள விவுள வென்று குறித்த ளந்து சிறப்பினுற்
காலி னுனெடு மால ளந்த புவிக்கு ளிப்பதி கவினெனு
ஞாலி னுலுயர் தபதி கண்டன னிறைவி யப்பொடு நோக்கவே. (௨௩)

சொன்ன நான்மறை யந்த ணாளர் தமக்கு வேறு தொகுத்தனன்
மன்ன ரானவர் தங்க ளுக்கு மகிழ்ச்சி காண வியற்றின
னின்னி லம்புகழ் வசிய ருக்கு மிலக்க மின்றி யமைத்தனன்
மன்னு பின்னவர் மற்றை யோர்க்கும் வகுத்த னன்றிரு மனைக்ளே. ()

மாட மும்பல நாஞ்சி லும்பல மன்ற மும்பல குன்றுபோன்
மேடை யும்பல கூட மும்பல வீதி யும்பல வேதிகைக்
கூட மும்பல தெற்றி யும்பல சாள ரம்பல கோதைய
ராட ரங்கமு மூன்றி லும்பல வதுல மாகிய பதியிலே. (உரு)

கடவு ளாயிர மும்மை யாரிலொ ருத்த னுமெனுங் காரணந்
திடம தாகிய புனித நான்மறைத் தில்லை யந்தணர் தங்களி
னடன தேசிகன் பெரும்பற் றப்புலி யூர்ச்சி தம்பர நம்பியண்
மடமு டன்பல மடங்க ளும்மய னினிதி யற்றினன் வண்மையால். ()

சதுர்ம றைப்பயில் சாலை வேள்விசெய் சாலை சத்திர மண்டபங்
கதிர்ப ரப்பிய கூல மாளிகை கவின ளப்பில வாதலான்
மதிகு லத்திறை பிறைம திச்சடை வரன ளித்த வரத்தினுன்
முதுந கர்க்கிடு பெயரி யற்றினன் முத்தி மாநக ரென்னவே. (உஎ)

அந்த முத்தி புரத்து நாப்ப ணலர்ந்த புன்னை நிழற்குளே
முந்த வுற்றவ மாய ரும்பி முனைத்தெ ழுந்த பரஞ்சுடர்
சிந்தை யிற்பெரு மகிழ்ந்து ளங்க முடித்த னன்றிருச் சினகர
மிந்தி ரற்கருள் செய்த வற்கவ னிடுவி மானமி தென்னவே. (உஅ)

மீன கேதன னிடப கேதன விண்ண வர்க்கருள் சினகரம்
வான மேமுதல் வைத்த தூவி வரைக்கு முள்ள வருக்கமா
யான வச்சிர மரக தம்வயி டூரி யம்பல வணிபெறத்
தான மூத்தி யிழைத்தி டுங்கன கத்த கட்டொளி தழையவே. (உகூ)

பத்தி ரிப்பு வகுப்பி டைக்கிடை பாந்தி னிற்குட பஞ்சரஞ்
சித்தி ரத்தியல் கன்ன சாலை செழுங்கு டஞ்சிறு போதிகை
யுத்தி ரங்கொள் கபோத கம்பிற வுத்தி ரஞ்சிக ரத்துட
னத்த மண்டப மிக்க மண்டப மாறு காற்றரு பீடமும். (௩0)

சுற்று நீண்மதில் சிகரி யெதிர்விடை துவச நிலைபலி பீடமு
மற்று முள்ளன சிவதி ருப்பணி வழுவி லாது முடித்தபின்
கற்றை வார்சடை யவன லாதொரு தெய்வ மில்லெனக் கருதியே
நற்ற யாவொடு பூசை வகைவகை குறைவ ராது நடத்தினன். (௩௧)

சந்நி திக்கெதி ராக வேயொரு தரும தாவரப் பிள்ளையுஞ்
செந்நெல் வளமலி யேரி யின்றலை தெக்கி ணத்தினி லையனும்

பன்ன கப்பணி யண்ணல் வெந்நிடு பச்சி மத்திசை குமரனு
மன்னு முத்தி புரத்தி னுத்தர மருவு பைரவி குமரியும். (௩௨)

இந்த வண்ண மமைத்து முத்தி புரத்தி னுக்கெழி லாகவே
சந்த தங்கயி ரவச ரோருக நீர ருத தடங்களுங்
கொந்து லாமல ரடவி யும்பல குவளை யுற்பல வோடையுங்
கந்தி தெங்கு வருக்கை மாவுயர் காவு மீக்கொளுங் கதலியும். (௩௩)

பலவ ளங்கள் சுரக்க வும்மிசைப் பாணர் பாடல் கலிக்கவுங்
குலவி மாதர் நடிக்க வும்மு சரசின் மறுகிடை குமிறவு
மலகி றருமமு மனையி லவரவ ரன்ன தான வழக்கமு
முலகி லுயர்பதி முத்தி மாநக ரொத்த மாநக ரில்லையே. (௩௪)

மன்னு கற்பக முள்ள வைகலும் வாச மாகிய நீரதா
னன்ன யப்புல வோர்க ளாலெழில் சேர ரம்பை நலத்ததா
லிந்நி லத்தமு துதவு சுரபி யியற்கை யால்வலி யிந்திரன்
பொன்ன கர்க்கிணை முத்தி மாநகர் புவியி லிணைநக ரில்லையே. (௩௫)

மரக தம்வயி ரேரி யங்குரு மணிசெ ழுந்துகிர் வச்சிரந்
தரள நீல முடன்க வுத்துவ மிலகு கோமே தகமெனும்
விரவுமணிதன ராசி துசு மிகுந்து பெட்பின் விளங்கலாற்
றரணி தனிலுயர் முத்தி மாநகர் தனதன் மாநகர் சிவனுமே. (௩௬)

முத்தி மாநக ருடி லங்கு முழுப்ப ரஞ்சுட ராகிய
வத்தி யின்னுரிப் போர்வை யானையெம் மானைநிம்ப வலங்கலான்
பத்தி யொன்ற வணங்கி நற்பல பரிச னங்களு முதவியே
சித்தி ரந்திகழ் நவம ணித்திருத் தேர்வி ழாவு நடத்தினன். (௩௭)

திங்க ளானி விசாக நாட்டிருத் தேர்ந டந்த சிறப்பினன்
மங்கை பாகன் மகிழ்ச்சி யாயிறை தன்னை வேண்டிய வண்ணமே
யெங்க ளுயகன் பரிதி குடிநாட் டிலகு நாயக னிமையவர்
தங்க ளுயகன் சிவன் முத்தி கொடுத்த னன்சக மறியவே. (௩௮)

கொவ்வை வாய்மட மங்கை பங்குறை குன்ற வில்லுடை யெம்பிரான்
பௌவ வெணடிரை பொங்கு நாண்மன மஞ்சி முறையிடு பஞ்சவன்
கௌவை தான்கெட நகரை மூவிலை வேலி னேந்திய தாயபிற்
செவ்வி தாவிடுத் தருளி னனைச் சூத மாமுனி செப்பினன். (௩௯)

முத்திமாநகரச்சருக்கம் முற்றிற்று.

---

ஆட திருவிருத்தம் ௧௮௫.

# திரிசூலபுரச்சருக்கம்.

பகரு மொழியாற் சவுனகமா முனியை நோக்கிப் பயிறத்தோய்
நிகரி லுவரிப் பெருக்கிலா னெடுமூ விலைவேன் முனைக்கேந்தி
நகர முழுதுங் காத்திறையைப் புரந்தா னென்னு நற்காதை
புகரி லாமல் விளம்பெனலுஞ் சூத முனிவன் புகழ்ந்துரைப்பான். ()

தலையிற் குளிர்செந் தமிழ்ப்பழகித் தவழ்ந்து மலர்ப்பூந் தாதாடி
யலையும் புனலாட் டயர்மகளி ரளகத் தகர வகிற்றூம
மூலையிற் கலவை மணங்கமழுந் தடங்க டோய்ந்து முன்றிறொறு
மலயச் சிறுகால் விளையாடும் பேரூர் முத்தி மாநகரம். (௨)

குரம்பூ டிரைதேர் குருகினந்தங் கருவீ தென்னக் குறித்தணைய
கரும்பூ டலர்ந்த கமலமிதழ் குவிய வுழவர் தெளிகலக்கும்
பரம்பூ டொதுங்கு முதிர்தருஞ்சூற் குடக்கூன் பணிலந் தவழ்ந்தேறி
வரம்பூ டுகுத்த மணிநிலவு வளரு முத்தி மாநகரம். (௩)

மாமா திருக்க மலர்ந்தசெந்தா மரையா முத்தி மாநகரிற்
கோமான் கோமா மறையோர்பல் லுயிர்கட் கணுகுங் கோளகற்றி
யாமா மெனத்தன் விழிக்கிமைபோற் காக்குங் கருணை யன்புடையோ
னேமா சலத்திற் செண்டுகயல் பொறிக்கும் புகழி னியன்மாறன். (௪)

அறிவிற் பணிவேந் தேமாப்ப வருளிற் றருவு மலமலப்பப்
பொறையிற் றரணி மகள் வியப்பப் பொற்பிற் கரும்பன் புறங்காட்ட
முறையிற் றனியா ழியைச் செலுத்திப் பகையைத் தடிந்து முடிவேந்தர்
திறையிட் டிறைஞ்சுங் கனைகழற்காற் றென்ன னவனிந் திரத்தும்நன்.

எப்போ திலுந்த னுயிர்போன்மன் னுயிரைக் காக்கு மியல்புடையோ
னெப்போ ரரசரின்றிமனு முறையா லுலகந் தனையாள்வோ
னப்போ லிடுஞ்செஞ் சடைமௌலிப் பூமி நாத னடிக்கமல
முப்போ திலும்வீழ்ந் திறைஞ்சிமணி முடிமேற் சூடு முனைவேந்தன். ()

உரக வரசு பொறுத்தநிலம் பொறுத்துக் குவடோ ரிரண்டாகத்
திரளும் புயத்தான் மதிமரபி னுயர்கோ மகனிந் திரத்தும்நன்
தரணி தழைக்கப் புகழ்தழைக்கத் தருமந் தழைக்கத் தனியாழி
யரசு செலுத்தி வருநாளிற் கடைநா ளெய்திற் றந்நாளில். (எ)

அண்ட முகடு பிதிர்வனபோ லதிர்ச்சி பிறந்து செவிடுபட
மண்டு திரைநீர் கரைகடந்து பெருகிப் பரந்து மலிந்தநவ
கண்ட மனைத்தும் புதைப்பதென வருத லறிந்து கறைமிடற்றுத்
துண்ட'மதிச்செஞ் சடைப்பூமி நாத னடியே துணையென்று. (அ)

பதறிப் பதறி விரைந்தோடி நிலயப் படிவா சலில்வீழ்ந்து
கதறிக் கண்ணீர் வழிந்தொழுக வழுது புரண்டு கசிந்துருகி
விதனத் துடன்மெய்ம் மறந்தறிவு மயங்கித் தயங்கி வெய்துயிர்த்துத்
திதலைக் களப முலைத்துவர்வாய் பாக மகலாத் தெள்ளமுதே. (கூ)

பொன்னே மணியே புலராத பூவே நந்தாப் புதுமணமே
மன்னே கருணைப் பெருங்கடலே மறுவி லாத முழுமதியே
மின்னே ரிடைக்கொவ் வைத்துவர்வாய்க் கொடிக்காம் பவள மெய்க்
தன்னே ரில்லாத் தற்பரமே தானே முளைத்த தனிமுதலே. [குன்றே

மேனு ளமது குலவேந்தர் விதித்த கனகச் சினகரமோ
நானு விதமாம் பலசிறப்போ நாலை மறைக்க மறைபடுமே
வானுள் குலிசன் திருநெடுமால் விரிஞ்சன் முதலோர் மடிந்திடினு
மானு வருமைத் திருமேனிக் கனியோ புனற்கு ளமிழ்ந்துவதே. (கக)

பாரோர் வியப்ப வரசியற்றும் பண்போ நண்போ பலவளமை
யூரோ வூரிற் பசுங்குடியோ வுறவோ கிளைஞ ருற்றூரோ
தேரோ களிறோ பாய்மாவோ சேனைக் கடலோ நீங்கொழிப்பா
ராரோ விதெலாம் வீணுமோ வமலா சிறியே னறியேனே. (கஉ)

உரத்துப் பெருக்கா யிரமுகத்துக் கங்கை யொடுங்கு மொளிர் சடை
றரிக்க நினைக்கிற் சிவனேயிப் புனரி சடைக்கு ளொடுங்காதோ [மேற்
புரத்தைப் பொடியாக் கியநகையிப் புனலைச் சுவற்ற மாட்டாதோ
வருத்திக் கலச முனியைமுன்போல் வாரி பருகென் மருளாயோ. ()

என்னப் புலம்பும் புலம்பலுக்கா யிரங்கிப் புவனே சன்செழியன்
முன்னர்த் தோன்றி யரசேசீ யஞ்ச லென்று முத்திபுரந்
தன்னைப் பிலத்து றெறப்போர்த்துச் சுடர்மூ விலைவேற் றலைக்கோத்திப்
பின்னைக் கிறைகுன் றேந்தியபோ னின்று னகரம் பிறழாமல். (கச)

சகல வசர சரங்களுக்குந் தானு மொருவ னெடுத்தேந்த
முகிலை யளந்து மூவிலைவேன் முனைமீ திலங்கு முத்திபுர
மகில நகர்க ளனைத்தையும்வீ றடக்கி யமரர் பொன்னகரோ
டிகலி விசையம் பெறவுமருங் கெழுந்த தாகுந் தகைமைத்தே. ()

அடியு முடியுங் காண்குறமா லயனே னமுமா யன்னமுமாய்ப்
படியும் விசும்புந் தேடியின்னுங் காணக் கிடையாப் பரஞ்சோதி
வடிவ முழுதுஞ் செழியனுக்குக் காட்சி கொடுத்து மாநகரை
நெடிய சூல முனைக்கேற்றி நின்றான் பெருநீர் நிலையளவாய். (கசு)

சுரந்து ததும்பிக் கரைபுரண்டு சோரா தெழுந்து புவியடங்கப்
பரந்து வரைக டனைப்புதைத்துப் பெருகும் பௌவப் பெருநீர்த்தங்
கரந்து வடிந்துள் ளடங்கியபின் பூமி நாதன் கைதவனைப்
புரந்த வடிவான் முன்போல விடுத்தா னதனாற் சூலபுரம். (கஎ)

கடுத்துவருநீர்ப் பெருநீத்தம் பரந்த கலிப்புங் கறைமிடற்று
னடுத்துக் காட்சி கொடுத்ததுவுங் கண்டா னல்லா னணிநகர்பேர்த்
தெடுத்த தறியா னந்தரமா நின்ற தறியா னிருநிலத்தில்
விடுத்த தறியான் முன்போல விருந்தான் றுவச மீனவனே. (கஅ)

வெள்ளச் சடையான் புரிந்ததிரு விளையாட் டனைத்தும் பார்க்குதமெ
றுள்ளக் களிப்பு மீதூர வந்தான் றிருமா லுவணமிசை [ன்
வள்ளக் கமல மலரயனுஞ் சிறையோ திமத்தின் மீதுவந்தான்
விள்ளற் கரிய விருடிகளும் வந்தார் வந்தார் விண்ணோரும். (க௯)

வந்து சிவனார் திருவிளையாட் டனைத்து நோக்கி யடிவணங்கிச்
சிந்தை மகிழ்ந்து திருநெடுமா லிருந்தான் பதிக்குத் தென்மேற்கிற்
கந்த மலரிட் டிறைஞ்சிவழி படுவே மென்னக் கருதியர
விந்த மலர்மா ளிகைவேதன் வடபால் வில்வத் தினிலிருந்து. (உ0)

தனது பெயரா லொருதீர்த்தம் விதித்து நறுந்தண் புனலாடிப்
பனக வணியான் றனைவிதியிற் பூசையாற்றிப் பரவிநின்று
கனக வரைவில் லுடையவனே கயிலைப் பொருப்பி லுபதேசஞ்
சனகர் முதனால் வர்க்கருளும் பரனே சரணஞ் சரணமென்று. (உக)

கடைநாள் வெள்ளத் தமிழ்ந்தாமற் கதிர்மூ விலைவேன் முனைக்கேற்றி
யடைவே நகரைக் காத்தருளுன் விளையாட் டெவரே யறிவார்கள்
விடையா வீர மழுப்படையா விமலா நிமலா விரிந்தபுனற்
சடையா விரும்பிக் கேட்டவரந் தரவே தகுநீ தமியேற்கே. (உஉ)

வேண்டு மதுகே ளென்பெயரால் விதித்த புனித வியன்மடுவுட்
காண்டங் தனின்மூழ்கி னர்மூழ்கக் கருதி னோர்க ளிவரெல்லா
நீண்ட பிறவிக் கடல்கடந்து சிவசா ரூப நிலைபெற்றுப்
பூண்ட பதசத் தியலோகத் திருத்த வேண்டும் புரகரனே. (உங)

பரமா வெனலும் விண்ணிலெழுந் தொனிபூங் கமலப் டண்ணவனே
பிரம தீர்த்த மித்தலத்தின் வியப்பா மிதுவே பிரயாகை [ம்
திரமாப் படிந்தோர்க் கெப்பதமுங் கொடுக்கு மெனத்தன் செவிபுகலு
வரமீ தெனப்போய்த் தன்னுலகத் திருந்தான் சுருதி மறையோனே.()

பொங்கார் கலியான் மனுமுதன்மன் பதைக ளிறந்து போயபின்னர்ப்
பங்கே ருகத்தான் மன்னுயிரைப் படைக்கச் சிவனுர் பணித்தபடி
செங்கோ னடாத்தி முத்திபுரத் திருந்த திறலிந் திரத்தும்நன்
மங்கா முறைமை மனுவரசு புரிந்தான் வைவச் சுதனெனவே. (உடு)

கண்டங் கரியான் வெண்ணீற்றன் கடுக்கைச் சடையான் சடைக்கிண
துண்ட மதியான் மதிமரபில் வந்தோன் றனக்காச் சுருட்டுதிரை [ங்கு
மண்டு புனலான் முத்திபுர மமிழ்ந்தி யழியா வகைகாத்துத்
தொண்ட ரிறைஞ்சத் திரிசூல புரத்தி லிருந்தான் சுடர்வடிவாய். ()

சூல புரத்திற் றனைப்பணியுந் தொண்டர்க் கெளியன் றுனை
நீல மிடற்றுப் பரஞ்சோதி நீத்த விடங்க னெனும்பெயரால்
வால மதிநன் னுதலிமுத்து மாலை யுமையா ளுடன்மருவிச்
சீல முனிவர் மறையோர்கள் போற்ற விருந்தான் றேவர்பிரான். (உஎ)

ஈது தவிரப் பின்னர்நெடுங் கால மிறந்தீ றெய்துதலு
மோத நெடுநீர் பரந்துலக மழியா வண்ண முமைபாகன்
போத வடத்தான் கடல்பிலத்து ளடங்கச் சுழித்துப் புவிகாத்த
நீத வழுதி தனைப்புரந்தா னென்றுன் றரும நெறிச்சூதன். (உஅ)

## திரிசூலபுரச்சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - உகங.

---

## பிரளயஞ்சுழித்த சருக்கம்.

இவ்வாறுரை செய்யச்சவு னகன்மாதவர்க் கிறையே
வெவ்வாய்மழுப் படையான்கடல் வெள்ளம்பரந் துலகை
வெளவாவகை பிலத்துறுறச் சுழித்தானெனு மகிமை
யெவ்வாறது புகலென்னலுஞ் சூதன்னெடுத் துரைப்பான். (க)

முன்னுமொரு காலந்தனின் மொழியும்பல வளமைப்
பொன்னுர்திரு மனையாகிய நகர்முத்தி புரத்தி
னன்னுக நிழற்சோதித னளினப்பதம் போற்று
மின்னுர்மணி முடியான்கதிர் வேலான்கொடிச் சேலான். (உ)

ஒருவாசக மல்லான்மறுத் துரையான்கொடை வரையான்
குருமாமணிப் பூணுன்மதி குலத்தானுயர் பலத்தான்
பொருமாரனுக் குயர்வாகிய பொற்பான்றமிழ் வெற்பான்
செருமாவுகைத் தமரார்பகை செற்றான்கலை கற்றான். (௩)

புலியுஞ்சிறு மானுந்துறை யொன்றிற்புன லுண்ண
வெலியும்பட வரவும்பகை யில்லாம லிணங்க
கலியுங்கிளி யுங்கங்கமு மொருகூட்டிடை நண்ண
மலியும்புகழ் மனுநீதி வழாமற்புவி யாள்வோன. (௪)

அறிஞர்க்குறு புகலாய்மெலிந் தடைந்தோர்க்கொரு துணையாய்
வறிஞர்க்கிரு நிதியாய்மரு வலருக்கெறு ழரியாய்க்
கறுவிப்புறு மனிதர்க்குறு கலிபோல்வளர் பகையாய்
நெறியிற்செலு நிகரின்றிய நீராணிம்பத் தாரான். (௫)

பொன்னங்கிரி தனிலன்றுயர் கயல்செண்டு பொறித்தோன்
முன்னம்புரு கூதன்கதிர் முடிமேல்வளை யெறிந்தோன்
றென்னன்கவு ரியன்மீனவன் செழியன்றமி ழுடன்
மன்னன்னவன் பெயர்வண்புகழ் வளர்சந்திர சேனன். (௬)

வயலூருறை திருமாலறி யாமுக்கண் மருந்தைப்
புயலூர்தரு பொழின்மூத்தி புரத்திற்பழம் பொருளைக்
கயலூர்தடம் பணைச்சூல புரத்திற்செழுங் கனியை
மயலூருமைக் கிணங்குஞ்சுடர் மணியைத்தினம் பணிவோன். (௭)

நித்தந்திரி சூலத்தட நீரன்பொடு மூழ்கி
மெய்த்தொண்டு திருந்துந்திரு வெண்ணீறு புனைந்து
சித்தந்தெளி யைந்தக்கர முறையிற்றெரிந் தோதி
யத்தன்புவ னேசன்பதம் பணிவானைய ராமல். (௮)

துயில்போதிலு மடவாரொடு துவள்போதிலு மெதுவும்
பயில்போதிலும் பலவாய்மொழி பகர்போதிலுந் தரும
முயல்போதிலும் புனலாட்டயர் முப்போதிலு மெய்ப்பாக்
கயிலாயனைப் புவனேசனை மறவான்கன விலுமே. (௯)

பரமன்னவர் திறைதந்து வணங்கிக்கழல் பணிய
விரதங்கரி பரிசேனை யிறைஞ்சிப்புடை சூழ
மரபின்புர வலர்விஞ்சையர் மதிவல்லவர் வாய்ப்ப
வரியாசனத் திருந்தேபுவி யாள்சந்திர சேனன். (௧0)

சிவதாழ்வட மும்பூதியுஞ் சிவவேடமுங் கண்டா
லிவனேசிவ னெனவெண்ணுவ னிறைஞ்சும் வழிபாட்டாற்
புவனேச னடிக்கன்பதெப் போதும்பிரி யாம
லுவர்ார்கலி யுலகிற்புரி யாசிற்புக ழுறுநாள். (௧௧)

வே று.

சில மிகுத்த தாரபதி சந்திர சேன னெனுந்திறலோன்
சால மகிழ்ந்தம ரேச னெனும்படி தானர சின்புறுநா
ளால மெழுந்தது போல வெழுந்துயிர் யாவு மொழிந்திடவே
ஞால மிசைந்தம ரோததி பொங்குறு நாளு மெதிர்ந்ததுவே. (௧௨)

குரைகடன் மண்டல மரசுசெ யுஞ்சசி குலபதி யன்புடனே
விரைகம ழுங்குழ லரிவையு டன்திரு விழிதுயி லும்பொழுதே
யொருகன வங்குறு கொடுமையி லஞ்சியு ளுருகி நடுங்கியா
பரமதி கம்பர சிவசிவ வென்றுடல் பதறி யெழுந்தனனே. (௧௩)

வஞ்ச முறத்திசை யெங்கு மறப்படை வந்து வளைக்கவுமே
யஞ்சி யொருத்தரு மின்றி மலைக்கவு மங்கொரு வித்தகனு
ரிஞ்சை யெனப்பொடி கொண்டு விலக்கவும் வெம்படை பொய்க்கவு
மஞ்சலி லிச்செயல் கண்டு கிழத்தி துளங்க வுரைத்தனனே. [மே

கேட்டு மடக்கொடி தேற்றுவ ளக்கணி நீற்று மதிச்சடையார்
தாட்டுணை யைப்பணி வார்க்கு நிலத்திடை தாழ்ச்சி வர்த்தகுமோ
வேட்டித ழிப்புவ னேச னமக்குள னேக்கமெ னெற்கிறையே
வாட்ட மொழித்தரு டக்கன விற்கவல் வாட்ட மொழித்தருளே.(௧௫)

என்று நுடங்கிடை யொண்டொடி வஞ்சி யிறைஞ்சி யியம்புதலு
மன்றி னடம்புரி யும்பர மன்செயல் வண்மை யறிந்தவரார்
கன்று தெளிந்து தணிந்திட வஞ்சொ னவின்றனை யென்றிறையோ
னன்று துயின்றபின் வந்தது செங்கதி ரந்தமும் வந்ததுவே. (௧௬)

மகர நெடுங்கடல் குமிழி பரிந்தன வடவை யொடுங்கினவே
ககன மதிர்ந்தன கயல்குதி கொண்டன கதறி யிரைந்தனவே
பகர வருந்திரை துகிர்தா ளம்பல பணில மெறிந்தனவே
மொகுமொ கெனுந்தொனி திசைக ளளந்தன முழுமணி சிந்தினவே.()

திரைபல கொண்டன விசைகொ டுயர்ந்தன திடர்கண் மறைந்தனநீள்
கரைகள் கடந்தன திவலை மிகுந்தன கயல்கள் துளங்கினவா
லுரைகள் பரந்தன புவன மடங்கலு நுகர நினைந்தனவா [ழேவ.
யிரைவதி லண்டர்கண் முனிவர் பயங்கொள வெழுகடல் பொங்கிய

வரவர மேற்கொள வயின்வயின் வாய்த்தது மனிதர்கள் கூக்குரலே
பெருமலை போற்பல திரைகொடு நாற்றிசை பெருகின நீத்தமுமே
மரகத மாத்திகழ் முழுநிற வாய்ப்பினள் வடதிசை பார்த்துறைவாள்
பரவையி னுர்ப்பினை விரைவொடு நோக்கினள் பைரவி கிட்டிலைசயே.()

உகமுடி வுகமுடி வெனவுரை குளறியு முளறுவர் சிலர்சிலரே
யுகமுமி னகமுமி னகமுமி னெனவுரை யறைகுவர் சிலர்சிலரே
பகர்மனை மகவினை நினைவிற வுறவுடல் பதறுவர் சிலர்சிலரே
செகமிசை யினிமறு புகலிலை யரகர சிவவெனு மவர்சிலரே. (உ0)

பூவுல கத்திகழ் தாமரை யிற்புனல் போல மயங்குறவே
தீவினை வந்து குலாயது சந்திர சேன னறிந்துடனே
யாவி தளர்ந்தய கோகன வின்றுமெய் யாக விளைந்ததுவே
சேவில் வருஞ்சிவ னேதுணை யென்றிறை தேறி யெழுந்தனனே.(உக)

தேடிய திரவிய மாமணி யணிதுகி றேர்மத கரிபரிமா
நாடிய நகர்கிளை சேனைக ளவையுமிந் நாண்முடி வுறுமெனுமோர்
நீடிய கவலையி னுல்வர வொடுநெடு நேரமெய் யுணர்விலவாய்
வாடியு ளுருகியு மாபதி சினகர வாய்தலி லணுகினனே. (உஉ)

வந்து பணிந்து விழுந்து புரண்டு வணங்கி யெழுந்தயர்வாய்ச்
சிந்தை கலங்கி மலைந்திரு கட்புனல் சிந்தி வழிந்திடவே
புந்தி மயங்கி நடுங்கி யிருங்கடல் பொங்கிய தென்புகல்வே
ணிந்தணி யுஞ்சடை நம்ப சரண்சர ணென்று புலம்பினனே. (உங)

வேறு.

தொண்டினுல் வழிபடுந் தொல்லைநூல் வல்லமார்க்
கண்டனுக் காகவே கருணையிற் றோன்றியச்
சண்டனுர் வல்லுரந் தகர்வுறத் தாக்கிய
புண்டரீ கப்பதப் பூமிநா தாசரண். (உச)

சங்கரா சரண்முழுச் சைவனே சரண்மழுச்
செங்கரா சரணரண் செற்றசெல் வாசரண்
வெங்கரா சலவரிப் போர்வைமெய் யாசரண்
பொங்கரா வணியணி பூமிநா தாசரண். (உரு)

தொனியுடன் பிரளயஞ் சூழ்பெருக் காயதா
லினிமறு புகலிலை யெந்தைநின் சரணலாற்
பனிமதிக் கலைபகீ ரதிதிகழ் படர்சடைப்
புனிதனே சிவசிவ பூமிநா தாசரண். (உசு)

பலியிரந் துண்டவெம் பரமநா தாசர
ணொலியலைக் கடல்விட முண்டநா தாசரண்
மலிபுனற் செறிவய லூரில்வாழ் வாய்சரண்
புலிபதஞ் சலிதொழும் பூமிநா தாசரண். (உ௭)

அருப்புமுல் லைநகை யன்னமென் னடையிப
மருப்புவல் லார்முலை மங்கைபங் காசரண்
கருப்புவில் லான்றனைக் காய்ந்தநா தாசரண்
பொருப்புவில் லாசரண் பூமிநா தாசரண். (உ௮)

வேறு.

சரணெனப் புலம்பி மாழ்குஞ் சந்திர சேனற் காகத்
திருவுள மிரங்கிக் கோட்டுத் திங்களங் கண்ணிப் பெம்மான்
குருவடி வாகிச் சிங்க நாதமுங் குழையுஞ் சங்கு
மருவுகைப் பிரம்புங் காவித் துகிலுமா யோடி வந்தான். (உ௯)

உகமுடி வதனுக் கஞ்சி யுய்யவென் றோடி வந்த
பகவநீ யாருன் னூர்பே ரேதெனப் பார்த்து மாற
புகரிலிவ் வயலூ ரெம்மூர் புகழ்பட வாழ்ந்த நம்மைச்
செகமெலா மறியு மென்பேர் திருமேனி நாத னென்பர். (௩0)

நரபதி யஞ்ச லென்று சூலத்தின் முனையை நாட்டிப்
பெருவெளி யாக்கி நாலு திக்கினும் பிலத்தைக் கண்டு
திருநுதல் விழியின் றீயைச் செலுத்தியே நடந்து சென்று
குரிசின்மா ளிகையவ் வெள்ளக் கோட்படா வேதுச் செய்தான். (௩௧)

செங்கையிற் பிரம்பி னாலே கோலினன் விடருட் சேர்க்க
வங்கமழ் புகுந்த தோய மனைத்தையுஞ் சுழித்து வாங்கிப்
பொங்கிய நீத்த மெல்லா நிமிடத்திற் பிலத்துட் போக்க
வங்கதா மவிடங் கௌவைக் கடலெனச் சிறந்த தன்றே. (௩உ)

அவ்வழி யமலன் மானு மழுவுமுக் கண்ணு மாழி
வெவ்விடக் களநூன் மார்பும் வேணிவெண் பிறையுங் காட்டிக் [றித்
கொவ்வைவாய்த் துணைமா லைப்பெண் கொடியுடன் விடைமேற்றோன்
தெவ்வடு வேலாற் குள்ள நடுக்கமும் பிறப்புந் தீர்த்தான். (௩௩)

முத்தினாற் பச்சை யாற்செம் மணிகளான் முழுநீ லத்தால்
வித்துரு மத்தா லக்க மணியினால் வெவ்வே றான
சத்திரம் பலநி றுற்ற வுபயசா மரையி ரட்ட
வத்தன திருபா லும்பொன் னாலவட் டங்கு லாவ. (௩௪)

வாணனோர் குடமு ழாவெண் வலம்புரி கறங்கு மோசை
சேணுள வெழுந்து விம்மத் தேவதுந் துமிமு ழங்க
வீணைமா முனிவர் சித்தர் விஞ்சைய ருரகர் போற்றக்
காணொணு வடிவந் தன்னைக் கைதவன் மகிழ்ந்துகாண. (கூரு)

புங்கவர் தலைவன் வந்தான் புரமெரி மடுத்தான் வந்தான்
சங்கரன் வந்தான் சைவ சமயவே தாந்தன் வந்தான்
திங்களஞ் சடையான் வந்தான் திருமேனி நாதன் வந்தா
னெங்குமா நிறைந்தான் வந்தா னென்றுபொற் சின்ன மூத. (கூசு)

தாமரைக் கூண்ண ணோரா யிரங்கண்ணன் றருமெண் கண்ணன்
றேமலர் தூவி யங்கம் புளகெழச் செங்கை கூப்ப
மாமறை முனிவர் வாழ்த்த வடியவர் வணங்க விண்ணோர்
பூமழை பொழியச் சென்றான் கோயிலுட் பூமி நாதன். (கூஎ)

பெருகியே வருமு காந்தப் பிரளயப் புனல்பா தாளத்
தொருகணப் பொழுதி னுட்போ யொழிந்திடச் சுழித்த லாலே
கருணையெம் பெருமான் கௌவைக் கடலது சின்ன மாகத்
திருநகர்க் கினிய நாமந் திருச்சுழி யாயிற் றன்றே. (கூஅ)

கதித்ததோ ருவரி பொங்குங் காலமங் கெதிர்ந்த தாற்பண்
டுதித்தநாண் முதலா யென்று முத்தரம் பார்த்த கன்னி
கொதித்தபே ரொலியைக் கேட்டுக் குணதிசை திரும்ப லாலே
யிதத்தகீட் டிசையை நோக்கி யிருக்கின்றாள் காண வின்னும். (கூகூ)

தவளமா றுரைகள் சிந்திச் சாகர மெழுந்து பொங்கிக்
கவுரியன் மனையை வந்து கவருமுன் புவன நாதன்
றுவட்ரு பிரம்பாற் கோலிச் சுழிதரப் பாய்ச்சி நின்று
னவிடமே கடலுட் பாய்ச்சி யெனும்பெய ராய தன்றே. (சO)

கருணையங் கடலார் பொங்குங் கடற்கெதி ராகிநின்ற
திருவடி நிலையிற் றென்னன் சிவலிங்கந் தாபித் தன்பால்
வருதிரி நயன தீர்த்த மென்றொரு தீர்த்தம் வாய்ப்பத்
தருவமாம் பூசை செய்தான் சோமசே கரனென் றேத்தி. (சக)

கண்ணுதல் பிரம்பாற் கோலி விடுக்கவ்வைக் கடலுண் மூழ்க
வெண்ணுவார் படிவார் மூழ்கி யெதிர்வரு மவரைக் காண்பார்
மண்ணவ ரன்றே செய்த தீவினை யனைத்து மாற்றி
விண்ணவ ராத றிண்ண மதற்கினை வேறு மில்லை. (சஉ)

சோதியன் றமைக்குத் தந்த சூலதீர்த் தத்தின் பாங்கர்த்
தீதிலாத் தெய்வக் கவ்வைக் கடலெனச் சிறந்த தீர்த்த
நீதியிற் பனிரண் டாண்டுக் கொருமக நிறைநீ ராகப்
பேதியாக் குடந்தை வாவி தன்னினும் பெருமைத் தாமால். (௪௩)

கண்ணுதல் வழுதிக் காகக் கடல்புக விடுத்த மாகத்
தண்ணுடு மகத்திற் சான்ற யாண்டுக டொறுமெ ழுந்து
மண்ணுளோர் வியப்ப மூழ்கு மாந்தர்தம் பவங்க ரந்து
நண்ணலாற் புனித தீர்த்த மெவற்றினு நலமி தாமால். (௪௪)

கரதலா மலகம் போல விவ்வணங் கருணை செய்த
புரகரன் சுழியன் மூதூர்ப் புண்ணியன் பூமி நாதன்
பரவியே தன்னை யேத்திப் பணியுமோ ரிருடிக் காகச்
சுரநதி யழைத்தா னென்று சொல்லிடூற் சூதன் சொன்னான். (௪௫)

பிரளயஞ்சுழித்தசருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - உ௫அ.

## பாவகரிநதிச்சருக்கம்.

ஈதுகேட் டுவகை பொங்குஞ் சவுனக னினிது நோக்கி
வேதமா தவநீ கூறு மேன்மையால் விருப்ப முற்றே
னாதனே ரிருடிக் காகச் சுரநதி யழைத்த நன்மை
யேதென வேட்டுக் கேட்பச் சூதனங் கிசைப்ப தானான். (௧)

வேறு.

கற்றை கற்றையாய்க் கிளைத்ததை மகுடம்போற் கட்டிச்
சுற்றும் வேணியன் மெய்யெலாந் துவண்டவெண் ணீற்ற
னுற்ற மார்பின்முந் நூலினன் மரவுரி யுடையன்
குற்ற மில்லதோர் காட்சியன் குண்டலக் குழையன். (௨)

ஆக மம்புரா ணங்கலை கல்வியி லதுலன்
யோக சாதனை பலபல வியற்றிய வுருவன்
யாக மாயிர மாயிர முடித்ததோ ரியல்பன்
சாக மூலங்க ளருந்திப்பின் கானுகர் தவத்தன். (௩)

அக்க மாலிகை முடிகளங் கரத்தணி யணியன்
செக்கர் மேனியன் கக்கத்திற் பொக்கணச் சிறப்பன்
மிக்க குண்டிகை தருப்பைமுக் கோல்வெதிர் கையன்
முக்க ணன்பதம் பணிகவுண் டின்னிய முனிவன். (௪)

சிவன லாதிலை யினியொரு தெய்வமு மில்லை
சிவன லாதமுத் தொழிற் றிறஞ் செலுத்துந ரில்லை
சிவன லாலடி யவர்க்கருள் செய்குந ரில்லை
சிவன லான்மறு புகலிலை நமக்கெனத் தெளிந்து. (ரு)

திருத்த னார்திரு வருளினாற் கதியது நிலைக்கு
மருத்தி யாகியைம் புலனையு மொருமுக மாக்கி
வருத்தி யாக்கையைத் தவவுப வாசத்தால் வாட்டக்
கருத்தி லெண்ணியெங் ஙனமிதற் இடமெனக் கவன்று. (சு)

ஆர ணத்தினும் புராணபே தத்தினு மமல
கார ணத்தினும் விசேடமித் தலமெனக் கண்டு
கார ணற்கரி தாயடி யவர்க்கெதிர் நண்ணும்
வார ணத்துரிப் போர்வையான் சுழியலில் வந்தான். (எ)

புரமுஞ் சோலையும் புண்ணிய விருக்கமும் பூந்தேன்
மருவு லாம்புனற் றடங்களு மாடமா ளிகையுந்
தெருவு நீடொலிப் புணரியுஞ் சிகரகோ புரமும்
பரம மாமுனி கண்டுளங் களித்துடன் பணிந்தான். (அ)

தாயி னுந்தய வுடையவன் கடவுளர் தலைவன்
கோயில் வாயில்வீழ்ந் தடிபணிந் தெழுந்தகங் குழைந்து
காய காதிருச் சுழியலின் மேவிய நம்பா
நீய லான்மறு புகலிலை யெனத்தவ னினைந்து. (கூ)

நின்றெ ழுந்தனன் றெக்கிணக் குணதிசை நெறியே
சென்றி ரண்டுகு ரோசத்தி லளவையிற் சிறப்பாய்த்
துன்று தண்டலை கண்டன னிவிடமே சுதல
மென்று ளங்களி கூர்கவுண் டின்னிய விருடி. (க0)

குருக லம்பிய வோடையுந் தடங்களுங் குறுகி
யருகு துன்றிய வனங்களுங் கண்டுகண் டறிந்து
மருவி யெங்ஙனந் தவம்புரி வோமென மனத்திற்
கருது முன்னர்க்கா மீச்சுர விலிங்கத்தைக் கண்டான். (கக)

கண்ணு றுமுன மெமக்கெதிர் சுழியலெங் கடவு
ளண்ணி ஞனினி யெண்ணிய வண்ணமே கனுக
திண்ண மாமெனும் பெருங்களிப் புடன்றிரு மேனிப்
புண்ணி யாவெனப் பணிந்திசைந் தான்றவம் புரிய. (கஉ)

வருந்தி யித்தலந் தனிற்பதி னாயிர வருட
மிருந்து மெய்த்தவம் புரிந்திருஞ் சுழியலி லெம்மான்
றிருந்து சேவடி காண்குது மெனவுளந் தேறி
யருந்த வக்கவுண் டின்னியன் விருப்பினி லாங்கே. (௧௩)

ஆட்டி னன்கழ லிணைமிசை யாவகை யகத்துட்
பூட்டி னன்சிவ யோகச மாதிகள் புரிந்து
மூட்டி னன்றழ லையகத் திடைத்தவ முயன்று
வாட்டி னானுட றன்னையை யாயிர வருடம். (௧௪)

தொடங்கு மாகுதி செபதவ நியமத்தின் றொகையா
னடங்கொள் சேவடி யானருள் வேண்டி மங்காளி
லிடங்கொண் மாநிலத் தினிலெடு நாண்மழை யின்றிக்
கிடங்கு மோடையும் வரண்டது புனல்கிடை யாமல். (௧௫)

வாவி யும்புன லொழிந்திடக் குளங்களும் வறப்பக்
கூவல் யாவையு மூறிய பெரும்புனல் குறைய
மேவு மன்பதை புனலரி தாமிக மெலியத்
தாவில் சிந்தையிற் பழங்கணுற் றனனருந் தவத்தோன். (௧௬)

மின்செய் நுண்ணிடைக் கொவ்வைவாய்ப் பெண்மணி விளக்கே
பொன்செய் மாளிகைத் திருச்சுழி யலிற்பழம் பொருளே
முன்செய் தீவினை யிம்மையில் வந்துமுற் றியதோ
வென்செய் வேனினி யிவ்விடை யூற்றினுக் கெளியேன். (௧௭)

ஈரை யாயிர வருடமெய்த் தவத்தினுக் கிசைந்தே
னீரை யாயிர மாயதவ் வளவுள தின்னுந்
தாரை யாய்மழை பொழிவதென் றோதமி யேற்கு
நீரை யார்தரு வாருனை யல்லது நிமலா. (௧௮)

கார மில்லெனிற் சிவனு மில்லையே நார்க்கு
நார மில்லெனிற் புனிதமு மில்லையே நாளு
நார மில்லெனிற் செபதவ மில்லையே நாட்டி
லூர மில்லெனி லெவ்வண முய்வலை நம்பா. (௧௯)

தெரிந்த சிந்தையிற் றலவிசே டங்களைத் தேர்ந்து
சொரிந்த பூம்பொழிற் சுழியலி லணுகினேன் சோதி
பரிந்துன் பாதமே கதியெனப் பரவினே னாளும்
புரிந்த நற்றவ மனைத்துமவ் வினுகவோ புனிதா. (௨௰)

இனியுன் மேற்பழி சுமத்துவன் சுமத்துமு னெந்தாய்
புனித மாநதி வரவழை யெனமுனம் போத
வினிய னாகயான் வேண்டிய நதியுதல் கென்றான்
முனிவர் யாரினு முயலவொண் ணுத்தவ முயன்றான். (௨௧)

உள்ளு மாயதிற் புறம்புமாய்ச் சராசரத் தூடே
யெள்ளு மெண்ணெயும் போற்கலந் தெங்கணு மிருக்குந்
தள்ளு நீர்ச்சடைச் சுழியரு ளகன்மகிழ் தூங்கி
விள்ளொ ணுத்தவ மிதுவெனத் திருவுளம் வியந்து. (௨௨)

புரியு மவ்வயூர் தவங்கள்யா வையினுமிப் புவியி
லரிய தாயதோர் தவமியற் றினனென வறிந்து
வரிய ராவுடன் மதிக்கொழுந் தணிசடை மௌலிக்
கரிய மாமிடற் றான்முனிக் கருள்செயக் கருதி. (௨௩)

பான்மு கத்தவெண் ணீற்றினன் சுழியலிற் பரமன்
றேன்மு கத்தபைங் கடுக்கையஞ் சடைமுடி திகழும்
வான்மு கப்பகீ ரதியிலோர் சிறுதுளி வழங்க
நான்மு கப்பெரும் பூதரந் தலையதா நண்ணி. (௨௪)

இலங்கு நான்முகப் பொருப்பெலாம் பொதிந்துகீ ழிறங்கி
விலங்கு பட்சிக ளொடுத்துயர் மரங்களை வீட்டிப்
பிலங்கொள் வேகமா யிரந்தலை யெறிந்துபெம் மானை
வலங்கொள் வாரெனக் கீட்டிசை நோக்கியே வந்து. (௨௫)

குடக்க தாதியா வந்தநீ ரெந்தைகோ யிலுக்கு
வடக்க தாகிப்பின் றெக்கிண வாகினி யாகிச்
சடைக்க வுண்டின்னி யன்னிருப் பிடஞ்சமீ பித்து
வடக்கு நோக்கிநீள் சமுத்திர காமினி யாகி. (௨௬)

கள்ளங் கொண்டபுன் மதத்தர்நெஞ் செனக்கொடுங் கானிற்
பள்ளங் தொண்டுவெண் டிரையெறிந் தெதிர்ந்த பானீய
வெள்ளங் கண்டனன் கண்டனன் கதியினி மெய்யென்
றுள்ளங் கொண்டனன் சிவன்செய லீதென வுவந்து. (௨௭)

மிடியி னுழனெடு நாளிடைக் கிடமெலிந் தவர்க்குப்
படியி னுட்பொதி நிதியது கிடைத்தபான் மையதா
வடிய வர்க்கெளி யவனருட் கங்கைநீ ராடி
நெடிய வேணியன் மகிழ்ந்தனன் புரிந்தன னிருத்தம். (௨௮)

நீடு வான்புன லெய்திய களிப்பினு னிருந்த
மாடு வான்குதிப் பான்குதித் தயலெலாஞ் சூழ
வோடு வானுடல் புளகெழ வுமாபதி புகழைப்
பாடு வான்றிருச் சுழியலை நோக்குவான் பணிவான். (உக)

இன்ன தன்மைய னாகிய முனிவர னெதிரே
கன்னல் வில்லியைக் கருக்கிய விழிமலை வில்லி
புன்னை நீழலிற் புலிக்கெலா நீழலா யிருந்தான்
மின்னி னுண்ணிடை யாளுடன் றோன்றினன் விடைமேல். (ஙO)

வேறு.

வாலவெண் பிறையும் பொறிப்பட வரவும் வனைந்தகோ டீர மும் குழையு, நீலகந் தரமு மழுமறி யபய வரதமுந் திமிர்ந்தவெண் ணீறும், பாலலோ சனமு மார்பின்முந் நூலும் பவளவாய் முறுவ லும் பரனார், கோலமுங் கண்டான் றன்மனத் திருந்த கோட்டமும் வாட்டமுந் தீர்ந்தான். (ஙக)

வாடிய பயிர்க்கு வருமழை முகில்போல் வருந்தியே பசித்தழ மயங்கித், தேடிய குழவிக் கெதிர்வரு தாய்போற் றிருச்சுழிப் பரஞ் சுடர் தோன்றி, நாடிய கௌண்டின் னியமுனி வரற்கு நகைமுகக் கருணைமீ தூர, நீடிய பழங்கண் டீர்தரத் திருவாய் மலர்ந்திவை புகன் றன னிமலன். (ஙஉ)

சகமிசை யெவரும் புகலுதற் கரிய தகைமையிற் றவமியற் றிய தான், மகிழ்தர விவ்வா றழைத்தன முனது பொருட்டினின் வந்த கா ரணத்தாற், பகர்தரு கவுண்டின் னியநதி யென்று நாமமிப் புனல் படி வோர்க்குச், சகலபா வமும்போ மாதலாற் பாவ கரியெனும் பெ யர்தரித் தனமால். (ஙங)

இந்நதி யுனது தவத்தரு மையினு லழைத்தன மித்தவம் வருட, மன்னிய பதினு யிரத்தொகை வரைக்கும் புரிந்தமா தவமென மகிழ் ந்தே, கன்னிலைப் பேறுந் தந்தனம் பெறுக வெனத்திருச் சுழியலை நாடிக், கன்னியங் காளன் கோயிலுட் புகுந்தான் கடவுளர் மலர்மழை பொழிய. (ஙச)

பாலுநற் றேனுஞ் சுவையெளி தன்றே பாலுடன் றேன்கலந் ததுபோற், சூலபா ணியனுர் விசேடமா விளங்குஞ் சுழியலெல் லைத் தலத் தூடே, யாலகந் தரத்தர் சடைப்பகீ ரதிக்குந் தணையிலெவ் வண் ணமாம் புனிதஞ், சாலுமப் பாவ கரிநதிப் பெருமை யாவரே சாற் றுறு நீரார். (ஙரு)

நதிகளிற் கங்கா நதியையே லாகப் புவியுளோர் நவில்வது வழக்கே
நதிதனும் பாவ கரிநதிப் பெருமை யாவரே கணித்திட வல்லார்
புதியமென் பஞ்சுக் குவடெனக் குவித்த குவியலிற் புகுகன லதுபோ
லதிகவெம் பாவம் யாவையு கொடிக்கு ளரிக்குமிந் நதிபடிந் தாடில். ()

பெருகுநீர்ப் பாவ கரிநதி படிய நினைக்குமுன் போமனப் பீடை, வருபுன லதனைக் கண்டமாத் திரத்திற் கிரகதோ டப்பகை மாறு, மருகுசென் றிறங்கிப் புனலையுட் கொள்ளக் கொடும்பிணி யடங்கலு மகலு, முரிமையாய் மூழ்கிற் செய்தபெண் வதையந் தணர்வதை கோவதை யொழியும். (௩எ)

துங்கமாம் பாவ கரிநதிப் பெருமை பலபல வதிலொன்று சொல்கேன், சங்கினந் தவழுந் தடம்பணை மருங்கின் வரம்பெலாஞ் சரோருக மலர, வங்கதற் கிடையே கயிரவங் குவளை யலர்ந்திடப் பசுஞ்செழுஞ் சாலிச், செங்கதிர் கதலிக் குலையின்மேற் கிடக்குஞ் செழும்புனன் மாளுவ தேசம். (௩அ)

அப்பெருந் தேச முழுவதுந் தனது தனிக்குடை நிழலி லடங்கப்
பப்பரர் குகுதர் மகதர் பாஞ்சாலர் துளுவர்தந் திறைகொடு பணியச்
செப்பருஞ் சேனைக் கடல்புடை சூழத் திருந்தர சியற்றிய திறலோன்
றப்புறழ் துவர்வாய் வஞ்சியர் விரும்பும் வடிவினன் சோமசீ தளனே.

உண்டதும் பூசிப் புனைந்தது முடுத்துச் சுகித்தது முறுதியென் றுரைப்பான், கண்டதே காட்சி யொழிந்தவை யெல்லாங் கனவினிற் கண்டபொ னென்பான், கொண்டதே கொள்கை மற்றவை யெல்லாங் குதர்க்கமென் றகத்தினிற் கொள்வான், மண்டலத் தெவரு நடுங்குறப் புரியும் வலியுலோ காயத மதத்தான். (௪0)

புண்ணியம் பாவ மிரண்டுள வென்பா ரவர்தமைப் புண்ணியம் பாவ, நண்ணிய படிவ மென்முனங் காட்ட ரென்றுகை கொட்டியே நகுவான், கண்ணிய நரகஞ் சொர்க்கமென் றுரைத்தீர் கண்டதார் கேட்டதா ரதையாண், பெண்ணெனுஞ் சாதி யிரண்டலாற் சாதி பிறிதிலை பிதற்றிவை யென்பான். (௪௧)

மறையவர் மகளி ராதியாக் குணுங்க மடந்தையர் வரைக்குந்தன் வலியாற், குறையது புரிவான் கற்புடை மாத ருயிரிழப் பினும்பயங் கொள்ளான், முறையது திறம்பிக் காமமீக் கொள்ளு முயற்சியா னவனுக்குக் கைலை, யிறைவனு மில்லை திருநெடு மாலு மில்லையெத் தேவுமே யில்லை. (௪௨)

தொலேவரு பவங்க ளிழைத்தத னுனும் பழிபல சுமந்தத னுனுங்
கலேமறை யவரை நிந்தித்த லானு மாதர்கற் பழித்தத னுனு
நிலேபெறு நரக மில்லெனு மவனுக் கிம்மையே நிரயத்தைக்கவ்டு
மலேவிறச் சோம சிதளன் றனக்கு வந்தது வெண்குட்ட ரோகம்.(சங)

தேசுறு பவளப் பொருப்பெனச் சிவந்த வுடலினி லிடமறச் சித
றுங், காசெனத் தடித்துப் பொறிப்பொறி யாகக் கறுத்ததிற் கண்
கணுய் வெடித்து, மாசுறத் தேக முழுதும்புண் ணுகி வரவர வெண்
ணிற மாகிப், பேசொணுச் சலமும் வழிந்தது செழியும் புழுக்களும்
பிறந்தன வன்றே. (சச)

உச்சிதப் பலத மருத்துவர் தமக்குக் கோடிபொன் னுதவியும்
வாரார், பச்சிலேச் சாறு தடவியுங் குடித்துந் தயிலங்க ளாற்குணம்
பார்த்து, நிச்சய மான விலேகியந் தின்றுஞ் சுண்ணங்க ணிறையவே
திமிர்த்து, மிச்சையாம் புகைகள் கட்டியும் வளர்ந்த தன்றிநோய்
தணிந்திட விலேயே. (சரு)

ஈமொது மொலென வேதனே பொறும விருகணு னீர்வழிந் தொ
ழுகத், தூமவா சங்கள் யாவையு மடக்கித் தூர்க்கந்த முதிர்ந்துமெய்
துளங்கு, ரோமவெண் புழுக்கள் பொதுபொலென் றுதிர வொருசெய
லின்றியுள் ளுருகித், தீமுக மெழுகாத் தவித்தற மயங்கித் தியங்கி
னுன் சோமசீ தளனே. (சசு)

தண்ணளி யில்லான் றனக்குநற் காலஞ் சார்ந்திடுந் தகைமையி
னுலே, பண்ணிய பவத்தா லிவ்வணை மானே மினியிவ ணிருப்பது
பழுதென், றெண்ணிய வெண்ண முடியினு முடியா தொழியினும்
புடவியெங் கணும்போய்ப், புண்ணிய நதிக ளாடுவான் றுணிந்தான்
புறப்பட்டான் புரவலர் பெருமான். (சஎ)

நகர்மணி மாடங் கிளேயர சியற்கை சகலமு மொருவியே நடந்து
பகர்தருங் கானிற் றமியனுக் கண்ட பதிகளி லேயமேற் றுண்டு [தா
தகுமன வயிரம் பிடித்துமெய் வருத்தம் பார்க்கிலான் றளர்வுட னடங்
னகநிறை கங்கைத் தெய்வமா நதியி னருகணேந் தானவ னெருவன்.()

கங்கைபா ரதிநீர் யமுனேகோ மதைபாஞ் சாலிகோ தாவரி கம்பை
பங்கமில் பெண்ணே நருமதை துங்க பத்திரை குண்டலி முகரி
சங்கவா கினிகா விரிபம்பை பரவை சரயுபிங் கலேவையை பொருனை
துங்கமாம் பாவ கரியெனச் சொல்லி மூழ்கினுன் சுரநதித் துறையில்.

விதியொடு புகழ்ந்து மூழ்கிய சொல்லைக் கேட்டனு மாளுவர் வேந்த
னதிகளிற் பாவ கரிநதி யென்னும் பெயருண்டோ வெண்ணிலந் நதியி
னதிசய முண்டா யிருக்குநா மங்கே செல்வதே கருமமென் றகன்று
பதிநதி வரைகள் பலபல கடந்து சென்றனன் பரிதிநன் னாட்டில்.(௫0)

தண்டலை யூடே வருக்கைமா கதலி பழுத்துகச் சண்பகங் கமழ,
முண்டகப் பொகுட்டி லனம்விளை யாடப் பவுரிகொண் டளியிசை
முரல, விண்டபைங் குவளை யோடையிற் குருகு பலபற வைத்தொ
னி மீறக், கண்டுகண் குளிர்ந்தான் மன்னவன் பாவ கரிநதிக் கரை
யிரு மருங்கும். (௫௧)

தெய்வமா நதியைக் கண்ணுறு முனமே நீங்கின சிந்தையிற்
கிலேச, மெய்யிதன் புதுமை யென்றெண்ணு முனமே தீர்ந்தது மெய்
யிலே வினை, மய்யர்வே தியரைத் தெரிசிக்கு முன்னே யகன்றது பய
ந்தரு தன்மை, பையநீ ரதனுட் படிந்திடு முன்னே போயது கொடும்
பிணிப் பாவம். (௫௨)

முடிந்தநா ளீதென் றெண்ணியே பழங்கண் ணூர்தரப் பெருமுடை
நாறி, வடிந்தசீ யொழுகுங் குருதிநீர்க் கிருமிக் குட்டமும் பொய்த்து
விண் மழைக்குட், டடிந்தென மறைந்து போய்விடப் பாவ கரிநதித்
தண்புன லூடே, படிந்திருங் கரையி லேறினன் சட்டை கழற்றியே
காணுறும் பணிபோல். (௫௩)

துன்பமே தரும்புன் மதத்தைவிட் டகற்றிச் சுழியலின் முளைத்
தெழுஞ் சோதி, பொன்பதம் பணிந்து பூதிமெய்க் கணிந்து புரகரா
பூமிநா யகனே, மின்பொலி சடையா யுன்பர மென்னைக் காத்தரு
ளெனவிடை கொண்டு, தன்பதி நோக்கி நடந்துசென் றிருந்தான்
மாளுவன் சோமசீ தளனே. (௫௪)

அந்நதிப் பெருமை மொழிவதற் கெளிதோ சுழியலிற் பரஞ்சு
டர் தனது, சந்நிதிக் கெதிராந் துறைமண லெல்லாஞ் சதாசிவ லிங்
கமா மாண்டே, நன்னலப் பூசை செபந்தவம் புரிந்தா ரவர்க்கில்லை நர
கமும் பிறப்பு, மூன்றுறு பிதிரர் கடனெலாந் தீரு மந்நதி யொருமு
றை மூழ்கின். (௫௫)

திரையெறி பாவ கரிநதிப் புனலிற் சித்திரை யையப்பசிப் பிறப்பு
மருவுமும் மாகம் பூணிச்சிகி கதிரை வாட்டுறு தினமரி வாரம்
விரவுதேட் சோம வாரமார் கழியின் விதிபாத மிவைகளின் மூழ்கிற்
கருதிய கருமம் யாவையும் பலிக்கு மவர்பெறு வதும்பர கதியே. ( )

கருமிடற் றவிர்செஞ் சடைத்திரு மேனிக் கண்ணுதன் முன்னொ ரு ஞான்று, தருமமுந் தவமு மொழுக்கமு மிக்க தகுநெறிக் கௌத மன் றனக்குப், பெருமயக் கான சாபமும் போக்கிப் பேரரு ணடன முங் காட்டித், திருமணக் கோலங் காட்டினு னென்றான் சூதனம் முனிவரர் தெருள. (௭)

பாவகரிநதிச்சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௪௫.

## கௌதமச்சருக்கம்.

கூறுதல் கேட்ட சவுனக முனிவன் குணிப்பிலாக் குணப்பெருந் தவத்தோய், நீறணி கடவுட் சுழியலெம் பெருமான் கோதமன் சாபமு நீக்கிப், பேறுள நடமுங் காட்டிப்பின் வதுவைக் கோலமுங் காட்டி யபெற்றி, தேறுத லாக வெமக்குரை யெனலுஞ் சூதனங் கோதுவான் றெரிந்து. (௧)

கற்றையஞ் சடையன் மரவுரி யுடையன் கவின்றரு பூதியுத் தூளத் தன், சுற்றுகோ வணத்தன் மார்பின்முந் நூலன் சோதிவான் முகத் திரு வழுக, னற்றவர் புடைசூழ் காட்சியன் மோன ஞானத்த னகலி கைகாத, னெற்றியில் விழியுங் கண்டத்திற் கறையு முளதெனிற் சிவ னெனு நீரான். (௨)

சீதமன் புனற்பா கீரதி மதிதா தகியணி செழுஞ்சடைப் பரமன் பாதமன் புடனே கருத்தினி லிருத்திப் பத்தியாற் றினந்தினம் பணி வோன், போதமன் பதைக்குத் தயவுட னிரக்கம் புரிந்தருள் புண்ணிய வடிவன், கோதமன் பலகா லமும்பல வழக்குங் கண்டேன் குணர்ந்த மெய்க் குரவன். (௩)

ஆதவன் பரித்தேர் தோற்றுமு னெழுந்தே யரும்புனற் கங்கைநீ ராடிப், பூதிமெய்க் கணிந்து நியமங்கண் முடித்துப் புராதனற் கருச்ச னை புரிந்து, மாதவர்க் கரசன் கோதம முனிவன் மருவுமாச் சிரமத்தி லிருந்து, காதலி யென்னு மகலிகை யுடனே கலந்தினி தொழுகுமக் காளில். (௪)

அகலிகை யெனுமா ணிளமுலைப் போக நலம்பெறு மருத்துவி னுலே மகபதி யிவளை யெவ்வணம் புணர்வ னெனமன மையலின் மூழ்கிப்

பகருமுனிவ னில்லினில் லாத சமயத்தைப் பார்த்தவ ணெய்தி
கிகரிலாக் கணவன் றன்னுருக் கொண்டு வந்தன னேரிழை யிடத்தில்.

வன்புடைக் குலிசப் புரந்தர னிழைத்த வஞ்சனை யறிந்திலள் வஞ்சி, யன்புடைத் தனது மகிழ்நனென் றிணங்கி யருநலந் தினைக்கு மவ் வளவின், மின் பொலி சடையான் வந்தனன் கண்டாள் வெருவி நின் றுளைய லொதுங்கித், தன்பெரும் பயத்தா லிந்திர னுங்கோர் பூனையா யோடலுந் தவத்தோன். (௬)

போகிநீ யேக லென்னலு நின்றான் புரந்தர புலைத்தொழில் புரிந்தா யானியா னுடலிற் பெண்குறி யயுத மாகவென் றுரைத்தலு மஞ்சி நாகநீ ணகரேற் கிப்பழி யெய்த ஞாயமோ புரத்தியென் றிரப்பப் பாகசா தனநிற் கவையெலாங் கண்க ளாயிர மாகெனப் பகர்ந்தான். ()

செல்லெனத் திகழுங் கருங்குழற் செவ்வாய்ப் பெருமுலைச் சிற் றிடைப் பேதை, மெல்லென வொதுங்கிக் கவன்றுள முருகி வெருவி யே நிற்பது பார்த்துப், புல்லென வருவோர் தங்களுக் கிணங்கிப் புணர்பொது மகளிரே போல்வாய், கல்லென நீபோய்க் கிடவென வெகுண்டு கௌதம னுரைத்திடக் கன்னி. (௮)

குறைவிலா வுனது வடிவின் வந்தான் குலிசனென் றறிந்திலே னிசைந்தேன், கறையிலா வெனது மனநிலை யைய நாடொறுங் கண்டுளே தெளிந்து, பொறையுட னதற்குத் தக்கசெய் யாம லிகழ்ந்து கல் லாகெனப் புகன்ற, வறிவிலா முனியே யிக்கொடுஞ் சாப மகல்வ தெந் நாளெனு மளவில். (௯

அருமறைத் தவத்தோன் புகலுவா னணங்கே யலைகட லுடுத்த மே தினியில், வருநெடுங் காலங் கழிந்தபி னயோத்தி மன்னவன் றசரத ராமன், கருணையி லிவண்வந் தெய்துவ னவன்காற் றுகள்படக் கன்னியாய் முன்னே, விரைவுடன் வருவை யென்னலுங் கல்லாய் வீழ்ந்தனண் மிதிலையின் பாங்கர். (௧௦)

புரந்தரன் சென்றான் பதிபுகுந் திருந்தான் பூங்கொடி கருங்கலாய்க் கிடந்தனள், கருந்தட நெடுங்கட் டிருந்திழை யென்னுங் கார்குழ லிகை லிகை வாக்காற், பொருந்திய வுளத்தா லறிவிலா முனியே யென்றவா சகஞ்செவி புல்கி, யருந்தவற் கதுவே சாபமா வுள்ள வறிவழிந் தாகமுந் தளர்ந்தான். (௧௧)

வே று.

புனலின் மூழ்குவ னியமங்கண் முடித்திடும் பொழுதோர்
நினைவு வந்துமீண் டோடியே படிவனந் நீரிற்
கனலை மூட்டுவன் வேள்வியாற் றுவன்மறு கருத்தாப்
புனலை விட்டவிப் பான்றிகைப் பானுளம் புழுங்கி. (௧௨)

பூதி யுத்தூளம் பூசுவன் புண்டர மணிவ
னீதி யஞ்செழுத் தோதியே செபத்தினி னேர்வன்
பாதி யாகுமுன் பொருக்கென வெழுவன்கீழ்ப் பார்ப்பன்
பேதி யாமனம் பேதித்த தேதெனப் பெரியோன். (௧௩)

என்ன மாயமோ நினைவுடன் மறப்புவந் தெய்தன்
மின்னி னுண்ணிடை யானைக்கல் லாதென வெருண்டு
சொன்ன போழ்தினி லறிவிலா யென்றெமைச் சொன்னு
ளனன தேயலால் வேறிலை யெனமுனி யறிந்தான். (௧௪)

சிறுமை யுள்ளவர்க் கிதெலாந் தெரிவதோ வில்லை
மறிதி ரைக்கட லுலகினில் வாய்ப்பன யாவு
நறிய கைத்தல நெல்லிபோற் றெரிதரு நலஞ்சே
ரறிஞர் தத்தமக் குற்றவா றறிவதோ வருமை. (௧௫)

வே று.

கல்லின்வழி வாகவென யான்கழற லாலே
சொல்லவரு நீதிமொழி வாட்டமொடு சொன்னுள்
வல்லிமன தாரவொரு வஞ்சகமு மில்லை
தொல்லைவினை யீதென வுடற்றுதுய ரானுன். (௧௬)

மலக்கமொரு வேளைதவம் வாய்ப்பதொரு வேளை
கலக்கமொரு வேளைபகர் கட்டுரையோர் வேளை
யுலக்கமொரு வேளைபெயர்க் தோடலொரு வேளை
யலக்கணுற விவ்வண மருந்தவ னழுங்கி. (௧௭)

காரணமி லாதமரு ளேறிய கலக்கந்
தாரணியி லெந்தவித முந்தவிர்வ தில்லை
யாரணி சடைக்கடவு ளாடல்தெரி சித்தாற்
றீருமெனு முண்மைத னகத்திடை தெளிந்து. (௧௮)

பொய்யறிவு வந்தசிறு போதளவும் வைகி
மெய்யறிவு வந்துதொடர் வேளைதொறு மேகித்

துய்யநட னீட்பொலிவு கண்டுதுக டர்வான்
மையணி களத்தனுறை தில்லைதனில் வந்தான். (கக)

முல்லைநகை யம்பிகை முயங்குபுய வாழ்வைக்
குல்லையணி மாயனறி யாமலுயர் குன்றைத்
தொல்லையர வும்புலியு நின்றுதொழு சுடரைத்
தில்லைவன மன்றினி னடித்தவடி தேனை. (உ0)

தாதகி யெருக்கலர் தரித்தசடை யானை
காதலை விருப்பொடு நடத்துவிடை யானைக்
காதலொ டணைத்தசிவ காமியுடை யானை
யோதிப்புலி முற்றத னுடுத்தவுடை யானை. (உக)

நல்லறிவு வந்தவுட னேதொழுது நாயேன்
சொல்லவரி தாயவெதிர் சூழ்வினையி னாலே
யல்லல்பெரி தாவுனது செஞ்சர ணடைந்தேன்
வல்லநடங் காட்டியிடர் மாற்றிடுக வையா. (உஉ)

பத்திபெறு நற்புலி பதஞ்சலி விரும்பச்
சித்திர மணிக்கதிர்செய் செம்பொனவை தன்னு
ளொத்தநட னம்புரித லன்றியெமை யொப்பார்
சித்தமகிழ் கூரநட னம்புரித நீதோ. (உஙு)

தீர்ந்தபுலி வாளரவு காண்குறவுஞ் சில்பே
யார்ந்தபுறங் காட்டினிலு மம்பலத்து மல்லாற்
சேர்ந்தவினை போயகலத் தில்லையில்வந் துன்னைச்
சார்ந்தவெளி யேன்முனட னம்புரித ருழ்வோ. (உச)

தினகரனை யரவணுகல் போலவுறு தீங்கால்
வனசவிலை நீரென மயங்கியயர் வேனோ
பனகவணி யணியகல பரமகுரு நாத
கனகசபை நடமினிது காட்டியரு ளென்றான். (உரு)

புவனகயி லாயவுரை யானபுலி யூரிற்
றவரிருவர் கண்டுதொழ விரணிய சபைக்கு
ளுவகைதரு குஞ்சித நடம்புரியு மொருவன்
கவுதமன் மனத்துய ரகற்றுவது கருதி. (உசு)

பரிதிகுடி காட்டினதி பாவகரி கனாயில்
வருதிவய லூரருகி லெம்மருகு வந்தாற்.

கருதிய வெம்மாநடனங் காண்பையவ னென்றே
சுருதிமொழி யாகவுயர் விண்ணிடை தொனித்த. (உஎ)

அந்தமொழி கேட்டனு மருந்தவ னெழுந்தே
யிந்தமொழி யார்மொழியி தெந்தைமொழி யென்றே
வந்தன னுயர்ந்தசெழு மாதவியின் முல்லை
பந்தரிடு காமருவு பரிதிகுடி நாட்டில். (உஅ)

பன்னக நெடுங்கிரியும் பாவகரி யாறு
மன்னிய வொலிப்புணரி யுந்தரும மாமுங்
கன்னல்கத லிக்குலை சுமப்பகிறை கழனிச்
செந்நெல்வள முந்திகழ் திருச்சுழியல் கண்டான். (உக)

வண்டணி நறுங்குழலி மாமுனியை நோக்கே
விண்டமொழி யின்வழி மிகும்பெரு மயக்கந்
துண்டமதி வேணியன் றிருச்சுழிய றன்னைக்
கண்டவுடன் மாயமென வேகின கரந்து. (ஙo)

கவ்விவிழி வஞ்சிபகர் ஞாயவுரை யூடே
வெவ்வினை யணைந்தவகை மெல்லியலு மறியாள்
செவ்விதரு சுழியநெறி சித்தவுட னேபோ
யவ்வினை யொழிந்ததவு முனிவரனு மறியான். (ஙக)

மின்னினிடை யன்னநடை வெய்யபடை நோக்கின்
கன்னிதுணை மாலையிட மானறுதற் கண்ணர்
சந்நிதியி னின்றுமுடி தாழ்த்தியினி தேத்தி
யென்னதிடர் மாற்றியரு ளென்றடி பணிந்து. (ஙஉ)

கண்ணுதலை யண்ணலைமைக் கண்ணிதுணை மாலைப்
பெண்ணமுத வண்ணமுலை நண்ணுறு பிரானை
விண்ணவர் தொழுஞ்சுழிய லீசனைமெய் யன்ப
ரெண்ணமுடி யும்படி யிரங்கியரு ளிறையை. (ஙங)

போற்றியினி மாதவ மியற்றிவினைப் புன்மை
மாற்றுதல் கணக்கென வருந்தவன் மகிழ்ந்து
காற்றிசையை நோக்கினன் மகேசனடு வாக
மேற்றிசையி னின்றதொரு விண்ணியுயர் சூதம். (ஙச)

வேறு.

சூதகீழ றன்னில்வந்து தோமிலாத மாதவக்
கோதமன் றிகைத்துநின்று கோட்டமாக வாட்டியே

தீதுசெய்தீ பெருமயக்கி லாததென்கொல் சிந்தையை
வாதியாதி னேரமட்டு நின்றதென்று மற்றவன். (௩௫)

ஒருவராகல் வராதுநாப்பண் மாயமா யுதித்திடு
மருவினைக் கலக்கமெம்மை விட்டகன்ற தென்றவன்
மருவுலாவு தில்லையி லுரைப்படிக்கு மாதவங்
கருதினு னியற்றுதற்கெ னய்யனுடல் காணவே. (௩௬)

மோனமாத வன்படிந்து மூழ்குதற்கு வேண்டியே
தேனுலாவு மாவினிழ நீர்த்தமொன்று கண்டனன்
வானுளோர் புகழ்ந்துதோய வாய்த்ததோய மாமடு
ஞானிகண்ட தாலதற்கு ஞானவாவி நாமமே. (௩௭)

அப்புனற்கு ணுமூழ்கி யச்சுவத்தி னிழலிற்
றப்புசேர்ச டைத்திருச் சுழிப்பிரானை யுன்னியே
யொப்பிலாத மாதவத் துயர்ச்சியெய்து கோதமன்
றப்பிலாது செய்யும்யோக சாதனைக்கு ளாயினன். (௩௮)

ஆதவன் குரூரமா யழன்றகால மெவையினு
மோதுமைக் தழற்குநாப்ப ணிற்றவ முஞற்றியுஞ்
சீதளப் பனிக்கணஞ் செறிந்தகால மெவையினு
மோதுதெண் டிரைக்கயத்து ளேயெழாது மூழ்கியும். (௩௯)

திருந்தவைம் புலன்களு மொடுங்குறச் செலுத்திநீள்
கருந்தடங்கண் மங்கைபங்க னைக்கருத்தி லுன்னியே
வருந்தவந்த ணுளனுங்கு வழுவிலாது செய்தன
னருந்தவங்கள் வருடமோரை யாயிரத் திரட்டியே. (௪0)

சொலற்கருந் தவத்தினின்று தோமிலாத கோதமன்
பெலத்தநெஞ்ச னுதல்கண்டு பிஞ்ஞகன் றிவாகரன்
வலக்கணெம் பிரான்களித்து வந்தணைந்த வந்தணன்
கலக்கமங் ககற்றியாடல் காட்டுவான் விரும்பலும். (௪௧)

ஞானவாவி யிற்படிந்து நவையிலாத கௌதமன்
வானளாவு பிப்பிலம் வலம்புரிந்து வந்தனன்
பானிலா மதிச்சடைத் திருச்சுழிப் பரஞ்சுடர்
தானவே திகைப்புறத்து வந்தணைந்து சடுதியில். (௪௨)

பாதிவெண் பிறைக்கொழுந்து பாந்தளாட வேந்துகைப்
போதிலங்கு மழுவுமானு மாடநீள் புயத்தினிற்

ருதுகொண்ட கொன்றைமாலை யாடகைந்து தளர்வுறுங்
கோதமன் களிக்கநின்று குன்றவில்லி யாடினன். (ருங)

பண்ணுளாடு மறைகளாட வுடலினிற் பகிர்ந்ததோர்
பெண்ணுமாட முனிவர்பாடி யாடமூன்று பெயருடைக்
கண்ணுமாட வடியருங் களிப்பொடாட வெண்ணிலா
விண்ணுளோரு மாடநீடு மேருவில்லி யாடினன். (ருச)

சீதமொன்று கங்கைதங்கு செஞ்சடைப் புராதனன்
மாதமொன்று தனுவினு திரைத்தினத்தின் மருவியே
பேதமொன்றி லாதுதில்லை மன்றிலாடு பெட்பெனப்
பாதமொன்று தூக்கிநின்று பாசுபாணி யாடினன். (ருரு)

புண்டரீக வுரியுடுத்த பூமிநாத னுடலைக்
கண்டபோதி லேயுளங் களிந்துகண்கள் புனலுகக்
கொண்டவோகை யம்பெருங் கடற்குளாழ்ந்து கோதமன்
றெண்டனிட் டிறைஞ்சிநின்று செங்கைகொட்டி யாடியே. (ருசு)

கூடலின்க ணிருவர்சேவை கொளநிருத்த மாற்றல்போற்
றோடலர்ந்த கொன்றையந் தொடைப்புயங் குலுங்கநின்
றாடல்கண் டகங்குளிர்ந்து கண்குளிர்ந்த வந்தணன்
பாடல்கொண்டு துதியுடன் பராவிநின்று பன்னினன். (ருஎ)

வேறு.

பாரா நீரா தீயா காலா படர்விண்ணு
காரா மின்னு வுருமா மழையா கமழ்கொன்றைத்
தாரா தீரா வினைதீர்ப் பவனே சதகோடி
பேரா கோரா சீரா சுழியற் பெம்மானே. (ருஅ)

தளவ வரும்பா மிளநகை வம்பார் தனமேய
வளவிய கொம்பா மலைமக ளின்பா வயனூரா
களப விருந்தோல் புனையு முடம்பா கமழ்வாசத்
துளவணி யம்பா சுழியலி னம்பா தொல்லோனே. (ருகூ)

சிவசிவ கங்கா தரபணி யங்கா சிலைமாமா
தவளொரு பங்கா சலதி விடங்கா வழல்வீசிக்
கவினுறு வெங்கா ழுனையடர் துங்கா கயிலாயா
சுவண நெடுங்கார் முகசட லிங்கா தூயோனே. (௬௦)

அரிய பரஞ்சோ மனுமய னுக்தா மறியாத
பெரியவு மந்தா இனியணி யெந்தாய் பிழையென்மூன்
றெரிதர வந்தாய் திருவரு டந்தாய் தெளியாத
மருளை யடர்ந்தாய் சுழிய லுவந்தாய் மதிசூடீ. (ருக)

வெண்ணகை யிமையாப் பெண்ணொரு பாகா விடையாளா
தண்ணளி யுடையா கண்ணுத லமலா தவவேதப்
புண்ணிய வுருவா விண்ணவர் புனிதா நாயேனை
யெண்ணிய வண்ண நண்ணிய சுழிய லிறையோனே. (ருஉ)

இறைவா வென்றே துதிபல விண்டீ ரிருதோளும்
பிறைமுடி யும்பூ விதழி நறுந்தார் பெய்மார்புங்
கறைமிட றும்பூ ணரவுமுந் நூலுங் கண்மூன்று
முறைமுறை கண்டா னிடரை முனிந்தான் முனிநாதன். (ருங)

தொடைகொண் டாடுஞ் சடைகொண் டானைத் துணைமாலை
புடைகொண் டானைக் குடையிந் தானைப் பொடிசெய்யுங்
கடைகொண் டாருங் கண்கொண் டானை நரைவெள்ளை
விடைகொண் டானைக் கோதம முனிவன் விடைகொண்டான். (ருச)

வேறு.

பின்னரு மநேக கால மிறந்தபின் பெருநீர் வைப்பிற்
றுன்னிய வரக்கர் மாள விண்ணுளோர் துன்பந் தீர
மின்னகு திகிரிச்செங்கட் கருநிற மேக வண்ணன்
றன்னிக ரிலாவ யோத்தித் தசரதன் மகவாய் வந்தான். (ருரு)

மரகத மலைபோல் வந்த விராகவன் பின்னர் வந்த
பரதன்சத் துருக்கன் றன்னோ டிலக்குவ னென்னும் பாலர்
விரகுறு கல்வி மற்றைப் படைக்கல விஞ்சை யாய்ந்து
தரணியின் மிக்கோ ராகத் தசரதன் களிக்கு நாளில். (ருசு)

ஆடகப் பொருப்பு வில்லா லெயிலட்டா னருளி னாலே
தேடருஞ்சிறப்பின் வேள்வி நிறைவுறத் தீங்கு செய்யுந்
தாடகை யென்னும் பொல்லா வரக்கிதன் சினத்தி னாலே
மாடமா ரயோத்தி தன்னுட் கோசிக முனிவன் வந்து. (ருஎ)

தருமமோர் படிவ மாய தசரதன் முகத்தை நோக்கி
திருபனே யிடையூ றொன்றுக் குதவுவார் நீயே யின்றி
யொருவரு மில்லை வேள்வி யெமைச்செய வொட்டா வஞ்சப்
பெருவலி யரக்கி செய்யு மிடுக்கணைப் பேச லாகா. (ருஅ)

வன்மமா வலக்கண் செய்யுந் தாடகை பகையு மாறும்
புன்மைதீர்ந் தரிய வேள்வி யௌிதினிற் பொருந்த முற்று
நன்மைகள் பயக்கு மென்றே மறுமொழி நவிலா தென்பி
னுன்மகவி ராமன் றன்னை விடுக்கிலென் றுரைத்த லோடும். ' (௫௯)

ஒறுத்தவெவ் வுரையா னுள்ள முருகினு னுரைத்த மாற்ற
மறுத்திடில் வெகுளு மென்று மாழ்கினு னிந்த வாய்மை
சிறுத்துதல் செவ்வி தென்று நினைத்தன னிளவ லோடுங்
கறுத்தமே னியனை மன்னன் கொடுத்தன னிருடி கையில். (௬௦)

வீரரைக் கொண்டு சென்றான் முனிவரன் வேள்விப் பாங்கர்க்
கோரமா யரக்கி வந்தா ளிராமனே ரம்பாற் கொன்று
ஞரவே மகமு முற்றி யாயபின் னவரைக் கொண்டு
சீரமர் மிதிலை நோக்கிக் கோசிகன் செல்லுங் காலை. (௬௧)

அருங்கட நெறியி லண்ண லடித்துகள் கதுவப் பண்டே
கருங்கலாக் கிடந்தா ளாங்கோர் கன்னியா யெழுந்து வந்தாள்
வருங்குல மகளை நோக்கி யேதென மலைக்கு மன்னற்
கிருங்கலை முனிவ னந்நா ணிலையெலா மியம்பி னானே. (௬௨)

அகலிகை தன்னைக் கொண்டே முனிவனு மண்ண றானு
மகபதிக் குடம்பெ லாங்க ணாக்கினன் மருங்கில் வந்தார்
தகுமன வஞ்ச மில்லாத் தையனீ கொள்க வென்றே
புகறலும் பொருந்தி யொப்புக் கொண்டன னவரும் போனார். (௬௩)

ஆயிழை முகத்தைப் பார்த்துக் கோதம னணங்கே கல்லாய்ப்
போயநீ முன்போன் மீண்டா யென்னினும் புதிது காய
நீயுநா னுங்கு லாவிக் கலத்தல்வெண் ணீறு பூசு
நாயகன் வதுவைக் கோலங் கண்டபின் னென்று நல்லோன். (௬௪)

பிறிதுமொன் றிசைப்பான் பின்னே பண்டுனைப் பெருங்கல் லாகென்
றறுதியாச் சபித்த வென்னை யொறுத்துநீ யுனது வாக்கா
லறிவிலா தவனென் றோரா துரைத்தலை யதுவே மெய்யா
மறிகட லுலகிற் பன்னா ளலைந்தனன் மயக்க மாகி. (௬௫)

இம்மயக் கெந்தை யாடல் காண்குறி லேகு மென்றே
செம்மைசேர் கனக மன்றிற் சேர்ந்தனன் றில்லை யூழுங்
கொம்மைவெம் முலையாள் பங்கன் றிருச்சுழிக் கோட்டத் தெம்மை
யம்மென வாடல் காட்டி யென்பெரு மயக்கந் தீர்த்தான். (௬௬)

ஊட்டுவானீ றானு மூண்பான் றானுமற் றெவ்வோ ராசை
பூட்டுவான் றானும் பூண்பான் றானுமெம் பூமி நாதன்
கோட்டுவான் போதி நீழற் குறுகினால் வதுவைக் கோலங்
காட்டுவான் காண்பேம் பின்னர்க் கலந்திருப் போநா மென்று. (௬௭)

கற்புடை யவளோ டீசன் றிருமணக் கோலங் காண்பான்
வெற்புடை யநேக நாடு பதிபல வெந்ந தாகப்
பொற்புடை மாட வீதிச் சுழியலிற் புனிதன் றாளி
லற்புடைத் தவத்த னான கோதம னணுகி னானே. (௬௮)

தேன்கண்ட மொழியுந் தானுந் திருச்சுழி கண்டு பண்டே
தான்கண்ட ஞான வாவிப் புனலிடைத் தாழ்ந்து மூழ்கி
வான்கண்ட போதி கண்டு வலங்கொண்டு சூழ்ந்து வெள்ளைக்
கூன்கண்ட மதிக்கோ டீசன் சந்நிதி குறுகி னின்றே. (௬௯)

இந்தமா னெனது பன்னி யிவணெடுங் கால மெல்லா
மந்தமில் கல்லாய்ச் சாப மொழிந்துமீண் டணுக லுற்றாள்
செந்தழல் வண்ண னேயுன் றிருமணக் கோலங் காண
வந்தனம் வதுவைக் கோலங் காட்டுதி சுழியல் வாழ்வே. (௭௦)

வேறு.

வெவ்வி னைப்பய னாலைமை வேறுசெய்
கவ்வை யான தொழிந்திடக் காட்டுதி
நவ்வி நோக்கிக்கு மங்கல நாணணி
செவ்வி தூய திருமணக் கோலமே. (௭௧)

கங்கை சூடுஞ் சடைக்கறைக் கண்டனே
யெங்கள் கண்ணெதி ரேபெறக் காட்டுதி
மங்கை மாணிக்க மாலை மடந்தைதன்
செங்கை பற்றுந் திருமணக் கோலமே. (௭௨)

உரிய கன்னியும் யானு முவந்திடக்
கரியு மாமிடற் றாயின்று காட்டுதி
பெரிய மென்முலைச் சிற்றிடைப் பேதைக்குத்
தெரியல் சூட்டுந் திருமணக் கோலமே. (௭௩)

ஐயு மெற்கு நடமன்று காட்டினை
யைய னேமெய் யருளுடன் காட்டுதி
வையந் தந்தவன் மன்றற் சடங்குகள்
செய்ய வாய்ந்த திருமணக் கோலமே. (௭௪)

காவ லாவின்று காண்குறக் காட்டுதி
தேவதுர்க்கமி னென்னங் கறங்கிடத்
தாவில் சிந்தைத் தபோதனர் வாழ்த்துறத்
தீவ லஞ்செய் திருமணக் கோலமே. (எரு)

என்னப் போற்றி யிருடியும் பன்னியு
மின்னேத் தன்னொரு பால்வைத்த வீரனே
யுன்னிச் சொன்னவை யாவுவந் தேமலர்க்
கன்னிப் புன்னை நிழற்பொலி காரணன். (எசு)

சீத ரன்முனந் தேடியுங் காணொணுப்
பாத பங்கயங் காட்டிய பண்புபோ
ஞத னம்பர னும்பர்க்கு நாயகன்
கோத மன்மனக் கோட்டந் தணியவே. (எஎ)

வேறு.

சிலைநெடும்பொற் கிரியான திருச்சுழியற் பரஞ்சோதி
விலையடங்கா மணிகுயிற்றி வெயில்விரித்த மண்டபத்தே
கலைமடந்தை புணர்விரிஞ்சன் கடிமணத்தின் சடங்கியற்ற
மலைமடந்தை யுந்தானு மணக்கோலம் வாய்ந்திருந்தான். (எஅ)

ஆசைதருங் கண்ணனுக்குச் சக்கரமு மருச்சுனர்க்குப்
பாசுபத முங்கொடுத்த திருச்சுழியற் பரமேட்டி
பேசரும்பல் லியங்கறங்கப் பிறைநுதலம் பிகையுடனே
வாசமலர் மண்டபத்தின் மணக்கோலம் வாய்ந்திருந்தான். (எகூ)

கண்டவுடன் கௌதமனுங் கன்னியொடு வீழ்ந்திறைஞ்சி
யண்டருங்கா ணப்பெறுதற் கரிதாய மணக்கோலம்
வண்டணியுங் குழலியுடன் காட்டினையே வயலூரிற்
றொண்டர்தொழுங் கலியாண சுந்தரனே யெனப்புகழ்ந்தான். (அ0)

நறையிதழித் தொடையானே நடத்தியமால் விடையானே
மறைபரவுஞ் சங்கரனே மலைமகளோர் பங்கரனே
பிறையரவு முடித்தானே பேரவையு ணடித்தானே
கறையணியுங் கந்தரனே கலியாண சுந்தரனே. (அக)

செங்கைமழு வழலானே திருவரசு நிழலானே
பங்கயன்றே டரியானே பன்னகப்பொற் கிரியானே
வெங்கை யிபவுரியானே மிருபாவ கரியானே
கங்கையணி யுந்தரனே கலியாண சுந்தரனே. (அஉ)

புலியாளை யுரித்துடுத்துப் போர்த்தவனே திருச்சுழியற்
கலியாண சுந்தரனே யெனவிறைஞ்சிக் காத்தருளென்
றொலியாழி விடமமுதா வுண்டானை விடைகொண்டே
சலியாது மகிழ்துங்கத் தவத்தோனும் பன்னியுமாய். (அங)

வடகுடக்கி லுபயநதி மத்தியிலே வந்துபெருங்
கடல்சுழித்த பெருமானைக் கலியாண சுந்தரனென்
றிடமுடைய பெயராலோர் சிவலிங்க மினிதியற்றிப்
படர்சடையோ னருச்சித்தான் பலமலர்கூ விளந்துளவி. (அச)

நின்றுகசிந் துள்ளுருகி யிரங்கிவிழி நீர்ததும்ப
வன்றுமயக் கொழித்துநடங் காட்டியின்று மெமையாண்டாய்
கன்றிதருந் திருச்சுழிய னுயகமே யின்றேபோ
லென்றுமெமைப் புரந்தருளென் றேகினு னிருந்தவத்தோன். (அரு)

காலிநிரை காத்தானுங் காண்பரிய காலினர்செஞ்
சாலிவளஞ் சேர்சுழியற் றற்பரன்ற னருள்கிடைத்தே
யாலினுறை வேதாளம் பிடித்தொறுத்த வல்லலெலா
மாலினிதீர்ந் துய்ந்தாளென் றுரைத்தனனுன் மறைச்சூதன். (அசு)

கௌதமச் சருக்கம் முற்றிற்று.

---

ஆ திருவிருத்தம்-ச0க.

---

## மாலினிக்கு வேதாளசங்கை தீர்ந்த சருக்கம்.

---

ஆங்கதுகேட் டகமகிழ்ந்து சவுனகனு மருந்தவத்தோய்
வாங்குசிலை நுதலணங்கு மாலினியென் பவடன்னை
வீங்குதடம் புயவலியால் வேதாளம் பிடித்ததவு
நீங்கியதும் புகலெனலுஞ் சூதமுனி நிகழ்த்துவான். (க)

கந்திபலா மிகுநாடு கதலிபழுத் துகுநாடு
தந்தியினம் பயினுடு தகையாத புயனுடு
முந்துறுகே ரளநாடு மொழியவரு வளநாடு
செந்திருமா னிலைநாடு சேரமான் மலைநாடு. (உ)

மலைநாட்டிற் பலபதிக்கு நாயகமாய் மனுநீதி
நிலைநாட்டித் தருமநெறி நீங்காம னோங்குநகர்

கோலைநாட்டுஞ் சுடர்வடிவாட் குலவுநெடுங் தோட்கொடியிற்
சிலைநாட்டு மவன்புரக்குந் திருவஞ்சைக் களநகரே. (௩)

அந்நகரர் தனிபுரக்கு மவிரொளிமா மணிப்பூணன்
மின்னகுவேற் படைசுமந்து வீங்குநெடுங் தடந்தோளான்
கன்னல்வரி வின்மதனுங் காமிக்கும் வனப்புடையான்
மன்னவர்மா முடியுரிஞ்சி வயங்குகழை கழற்காலான். (௪)

சொல்லேறு மியலிசையின் சுவைமாந்துஞ் சுடர்க்குழையா
னெல்லேறும் பெருவளமை வஞ்சியெனு நீணகரான்
வில்லேறுங் கொடியுடையான் வெறிகமழும் பனந்தாரான்
கொல்லேறு நிகர்வலியா னேமரத னெனுங்கோமான். (௫)

ஏமரதன் றனெடுநா ளருமகப்பே றில்லாமற்
காமதக னனைவழிபட் டருந்தவங்கள் கசிந்தியற்றித்
தாமரைப்பூந் தவிசிருக்குந் தனிரியலே போலவொரு
மாமகளை யினிதளித்தா னவணும மாலினியே. (௬)

மாலுதவுங் காமனுக்கு மாலுதவு மாலினிதன்
கோலவனப் பதற்குவமை யெவராலுஞ் சொலக்கூடா
ஞாலமட மங்கையரி னகநகர்க் கன்னியரின்
மேலுலக வரம்பையரி னிணையில்லாண் மெய்ப்பாவை. (௭)

அரும்புமிதழ்க் கடுக்கைதனக் கலர்விழைத்துச் சைவலத்தைப்
பெரும்புனலி லேகிடத்தி யறலைமண லெனப்பிரித்துச்
சுரும்புபடிந் திசைமுரன்ற தொடையலணிந் திருள்செறிந்து
கரும்புயலை விண்ணேற்றி யகிற்றூமங் கமழ்குழலாள். (௮)

கூன்பிறைபோய்த் தலைசாயக் கொடுமேரமு நாண்கொள்ள
வான்புதிய நறுந்திலகம் வயங்கியவா ணுதற்பேதை
மீன்பயிலும் வள்ளையென விழையுநர்நெஞ் சிருந்தாடத்
தான்பிரம னமைத்தமணி யூசலெனத் தகுகுழையாள். (௯)

சேலைப்போன் மிளிர்ந்துதுணைச் சிறுமானைப் போற்றுவி
வேலைப்போற் கூரியவாய் மாவடுப்போன் மிகுவனப்பாய்க்
கோலைப்போல் விசையுளவாய்க் கூற்றைப்போற் கொலைத்திறத்தாய்
மாலைப்போ தினிலலர்ந்த கழுநீர்போன் மதர்விழியாள். (௧௦)

இந்திரவில் லிரண்டுளதே லிணைபுகலும் புருவத்தாள்
கொந்தலர்சம் பகந்திலம்பூங் குமிழனைய நாசியினள்

சுந்தரஞ்சேர் வாயாம்ப றெண்டையிதழ் தரளநகை
கந்தரத்தைப் பணிலமென்றுங் கமுகென்றுஞ் சொலலாமே. (௧௧)

அட்டமிட்டுத் தடித்திடங்கொண் டடிபரந்து புடைத்துவிம்மி
வட்டமிட்டன் ஞோ்திறுகித் ததும்பிமுத்து வடம்பூண்டு
கொட்டமிட்டு வருங்காமன் குறும்படங்கச் சிணங்குமுக
பட்டமிட்ட மதயானைத் துணைமருப்பின் பணைமுலையாள். (௧௨)

காம்புநிகர் பசுந்தோளுஞ் செங்காந்தட் கைமலருந்
தேம்பியசின் னூலிடையும் வடத்திலைபோற் றிருவயிறு
மாம்பன்மணிக் கைக்குறங்கு மலவன்முளந் தாளுமிதழ்ப்
பூம்பதுமச் சிற்றடியும் பெற்றவளப் பொற்பாவை. (௧௩)

இவ்வடிவு படைத்துடையா ளிலங்கிழைப்பூங் கொம்பன்னா
டெவ்வடுவேற் குடநாட னேமாதன் செல்வமன்னாண்
மௌவலம்பூங் குழல்வனிதை மாலினியென் பவளொருநாட்
கொவ்வையிதழ் மாதருடன் பூக்கொய்வான் குறிக்கின்றாள். (௧௪)

பதியதனுக் கருகாகப் பாரிலிணை யிலதாக
வுதியர்பிரான் படைத்துளது நெருங்கியிருள் செறிந்தோங்கிப்
புதியமுகை மடலவிழ்த்துப் பொறிச்சுரும்பர் கவிழ்த்தநறு
மதுவொழுகி நாற்காத மணங்கமழு மலர்ச்சோலை. (௧௫)

பெருகொலியாக் கவிக்குலங்கள் பெயர்ந்தோடச் சரச்சரெனச்
சருகொலியுங் காற்றதனாற் றழைமரக்கோ டொன்றொடொன்று
திருகொலியும் பூவைகிள்ளை மிழற்றொலியுஞ் சேர்ந்தடையுங்
குருகொலியுஞ் சுரும்பொலியும் பிரியாத குளிர்சோலை. (௧௬)

தள்ளாடுங் கொடியினிடை மடமாதர் சாயலென
வுள்ளாடுங் களிப்புடனே யுலவிமயிற் குலமொதுங்கக்
கள்ளாடு மடலவிழ்த்துக் காற்றாடிக் கலந்தநறாற்
புள்ளாடப் பரந்துசெழும் புயலாடும் பூஞ்சோலை. (௧௭)

சண்பகம்பூம் புன்னைகுரா மிசைத்தளவந் தவழ்ந்தேற
விண்கதுவு மிலஞ்சிகளின் மல்லிகைகண் மிகப்படரத்
தண்கவிகை மலர்பரித்துத் தடங்களிற்பூம் புனல்குடைந்து
பெண்களெவ ரவர்கூடி விளையாடப் பெறுஞ்சோலை. (௧௮)

அந்தநறுஞ் சோலையிற்போய்ப் போதுகொய்யு மருத்தியினாற்
கொந்தலருங் குழன்மடவா ரிருமருங்குங் குழுமிவரச்

சுந்தரவின் னரமகளிர் சூழநடு நாயகமா
வந்தலவுஞ் சசியேபோன் மாலினியென் பவள்வந்தாள். (கக)

மண்டலத்தின் வனப்பனைத்து மோருருவாய் வாய்த்ததுவோ
கொண்டலெழு மின்னொளியோ குனிசிலைவேள் செங்கோலோ
புண்டரிகத் திருமின்னோ நடந்தலவும் பொற்கொடியோ
கண்டவர்த மாருயிரோ மாலினியாங் கமழ்குழலே. (உ0)

தானுமுயிர்க் குயிரான தையலரும் தாழ்க்காது
வானறியுஞ் செழும்பூங்கா வனத்தினடு வுட்புகுந்து
பானலங்கட் சிலைப்புருவப் பவளவிதழ்ப் பசுந்தோகை
தேனெறியும் போதுகொய்து நாற்றிசையுந் திரிதருங்கால். (உக)

தாதாடு மலர்ச்சோலை நாப்பணிற்செந் தளிர்பரப்பி
மீதாக வுயர்ந்துவளர் செறிந்துபல விழுதான்று
மாதாரும் வான்பழுமா மரத்தினெடு நாளாயோர்
வேதாள னிருப்பனவன் கண்டனனம் மெல்லியலை. (உஉ)

அடியிடையும் பணைமுலையுந் துவர்வாயுங் குமிழ்மூக்குங்
கடிகமழுங் கனங்குழலுங் கமலமுகத் திருவழகும்
பிடிநடையு மயிலியலும் பிணையனைய மதர்விழியும்
வடிவுமெதிர் கண்டுடனே வெளவினன் மாலினியை. (உங)

வடவிருக்கந் தனிலுறையும் வேதாள மாலினியாம்
விடவரவப் படமிதம்ப மெல்லியலைத் தீண்டலுமே
யுடல்பதறி யலமலந்திட் டுறுமூர்ச்சை யால்விழுந்தாண்
மடலவிழுங் குழன்மாதர் கண்டுவிரைந் தோடிவந்தார். (உச)

வந்தாவென் றெடுத்தணைத்து மடிமீதி லேகிடத்தி
முன்றானை கொடுவீசி முகவியர்வை தனையகற்றிக்
கொந்தாருங் குழன்மயிலுக் கென்கொலோ கோவென்றே
னைந்தார்கண் மனைநாடிக் கைத்தூக்கிக் கொடுநடந்தார். (உரு)

தந்தையுந்தா யும்பதறித் தளிரியலை மனைபுகுத்திக்
கொந்தலரும் பாயன்மிசைக் கிடத்தியுளங் குலைகுலைந்து
பைந்தொடியார் முகநோக்கிப் பாவையிவட் குற்றபொல்லாங்
கெந்தவகை யென்னமற்றவ் வேந்திழையா ரெடுத்துரைப்பார். (உசு)

மாலினியும் யாங்களுமா மலர்கொய்வா னருந்தியினுந்
சோலையிற்போ யவரவர்கள் பரந்தெடுத்தோந் தாமலரை

நீலவிழ் மிடமயிலுந் தமியளா யெமைநீங்கி
யாலடியி லனுகினு ளுடனெய்திற் றஞரிதென்றார். (உஎ)

ஈதுசொல்லக் கேட்டவுட னிடிவிழுந்த மரம்போலப்
பூதலத்தில் வீழ்ந்தலறிப் புலம்பிவிழிப் புனல்சோர
மாதுயரத் துடனழுங்கி மாலினிக்கு வந்தவினைக்
கேதுசெய்வோ மெனத்தாதை யெமரதனேதுசெய்தான். (உஅ)

அந்தணர்க்கும் கடவுளர்க்கு மஃதியர்க்கும் பொருள்கொடுத்தான்
றந்திரத்தாற் கிரகநிலைத் தவறுக்காஞ் சாந்தியினன்
மந்திரத்தால் வெறியாட்டால் வரைந்துகட்டத் தகும்பிரட்சா
பந்தனத்தாற் கோடிதிர வியமளித்தும் பயன்காணன். (உகூ)

கன்னியவ ளுறெறுத்துக் கருத்தழிந்து தடுமாறி
மின்னியமெய் விளர்விளர்த்து வேற்றுருவ மதுவாகி
யின்னலுற்றுக் கண்டவரும் வெருக்கொள்ளு மியல்புதனை
மன்னவன்கண் டுளமுருகி மகடனிலு மெலிவானன். (௩0)

வேறு.

மிடைந்தபூஞ் சோலை வைகும் வெய்யவே தாளம் வாட்டக்
குடைந்துவண் டிமிர்பூங் கோதை வாடிய கோட்டந் தன்னு
ளிடைந்துள முருகி நையு மிரணியத் தேரான் றன்பா
லடைந்தனன் முதிய கேள்விக் கோபில முனிவ னங்கே. (௩க)

எய்திய முனிவற் கண்டு பணிந்தினி திருக்கை யீய்ந்து
செய்திகழ் வேலான் வரடி நெஞ்சநெக் குருகி நின்றான்
மைதிர மனைத்துஞ் செங்கோ லோச்சியே பரிந்து காக்கும்
பொய்தவி ருளத்தாய் வாட்ட மென்கொலோ புகறி யென்றான். (௩உ)

வினவலுங் குடநாட் டண்ணல் விளம்புவான் றவத்து வீரென்
றனையையென் னுயிரே போல்வாண் மாலினி யென்னுந் தையல்
புனைமலர்க் குழன்மின் னூரோ டேகினள் போதுகொய்ய
வினையமா யிருந்த தந்தத் தண்டலை தனில்வே தாளம். (௩௩)

எத்திறை யலகை யாலே யிடைந்தனை முருகிச் சோர்ந்து
காந்தியு மழுங்கி மேனி கவினழிந் துருவே றானாள்
சாந்தி மந்திரங்க டன்னு லொருசற்றுந் தீர்ந்த தில்லை
பூந்திரு வாட்டம் பார்த்துப் பார்த்துமெய் புண்ர்ந்தே னென்றான். ()

கூறிய துன்பங் கேட்டுக் கோபில முனிவன் கோதாற்
சீறிய வலிவே தாளந் தீண்டிய சங்கை தீர்ந்து
நாறிய மலர்ப்பூங் கோதை நவையிலா துய்வா ளாகத்
தேறிய°வுண்மை யொன்றுண் டன்னது செப்பக் கேணீ (௩௫)

பஞ்சவன் புரக்குந் தெய்வப் பாண்டிமண் டலத்திற் செல்வ
மிஞ்சிய பரிதி நாட்டிற் றிருச்சுழி யதனின் மேனாள்
வஞ்சிறுண் மருங்குற் பொன்னம் பெருமுலை யிமய மங்கை
செஞ்சடைக் கரிய கண்ட னுடனின்பந் திளைக்கு மந்நாள். (௩௬)

மீன்பயில் கருங்கட் செவ்வா யுமையவள் விருப்ப முற்றே
மான்பயில் கரத்தி னானை வணங்கியொண் மழுவ லானே
கான்புனல் படியத் தெய்வப் புதியநீர் நல்கா யென்னத்
தேன்பயில் கடுக்கை யண்ண றிருவுளத் தினிமை கூர்ந்து. (௩௭)

முக்கணன் றரையிற் றன்கை மூவிலை வேலா லூன்ற
வக்கணத் தெழுந்து வந்த வறலினைக் காட்சி நோக்கித்
தக்கதே மலைமா னுட வெனமனை தங்கை கோத்தங்
கொக்கவே திவலை சிந்தும் பாங்கினின் றுவகை கொண்டார். (௩௮)

முன்னமே மாக நீத்தம் வேணியின் முடித்த வண்ணல்
பின்னரும் பிலத்து ளாய்நீ பெருகென வழைத்த லாலே
மின்னகு நுரைக ளென்னும் வெண்மல ரேந்தி யோதை
மன்னமெய்த் தொண்டர் போல வந்தது வதல நீத்தம். (௩௯)

குடிலமே யிடமாக் கொண்ட கொள்கையாற் கங்கை முன்னோன்
சடிலமீ துற்றுள் யாமத் தையலோ டிகலி யின்பா
ரடியிசை யடைவோ மென்ன வன்புடன் வெகுண்டெ ழுந்த
படிவமே யாகுஞ் சூலம் பதித்திட வோங்கு பாணி. (௪0)

முத்தலைக் குடுமி யாலே யகழ்தலான் முத்து வார
மொத்தது பூமின் மேனு ளுஞற்றிய தவத்தா னம்ப
னித்தசா ரூப முக்கணிருமாண மிகத்தே பெற்ற
சித்தியை யேய்க்கு நோக்கந் தீவினை போக்கு நீரால். (௪௧)

பக்கமிக் காறு யோங்கும் பணையொலிப் புணரி நீத்த
மொக்கவே யபேத மாகு மொண்ணலத் தாலே ஞாலத்
திக்கரும் பாகும் பானு மிசைவதே யென்ன லாகு
மைக்களத் தவனே கண்ட வாய்மை யினின்பான் மாதோ. (௪௨)

மெய்யமிழ் இசைக்கா தம்பம் பெடையொடு விளங்க வர்க்கங்
கொய்யுடி சிகரி போதா சாரசங் குரண்ட முள்ளல்
செய்யவே தியரு மற்றை மூவருஞ் செறிந்தா லொத்தங்
கய்யனு ரனையுங் காண வமர்ந்தன விசைந்து மாதோ. (௪௩)

கைவண்ணங் காட்டுஞ் சூல தீர்த்தத்தைக் கௌரி நோக்கிச்
செவ்வணத் தண்ண றன்னைச் சிந்தையில் விழியிற் கண்டு
மெய்வணப் புனலி லாடி மீண்டிதோர் தீர்த்த மாக
மைவணக் களத்தாய் நல்கா யென்றடி வணங்கி நின்றாள். (௪௪)

சூலத்தாற் கண்ட வாற்று லிதன்பெயர் சூல தீர்த்தங்
காலத்தாற் படிவோர் தங்கள் பழவினை முழுதுங் காயு
ஞாலத்தார் விண்ணோ ராவர் மூழ்கிய நலத்தா லென்றே
மாலத்தா லிருண்ட கண்ட னுமைதனக் கருளி னனே. (௪௫)

அப்பெரு மடுவின் மூழ்கிச் சிவன்றிரு வடியிற் றாழ்ந்தாற்
செப்பரும் பவங்க ளெல்லாம் பரிதிமுன் றிமிர மாகு
மிப்பகைச் சங்க தோட நிமிடத்தில் விடுபட் டேகுந்
துப்பிதழ் மயிலை நீகொண் டேகுதி சுழியற் கென்றான். (௪௬)

இந்தணி சடிலப் பெம்மா னெம்முயிர் காப்பா னெண்ணி
வந்தன னென்ன வேந்தக் கோயில ரடியை வாழ்த்திச்
சிந்தையா குலங்க ளெல்லாந் தீர்வது திண்ண மென்றே
சுந்தர மயிலைக் கொண்டே சென்றனன் சுவணத் தேரான். (௪௭)

குன்றுகள் பலவுங் கண்டு நதிபல குறுகி நீங்கித்
துன்றுவெங் கானம் போக்கிப் பதுக்கைகள் கழித்துச் சூளாற்
கன்றிய மனத்தா னீசன் கருணைசே ருளத்த னாகிச்
சென்றனன் பரிதி நாட்டுத் திருச்சுழிப் பதியிற் சேரன். (௪௮)

கண்ணுறக் கண்டா னேம ரதன்வள நகருங் காவும்
விண்ணுற வளர்ந்து நிற்குந் தருமதா வரத்தின் வீறும்
வண்ணவீ திகளுஞ் சைவர் மடங்களுஞ் சிகர வாய்ப்புந்
தண்ணறுங் கடுக்கைப் பெம்மான் கோயிலுந் தடம்பொற் றேரும். ()

கண்டுளங் குளிர்ந்து சூல தீர்த்தத்தின் கரையி லெய்தி
மூண்டகத் திருவன் றனைப் புனலிடை மூழ்கப் பண்ணி
மண்டலத் தரசன் றானு மூழ்கித்தன் வரத்தால் வந்த
வொண்டொடி யுந்தா னும்போ யுமாபதி யடியிற் றாழ்ந்தார். (௫0)

அடிபணிந் திறைஞ்சி நின்ற மாலினி யன்ன மன்று
ணெடியபாம் பகல்வாய் விட்டு நீங்கிய மதியம் போலக்
கொடியவே தாள சங்கக் கோளெலா மொழிந்து பண்டை
வடிவினி லிரதி வேட்கும் வனப்புடைப் பெதும்பை யானாள். (நக)

தனையைதன் னலகைத் தோடந் தீர்த்தருள் சம்பு வேயென்
வினையொழித் தவனே நீயே துணைமறு புகல்வே றில்லை
யெனைமலர்க் கண்பார்த் தய்ய காப்பையென் றேத்தி மீண்டு
கனைகழற் காலான் சென்று பதிபுகுந் துலகங் காத்தான். (நஉ)

மாலினி தன்னைத் தொட்ட வலியவே தாளன் றெய்வச்
சூலதீர்த் தத்திற் றானுங் கூடவே தோய்ந்த நீராற்
சாலுமவ் வுருவ நீங்கி நல்லுருத் தாங்கிக் கொண்டு
மேலுல கதனைச் சென்றான் விண்ணவன் றானே யாகி. (நந)

புன்னைநன் னிழலில் வாழும் புராதன பூமி நாதன்
வெந்நிடு குடக்க தான திசையிலோர் விலங்க லுண்டா
லந்நெடு வரையி னுமம் பன்னகா சலமா மென்றே
தொன்னெறிக் கேள்வி வல்ல சூதமா முனிவன் சொன்னான். (நச)

மாலினிக்கு வேதாளசங்கை தீர்ந்த சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-சநந.

## பன்னகச்சருக்கம்.

கேட்டுளங் களியா நின்ற சௌனகன் மீண்டுங் கேட்பான்
றேட்டித ழியினான் றெய்வச் சுழியலி னயல தாகக்
கோட்டுவான் பனக மென்னுங் குன்றுவந் துற்ற வாறு
நாட்டமாப் புகறி யென்ன விருப்பொடு நவில்வான் சூதன். (க)

வேறு.

முனிவிர் கேண்மின்கண் முன்னொரு காலத்திற்
கனிகள் சிந்தி மணங்கமழ் கூடலிற்
பனிம திக்குலப் பாண்டியன் றன்வழி
நனிசி றந்த நரபதி தத்தனே. (உ)

ஆல வாயர்க் குறுந்தொழும் பாயினு
னால வாயர்க் களித்த கருத்தினு

ஞல் வீரயர் சரணத்தி லன்பினு
ஞல வாயரை வாழ்த்திய லாசையான். (ங)

தத்த மாறன் றரணி புரக்குநாட்
புத்த ரோடு சமணர் பொருந்தியே
நித்த ஞர்திரு நீற்றினை மாற்றுவான்
மெத்த மீறினர் தம்மத மேலிட்டு. (ச)

புந்தி சற்று மிலாத புரவல
னிந்தை யாகிய சைவத்தி னின்றனை
னந்த மில்லா நமது சமயத்தைச்
சிந்தை செய்தில னென்கொ லிவன்றிறம். (ரு)

அடாது செய்வன செய்யு மவன்றனைக்
கெடாது போலக் கெடுக்குது மென்னவே
விடாது வன்மத் துடனோர் வினயமே
யுடாத கோலத்தர் செய்ய வொருப்பட்டார். (சு)

வே று.

சொல்லரும் பொருமை யாலே துணிந்திது கரும மாக
வெல்லையி லமணர் கூடி யவரவ ரினிது கற்ற
வல்லப வேள்வி யாற்றி மந்திர வாதந் தன்னு
லொல்லையில் வரக்கண் டார்க ளரக்கனு முரகந் தன்னை. (எ)

பிறைபல நிரைத்து வைத்த தனையமுள் ளெயிறும் பேழ்வாய்க்
கறைதரு கவர்த்த நாவுங் கனலெழச் சுழல்செங் கண்ணு
நிறைபொறிப் படமும் வாய்ந்த வரியுட னெடிய பாம்பைக்
குறைவறப் பார்த்தா ரெண்ண முடிக்கலா மெனவுட் கொண்டு. (அ)

பாந்தளே யறிவொன் றில்லாப் பஞ்சவன் கூட லுள்ள
மாந்தரா னவரை யெல்லா மூச்சினுன் மடியப் பண்ணி
வேந்தனை யுங்கொ லென்றே யமணர்கள் விடுத்த லோடுங்
காந்திநின் றுருத்துச் செல்லக் கவுரியன் பதியை நோக்கி. (கூ)

மூச்சினுற் சிலபேர் மாண்டா ருடறனை முறுக்கி நீள்வால்
வீச்சினுற் சிலபேர் மூண்டார் வெருவியே முடிவு கால
மாச்சிதே தோவென் றோடிச் சசிகுல வரசன் முன்போய்ப்
பேச்சினுக் குளறி மன்னு வந்தது பெரிய பாம்பு. (க0)

நீண்டமால் வரைபோற் றோன்றி நெருப்புக விழித்துச் சீற
மாண்டவர்க் கிலக்க மில்லை நொடிக்குளே வருமிக் கேவந்
தீண்டுமுன் றொலைப்ப தைய கருமமென் றிறைஞ்ச லோடு
மாண்டவன் சொக்க னுண்டென் றெழுந்தன னரசர் கோமான். (கக)

கடல்விட மமுத மாக வுண்டதுங் கடவுட் சொக்கன்
படவர வணிய தாகப் பூண்டதுஞ் சொக்கன் பாம்பை
வடவரைச் சிலைக்கு நாணு வலித்ததுஞ் சொக்கன் வந்த
விடரொழிப் பதுவுஞ் சொக்க னென்பது துருவ மாக்கி. (கஉ)

தானவ னுகி நின்று தனுவினிற் சிறுநா ணேற்றி
மீனவன் றொடுத்து விட்ட பகழிகள் விரைவிற் பாய
மானமில் லாத பொல்லா வமணரால் விடுத்த பாந்த
ளானது சின்னஞ் சின்ன மாயுயி ரிழந்த தன்றே. (கங)

அசைவிலா நகரந் தன்னை யழிக்கவந் துற்ற பாம்பு
திசையெலா மறியத் தத்தத் தென்னவன் சரத்தி னுலே
வசையுறத் துணிக ளாக வானுதி தெறித்து மீக்கொள்
விசையினிற் பறந்து தாழ்ந்து வீழ்ந்தது பரிதி நாட்டில். (கச)

மடலவிழ் கடுக்கைப் பூமி நாயகன் கோயின் மாடே
குடதிசை யதனிற் றோன்றி விளங்குமப் பெரிய குன்றம்
விடவர வுறுப்பி லொன்று வீழ்ந்ததால் விண்ணோர் போற்றப்
படிமிசை யதற்கு நாமம் பன்னக கிரியென் பாரே. (கரு)

நண்ணிய வுரக சின்ன நரபதி பகழி யாலப்
புண்ணிய நிலத்தில் வீந்து வீழ்ந்திடும் புனிதந் தன்னுற்
கண்ணுதற் கயிலை வெற்புக் கிணையதா மென்னக் கண்டு
விண்ணுளோர் புகழ்ந்து போற்ற வுயர்ந்தது பனக வெற்பு. (கசு)

கோதமன் முதல்வ ராய முனிவரர் கூடிப் போற்ற
மாதவர் குழுமித் தத்தம் யோகத்தில் வதிந்து வைக
வேதியர் முதலோர் போற்ற வலங்கொண்டு வரங்கள் வேண்ட
வோதரு கயிலை யென்ன வாய்ந்தது பனக வோங்கல். (கஎ)

வரையர மகளிர் வானத் தரம்பைய ரியக்க மாத
ருரகக னியர்க ளெய்திச் சிலம்புகூ யுச்சத் தேறி
யருவியஞ் சுனைக ளாடி யவரவ ருலாவிக் காவில்
விரைமலர் கொய்ய நாளும் வாய்ந்தது பனக வெற்பு. (கஅ)

சிகரிலாப் பரிதி நாட்டி னின்றிடும் பனகக் குன்றச்
சிகரத்தை நெடுந்தூ ரத்தே கண்ணுறத் தெரிசித் தாலும்
புகலொணுப் பாவ மெல்லாம் புலாலருந் தவரைத் தேடிப்
பகலவன் றன்னைக் கண்ட பனியெனப் பறந்து போமால். (௧௯)

இத்திற மல்லான் முன்னு ளெந்தையார் சுழிய றன்னிற்
சித்திரத் துவச னென்னும் இன்னரர் தலைவன் சேர்ந்து
மெய்த்தவத் தவனால் வந்த சாபமுந் தீர்ந்து மீண்டு
சுத்தனென் றுயர்ந்தா னென்னச் சூதமா முனிவன் சொன்னான். (௨௦)

பன்னகச்சருக்கம் முற்றிற்று.

---

ஆக திருவிருத்தம்-௪௭௫.

---

## சித்திரத்துவசன் சாபந்தீர்ந்த சருக்கம்.

உரைத்தவை யனைத்துங் கேட்ட சவுனக னுவந்து மேலோய்
வரைத்தடங் குவவுத் திண்டோ ளவனுக்கு வாய்த்த சாப
கிருத்தனார் சுழிய றன்னி னீங்கிய தென்னு நீர்மை
கருத்துடன் பகர்தி யென்னப் புகலுவான் கடவுட் சூதன். (௧)

அந்தரத் தவர்பொன் னாட்டிற் பாதலத் தகில வைப்பிற்
சிந்தையா லெங்கும் போய்ச்சஞ் சரிக்குங்கந் தருவர் கோமான்
மந்தரா சலப்பொற் றோளான் சித்திர வாகு மைந்தன்
சுந்தர வடிவின் மிக்கான் சித்திரத் துவச னென்பான். (௨)

தாமரை முகத்தான் பார்வைத் தாமரைக் கருணைக் கண்ணன்
றாமரைக் கையான் செய்ய தாமரை யனைய தாளான்
றாமரைப் பொகுட்டில் வைகுந் தளிரியல் பிரியாச் செல்வன்
றாமரைப் பகழி வேளும் விருப்புறும் வனப்பிற் றக்கோன். (௩)

பூவியன் மாலை மார்பன் பொருவறு வயிரப் பூணன்
காவியங் கண்ணார் நெஞ்சங் கவர்தரக் கனிந்த சொல்லா
னேவியர் பேதங் கண்டே யெழுதொணா வுருவம் பெற்றான்
றேவர்கோன் மகிழ்ச்சி கூருஞ் சித்திரத் துவச னோர்நாள். (௪)

தன்னுயிர்த் தோழ ரோடுஞ் சூழ்மிய தானை யோடும்
பொன்னெடுந் தேரி லேறிப் பூதல வைப்பில் வந்தான்

முன்னவ னனைய காட்சி முற்கல விருடி யென்பான்
மன்னியெந் நாளும் வைகு மாச்சிர மத்தின் மாடே. (௫)

விண்புக வுயர்ந்த காட்சி வியப்புறு பொழில நேகந்
தண்பல சுகந்தச் சூழல் சதம்பல வனம நேக
மொண்புது முகைப்பூங் காவி யோடையின் கிடங்க நேகம்
பண்பயில் சுரும்பு லாவு பங்கயத் தடம நேகம். (௬)

ஆங்கணுற் றிருக்குங் கேள்வி முற்கல ரருமைப் பேதை
வாங்குவிற் புருவ வேற்க ணுண்ணிடை மயிலின் சாயற்
கோங்கரும் பனைய கொங்கை வெண்ணகைக் குமுதச் செவ்வாய்ப்
பூங்கொடிப் பொன்னம் பாவை போலுஞ்சுப் பிரபைப் பூவை. (௭)

நல்லொளி யென்னும் பெண்மைப் பெருமித நாரி யோர்நாள்
வல்லிய ருடன்போய்ப் பூங்கா வனத்திற்பந் தமனை யூசல்
சொல்லருங் கழங்கிவ் வெல்லாம் பயின்றுமெய் வியர்த்துச் சோர்வா
லொல்லையிற் சென்று டண்ணீ ராடுவா ளோடை நோக்கி. (௮)

சென்றனள் செல்லு மின்னைச் சித்திரத் துவசன் கண்டான்
மன்றலங் குழலா டெய்வ வனப்பெலாங் குறிப்பாற் பார்த்தா
னின்றிது நமக்கு வாய்ப்பென் றிரதம்விட் டிறங்கி முன்னே
நின்றனன் றிகைத்து வஞ்சி நெருப்புக விழித்து நின்றாள். (௯)

இரந்துபி னின்ற காலை யிவணமக் கிணங்க மாட்டாள்
கரந்துரு வலிதிற் கொண்டு போவதே கரும மென்று
விரைந்துபூங் கூந்தல் பற்றி யீர்த்துத்தேர் மீதி லேற்ற
வரந்தையா லலறிப் பேதை கூப்பிட வகன்றா னண்ணல். (௧0)

வஞ்சிநுண் ணிடையாள் கண்ணீர் வழிந்திட நடுங்கி மாழ்கி
யஞ்சியுள் ளுருகிக் கூப்பிட் டலறுதல் செவியிற் றாக்கச்
செஞ்சடை முனிவன் சிறித் தியானமந் திரத்தாற் றிண்டேர்
மிஞ்சிடா தடனே மீட்க விஞ்சையன் மீண்டான் றேர்மேல். (௧௧)

தூண்டிய கொடிஞ்சித் திண்டேர் கடுப்பினிற் றிரும்பித் தொல்லை
யாண்டகை முன்னர் நிற்ப விஞ்சையர் தலைவ னஞ்சிப்
பூண்டவிப் பிழைக ளைய பொறுத்தியென் னவும்பொ ருமன்
மூண்டவெங் கோபங் கொண்டு முற்கல விருடி வாக்கால். (௧௨)

தேவர்கட் கிணைய னுங்கந் தருவனு கியுநீ வெய்ய
பாவவல் லரக்கர் செய்யும் புலைத்தொழில் விழைந்த பண்பான்

மேவுமிவ் வுருவ நீங்கி யிராக்கத வேடந் தாங்கிப்
பூவுலகனைத்துஞ் சென்றே யுழலுதி போதி யென்றான். (௧௩)

என்றுதன் மடமா னைக்கொண் டேகினான் முனிவ னில்லி
லன்றவன் மொழிந்த சாப மரைக்கணந் தாழ்த்த தில்லை
நின்றவ னுடனே கோர நிசாசர வுருவம் பெற்றுச்
சென்றன னறிவு நீங்கித் திரைக்கடற் புவன மெங்கும். (௧௪)

கருமலை நடக்கை பெற்ற தோற்றத்தின் காய னாகி
யிருபிறை முகிலுட் டோன்றும் படியெனு மெயிற்ற னாகித்
திரிவுறச் சுழற்றிப் பார்க்குந் தீத்தெறு கண்ண னாகி
விரித்ர நிமிர்ந்த குஞ்சி செக்கரின் மிக்கா னாகி. (௧௫)

அதட்டுவா னடவி யெங்கு நிலைப்பிலா தலைந்து தாழ்ந்த
வுதட்டினை யதுக்கி நிற்பா னேடுவா னுணவு தேடிக்
குதட்டுவான் வெறுவாய் மென்று குறுகுறு விழித்துப் பார்ப்பான்
பிதற்றியே புலம்பிக் கொண்டு திரிந்தனன் பெரும்பா ரெங்கும். (௧௬)

காடொன்றோ பதுக்கை யொன்றோ கடற்கரைக் கழிக ளொன்றோ
மேடொன்றோ பள்ள மொன்றோ வெற்பொன்றோ விடர்க ளொன்றோ
நாடொன்றோ நகர மொன்றோ நவையுடன் வெகுநாட் பட்ட
பாடொன்றோ வொன்றோ தீய நிசாசரன் றிரிந்த பக்கம். (௧௭)

முன்னரே தவத்தின் மிக்க முற்கலர் சபித்த காலை
யன்னதற் கிறுதி வாய்மை பெற்றுய வறிந்தா னில்லை
பின்னரெத் திறத்தாற் றீரு முலகத்திற் பெரியோர் வாக்காற்
சொன்னதே பலிக்கு மல்லா லொழியுமோ சாப தோடம். (௧௮)

எலும்பின்மேற் சரும மூடி யிருக்கையு நிலைப்பு மின்றிப்
புலம்புட னரற்றிக் கொண்டே யிராப்பக றுயிலும் போக்கி
கலம்பெறு பாண்டி நாட்டு நதிவரை பலவு நீங்கித்
தலம்பல கண்டு கண்டான் பன்னக சயிலந் தன்னை. (௧௯)

ஏறினான் பனகக் குன்றி லேறுமுன் றலவி சேடப்
பேறுதா னரக்கன் பெற்ற பெற்றியா லறிவு தோன்றித்
தேறிநா னிழைத்த தீங்கான் மாதவன் சினந்து சாபங்
கூறினா னிவ்வா றானே னென்பது கருத்துட் கொண்டு. (௨௦)

சித்தமே தெளிந்து நின்ற சித்திரத் துவச னென்பா
னித்தல மல்லா னந்தீங் ககற்றுறு தலம்வே றில்லை

பத்தியா லிங்கே நாளும் பயின்றிடர் தீர்வோ மென்றே
யுத்தர திசையை நோக்கிச் சென்றன ஞவைகை யாக. (உக)

தெண்டிரைக் கடனஞ் சுண்ட கண்டனே சிறுமைப் பொல்லேன்
கொண்டதோ ரரக்க வேடக் கொடுமையென் றொழிப்பா யென்றே
விண்டவா ரமிர்தச் சொல்லி னிரக்கமாச் சொல்லும் வேளை
கண்டனன் றவத்தில் வைகுங் காலவ விருடி தன்னை. (உஉ)

காண்டலு மிவரே யெம்மைச் சபித்தமுற் கலரா மெந்தை
யாண்டகை யருளாற் றுன்ப மகலுமென் றுளத்தி னெண்ணி
நீண்டதோர் கரிய குன்ற நிலத்திடை வீழ்ந்த தென்ன
மூண்டபே ரன்பி னோடும் வீழ்ந்தனன் முனிவன் றாளில். (உங)

இறைஞ்சலுந் தவத்தோ னையுற் றெழுகென வெழுந்தான் பின்னர்
மறஞ்செயுந் தொழிலாற் பேதை மயிர்பிடித் திழுத்த வாற்று
லறஞ்செய்த படிவ னிவ்வா றுகெனச் சபித்தான் பண்டைத்
திறஞ்செய்வே மஞ்சல் யாமிங் குற்றவை செப்பக் கேணீ. (உச)

படவர வணிந்த பெம்மா னருளது கிடைக்கும் பண்பாற்
கடலிடைத் திகழும் வெற்புக் கந்தமா தனத்தின் பாங்கர்
மடலவிழ் கமலக் குட்ட மருங்கினி னொருங்கு காவி
லிடமுறுந் தலத்த ஞகி யநேகநா ளிருக்கின் றேனை. (உரு)

கின்னைப்போற் குரூர வேட நிசாசர னொருவன் வந்து
பின்னிட்ட கதியிற் பற்றிக் கழுத்துறப் பிடித்து வீக்க
வுன்னிக்கோ கோவென் றஞ்சி யோலமிட் டரற்றும் வேளை
யென்னைக்காத் தருள வாங்கே வயிரவக் கடவு ளெய்தி. (உசு)

வெளவியே யுயிருண் ணுமுன் சூலத்தை மார்பி லூன்றி
வெவ்வலி யரக்க ஞவி நமனுக்கு விருந்த தாக்கி
யெளவியந் தீர்த்தான் றுத்தி யகல்பணப் பகுவாய்ப் பாந்தள்
கெளவிய தேரை மீண்டா லெனவெனை மீட்டுக் காரி. (உஎ)

உயிரவ மாகா வண்ண ங் கடிதுவந் துய்யக் கொண்ட
வயிரவக் கடவுள் செந்தா மரைமல ரடியில் வீழ்ந்து
பயிறருந் தவத்தி னின்றேன் பாதகன் கெடுத்தா னென்னைச்
செயிரறு முறுதி யாகக் கூறெனக் கடவு டேர்ந்து. (உஅ)

எல்லையி லரக்க ராஞே ரிவனுனை யிருக்க வொட்டார்
மல்லலம் பாண்டி நாட்டுண் மணியெனும் பரிதி நாட்டிற்

சொல்லருஞ் சுழியல் வாழுஞ் சுடரு‍னைப் புரக்கு மாண்டே
யொல்லையிற் செல்க வென்ன விடைகொண்டிங் குவந்து வந்தேன். ()

புன்னைநன் னிழலான் றன்னைத் தெரிசித்தேன் புன்மை தீர்ந்தேன்
மின்னேரே ரிடையாள் பங்கன் விருப்புறுந் தலம தாகு
மிந்நிலந் தன்னிற் றீர்த்தஞ் சிவலிங்க மியற்றி நின்றே
னன்னிலைப் பேறு பெற்றே னவையொரீஇ யிருக்கின் றேனால். (௧௦)

வருத்தமா யுலகி னீழு வாயிர வருடத் தெல்லை
கருத்தழிந் துலைந்த தல்லாற் பயனொன்றுங் கண்டா யில்லை
திருத்தமாஞ் சுழியன் மூது ரடைந்தகந் தெளிந்து நின்றாய்
நிருத்தனு ரருளாற் றுன்ப நீக்குதும் வருக வென்றே. (௧௧)

கடிதினிற் கொண்டு சென்று காலவ தீர்த்தத் தெண்ணீர்
படியெனப் பணிப்ப மூழ்கி யெழுந்தனன் பாவ நீங்கிக்
கொடியவல் லரக்க வேட நீரின்மேற் குமிழி யாக
வடிவினி லுயர்ந்தான் காமன் வனப்பிற்பன் மடங்கு வாய்ப்ப. (௧௨)

தீங்கொழித் தருகில் வந்து சித்திரத் துவச னென்பான்
பூங்கழ லிறைஞ்ச லோடுங் காலவன் புகழ்ந்து வாழ்த்தி
யாங்கவன் றன்னைக் கொண்டு புரகர னடியிற் றாழ்வான்
றாங்கருங் களிப்பி னோடுஞ் சினகர வாயில் சார்ந்தான். (௧௩)

படப்பொறி யரவம் பூண்ட பரமனைப் பரிதி நாட்டி
னடப்பொது வனைப்பி னுக கரத்தனை நம்பன் றன்னைத்
தடப்பொழிற் சுழிய லானை யிருவருந் தகவிற் றாழ்ந்தார்
திடக்கந்த ருவன்றன் முன்னே தோன்றிற்றுக் கொடிஞ்சித் திண்டேர்.

அத்திறந் தன்னிற் கோர வரக்கவே டத்தை மாற்றி
யித்திறந் தந்தான் றன்னைப் புகழ்ந்தினி திறைஞ்சி வாழ்த்திப்
பத்தியாற் சுழிய லெந்தை பதம்பணிந் தெழுந்து தேர்மேற்
சித்திரத் துவச னேறிச் சென்றுதன் னுலகஞ் சேர்ந்தான். (௧௫)

செஞ்சடைக் கரிய கண்டன் றிருச்சுழிப் புவன நாதன்
கஞ்சன்மா லறியாச் சென்னி காலுடைக் கால காலன்
பைஞ்சிறைக் கிள்ளை யாகென் றொருமுனி பகர்ந்த சாபம்
விஞ்சையன் றனக்குத் தீர்த்தா னென்றனன் பேன்மைச் சூதன். ()

சித்திரத்துவசன் சாபந்தீர்ந்தசருக்கம் முற்றிற்று.

---

ஆ திருவிருத்தம் - ௫௧௧.

## சித்திரரூபன் சாபந்தீர்ந்த சருக்கம்.

இருசெவி குளிர ரோமம் புளகெழ விருந்து கேட்டுப்
பெருமகிழ் தூங்க மேன்மைச் சௌனகன் பெருமை யுள்ளா
யொருமுனி பகர்ந்த சாபம் விஞ்சையற் கொழிந்த காதை
கருணையிற் புகறி யென்னச் சூதன்கட் டுரைப்ப தானன். (க)

வேறு.

தருமங்க டரண்டொன் றெனவேயுருச் சார்ந்த மெய்யன்
கருமங்க ளறிந்துயர் கல்வியி னன்மி குந்தோன்
மருமந்திகழ் நூலினன் வேணியன் வல்ல வேங்கைச்
சருமம் புனையும் பரமன்சரி தத்த னானோன். (உ)

காலம் பலகண் டறியும்பழை யோன்மெய்ஞ் ஞான
சீலம் பலதங் கியசீருடைச் செவ்வி யாளன்
மூலம் பலதின் றுழுகும்முதி யோன்வி சால
ஞாலம் புகழுந் தவநன்குடை நாத னானோன். (ங)

கல்லால நிழற்பொலி காரணன் காட்டுங் காட்சி
யல்லாற் பிறிதொன் றுமிலென்ப தறிந்த நீரா
னெல்லா வுயிர்கட்கு மிரங்கு மிரக்க முள்ளோன்
சொல்லா ரணனும நிசாகர னென்னுந் தூயோன். (ச)

தலையாய தவத்து நிசாகர னென்னுந் தக்கோன்
றலையா விரதங்கள் சரித்தமெய்த் தூய்மை யாள
னிலைகாய் கனிமூல மருந்தித்த னிச்சை யாலே
பலநாட் டிரிந்தா னனபாரணம் பண்ண வேண்டி. (ரு)

மற்றோர் மனைசென்று கேட்டுண்ண மனம்பொ ருந்தான்
பற்று யழைப்பா ரவரில்லிலு முண்டி பாரா
னுற்று ருயிர்கட் குபகார மிலாத தாக
நற்றுபத னெண்ணினன் சிந்தையி னுடிச் சென்று. (சு)

கதிர்கொய்தே வறிதாம் பணைப்பாரிற் கதிர்மு திர்ந்தே
யுதிருநெல் லெடான்பல பறவைக்கிஃ துண்டி யென்றே
யெதிருநீர் விடாத் * தோரையிற் பலனிலென் றுன்னிச்
சதிரி னேடுபேர்த் தொவ்வொரு நெல்லதாத் தாவெடுத்து. (எ)

* தோரை - குளநெல்.

கைநோவ முகத்தினில் வேர்வெழக் காந்தி வாடி
மெய்சோர விருந்தரி திற்கவர் வெண்ணெ லீட்டி
மொய்வார் சடையா னமுதாக்கிய மூரல் பாகஞ்
செய்தா னதிதிக் கொருபங்கு செலுத்தி யாங்கு. (அ)

தன்பங்கு பிரித்த புழுக்க லுண்ணச் சமைத்தே
யின்பங்குடை யெந்தையைச் சிந்தையின் மீதி ருத்தித்
துன்பங் கெடுத்தா னெனத்தாளிணை சென்னி சூடி
யின்பங்கொ டிருந்தனன் மானத பூசை யின்கண். (கூ)

அந்நேர மோர்விஞ் சையனந்தர மார்க்க மாகத்
தன்னே ரிலாத முனிதன்னிடைச் சார்ந்து பார்த்தான்
முன்னே யுணவு மிவன்மூடிய கண்ணு மாய
தென்னே யிதுகாண் குதுமென்றுத னெஞ்சி னெண்ணி. (க0)

தூயர்க்கு மூன்று புவனத்தன யாவுந் தோன்றுந்
தீயர்க்குத் தத்தங் கருமந் தெரியாமை திண்ண
மாயிற் செயலூழ் வினைச்சித்திர ரூப னங்கோர்
மாயக் கிளியாகி நிசாகரன் மாட்ட ணைந்து. (கக)

விசைகொண்டு பறக்கு நொடிக்குள் விரைந்து மீளுந்
திசையெங்கணுஞ் சூழு மருந்தவன் செய்கை யெண்ணு
நசையினிற் றுனறி யுஞ்சில வார்த்தை நல்கு
மிசையும் பசியாற் கவளத்தை யினிது நோக்கும். (கஉ)

மேலாயவ னுண்ண விரும்பிய போன கத்தைக்
காலாற் கிளறித் திகழ்மூக்கினுற் கட்ட ழித்து
வாலாற் சிறகாற் கொடுமணன் மண்க வேவிக்
கோலா கலஞ்செய் ததுபின்வருங் கோளெ ளுது. (கங)

காற்றுன் மழையான் மழையூடு கலந்தி டிக்கு
மேற்று லசைவெள் ளளவேனு மிலாது வெள்ளை
நீற்றுன் றிருப்பூ சையிற்பற்றொடு நின்ற நெஞ்சன்
தோற்று மதியஞ் சுகமென்செய்துஞ் சோர்வ துண்டோ. (கச)

அரிதாய தியானமா வாகன மாச னம்பின்
றருபாத்திய வர்க்கிய வாசம னஞ்செய் தானம்
வரும்வத்திர கந்தபுட் பந்தூபம் வாய்த்த தீபந்
திருநெய்வே தனம்பிர தெக்கிணந் தெண்ட னென்றே. (கரு)

இயலுமுப சார மீரெட்டு மிணக்க நெஞ்சின்
முயலுஞ் சிவபூசை வழாது முடிந்த பின்னர்ச்
செயலுண் பதெனக் கருதித்தவச் செல்வன் பார்த்தா
னயர்ச்சிந்த மனுண்ட வனந்தனை யஞ்சு கத்தை. (௧௬)

ஈதேதென ஞான திருட்டியி னெண்ணிக் கண்டு
தாதேறிய கொன்றையன் செஞ்சடைத் தையல் பாக
மாதேவ பூசை முடித்தேத்திமற் றுண்ப தற்குத்
தீதே புரிந்தா யடவிஞ்சைய சித்ர ரூபா. (௧௭)

பன்னாள் வருந்திக் கொணர்ந்திட்டிய பாளி தத்தை
நன்னுவி லின்பம் பெறநானருந் தாத வண்ண
மின்னுசெய்த விஞ்சைய நீகிளி யென்ன வெய்யா
தின்னாள் வரைக்குந் திரியென்ன நிகழ்த்தி னானே. (௧௮)

மூட்டப் படருங் கனலென்ன முனிந்து மேலோன்
கோட்டத் தொடுசொன் மொழியாலவன் மேன்மை குன்றிச்
சேட்டைத் தனத்தா லவமாகிய சித்ர ரூபன்
காட்டிற் கிளியாத் திரிந்தானெடுங் கால மெல்லாம். (௧௯)

மேலோர் பசித்துண் பதற்கேதம் விளைத்த பேருங்
காலாறி யானீ ருணும்போது கலைத்த பேரும்
மாலா லிணங்குஞ் சமயத்திடர் வைத்த பேரும்
வேலா வலயத் துழன்றேநர கத்தில் வீழ்வார். (௨௦)

இரைதேர்வது மில்லை யிருப்பிட மென்ப தில்லை
தெரிவான் சிறைக்கிள் ளைகடம்மொடுஞ் சேர்வ தில்லை
தரியா மனதாத் தனியேயெங்குஞ் சஞ்ச ரித்துத்
திரிவா னவன்றத் தையதாகிய சித்ர ரூபன். (௨௧)

வானந் தடவும் பெரும் பூதர வாய்ப்பமந்துங்
கானஞ் சிறுதா றுகள்பற்பல கண்டு கண்டுந்
தேனுந்து வாச மலர்ச்சோலைகள் சேர்ந்து சேர்ந்து
மீனின் கொடியான் றிருநாட்டினின் மேய தன்றே. (௨௨)

வேறு.

ஆயிர வருட மிவ்வா றலைந்தகந் தருவக் கிள்ளை
மாயிரு ஞாலத் திற்கோர் மணியெனுஞ் சுழிய றன்னின்
மீயுயர் கோயின் முன்னும் புண்ணிய விருக்கக் கோட்டிற்
றுயிலு மினியா னைப்பார்த் திருந்தது தனிமை நீங்கி. (௨௩)

முன்னாதத்தன் பிறப்புஞ் செய்த வகத்தையு முனிவன் றன்னுன்
மன்னிய படிவம் இன்னே யாயதுங் கடல்சூழ் வைப்பி
லின்னலுற் றலைந்த வாறுங் கரதலா மலக மென்னத்
தன்னகத் தறிந்து கொண்டான் றலவிசே டத்தின் பாங்கால். (உச)

இனிமறு புகலு மில்லை யிவிடம்விட் டேகொ ணாது
பனிமதிக் கண்ணி யானே புரப்பனென் றுள்ளம் பற்றிப்
புனிதனூர் கோயி றன்னை வலங்கொளும் போது மேற்கிற்
றனிநுதற் கண்ண னுங்கோர் சைவவே டத்த னாகி. (உரு)

மாவடி யதனி னின்றான் வருமொரு கிளியைக் கண்டா
னுவலாற் செங்கை காட்டி வருகவென் றழைத்த லோடுந்
தாவிலா துடனே வந்து சரணடைந் திறைஞ்ச நோக்கித்
தேவர்கோன் கருணை கூர்ந்து திருவுளத் திரக்கங் கொண்டு. (உசு)

ஞானமா மடுவிற் றெண்ணீர் கையினி லள்ளி நாதன்
மோனமந் திரத்தைச் சொல்லி முகந்தனி லிறைத்த லோடுங்
கானவன் இன்னே வேடங் கரந்துகந் தருவ னாகி
வேனில்வேள் வெட்க நின்றான் மறைந்தனன் விடையின் பாகன். ()

தன்னுருக் கண்டான் காணுன் றனக்குருக் காட்டி னானை
மின்னுருக் கொண்டு காட்டி மறைந்ததோ வென்ன வீரன்
பொன்னுருக் கொண்ட கோயில் வாய்தலின் புறத்துப் போந்து
மன்னுருக் கங்கொண் டேத்தி வழுத்தினான் சுழியல் வாழ்வை. (உஅ)

வேறு.

பங்கயக் கண்ணனய னறியாப் பரஞ்சுடரை
வெங்கயத்தோல் போர்த்த திருமேனி நாயகனைக்
கங்கையைச் சூடிதனை யின்றுகண்டு கொண்டனனென்
றங்கை புடைத்திசையான் மகிழ்ந்தாடிப் பாடினனே. (உகூ)

எண்ணிய வெண்ணமெலா நமதெண்ணத் தின்படியே
நண்ணுமெழுரு காலு நடுங்காதே நன்னெஞ்சே
விண்ணவர் விண்ணவனைத் திருமேனி நாயகனைக்
கண்ணுதல்வாழ் வைச்சுழிய றனிற்கண்டு கொண்டேனே. (௩0)

வெய்ய பிறப்பதனுன் மிகவே தடுமாறி
யைய லினித்துயரான் மனமே நடுங்காதே
மெய்யனைத் தென்சுழியற் றிருமேனி நாயகனைக்
கையல ரிட்டிறைஞ்சித் தொழக்கண்டு கொண்டேனே. (௩க)

திருத்துவா ரில்லாமற் செயலேது மில்லாமல்
வருத்தமுடன் றனித்த மனமே மயங்காதே
விரித்த சடையானைத் திருமேனி நாயகனைக்
கருத்துட னேசுழிய றனிற்கண்டு கொண்டேனே. (௩௨)

ஏதமுடன் பலநாட் டவித்தெய்த் திடைந்தோமே
யாதர வில்லையென மனமே யழுங்காதே
வேதனை நாரணனைத் திருமேனி நாயகனைக்
காதலுடன் சுழிய றனிற்கண்டு கொண்டேனே. (௩௩)

மாநிலமும் விசும்புந் திருமாலு நான்முகனு
மேனமு மன்னமுமா யின்னு மறியார்கள்
வேனின் மதனையடுந் திருமேனி நாயகனைக்
கானந் திகழ்சுழிய றனிற்கண்டு கொண்டேனே. (௩௪)

ஆவ தறியாம லவமே இளியாகிப்
பாவ மிழைத்தோமே மனமே பதறாதே
தேவர் பெருமானைத் திருமேனி நாயகனைக்
காவ லருஞ்சுழிய றனிற்கண்டு கொண்டேனே. (௩௫)

ஆண்டு தொழும்புகொள்வா னமதல்ல லைத்தவிர்ப்பான்
வேண்டும் வரந்தருவான் மனமே மெலியாதே
பூண்ட பணியானைத் திருமேனிப் புண்ணியனைக்
காண்டச் சடையானை யின்றுகண்டு கொண்டேனே. (௩௬)

என்று புகழ்ந்தவுட னெழிலார் பிறைச்சடையார்
வென்றி மழுப்படையார் திருமேனி நாயகனா
ரன்றவனுக் கருள வுற்றதந்த ரத்திழிந்து
பொன்றிகழுங் கிரிபோ லொருபுட்ப கந்தானே. (௩௭)

தேறின சிந்தையினன் றிருமேனி நாயகனைக்
கூறி யடிபணிந்து விடைகொண்டு புட்பகத்தி
லேறி மகிழ்வுடனே யிமையோர்கள் கொண்டாட
வீறுள தன்பதியிற் சென்றுவீற் றிருந்தானே. (௩௮)

கற்றைச் சடையானைக் கலியாண சுந்தரனை
வெற்றிப் படையானைத் திருமேனி நாயகனை
யுற்ற விடையானை யுடையானை யெட்டுலிங்கஞ்
சுற்றி யிருக்குமென்றே மறைச்சூதன் சொன்னானே. (௩௯)

சித்திரரூபன் சாபந்தீர்ந்த சருக்கம் முற்றிற்று.

---

ஆக திருவிருத்தம்-௫௫௦.

# அட்டலிங்கச்சருக்கம்.

செப்பச் சௌனகனுந் தவத்தாய் திருச்சுழிய
லப்புச் சடையானைச் சுற்றியட்ட லிங்கமவை
மெய்ப்புற் றிருப்பதெலாம் வகையா விளம்புகெனத்
தப்பற்ற கேள்வியினுற் புகல்வான் றனிச்சூதன். (க)

வேறு.

அருக ரேவிய பாம்பன்று செழியன்கை யம்பினு லுயிர்மாண்டு
பெரிய மாமலை யாயபோ தன்னதின் வானுதி பெயர்க்தோடிப்
பரிதி நாட்டினின் வீழ்க்தொரு குன்றெனத் திகழ்ந்திடும் பண்பாலே
யரசர் கோமகன் காண்குறும் விருப்பினுற் சுழியலி லடைந்தானே. ()

மருவு சூலதீர்த் தம்படிந் தாடிவெண் ணீறெழில் வரச்சாத்தித்
தரும தாவரம் வலங்கொளச் சூழ்ந்தரன் சந்நிதி தனில்வீழ்ந்து
பரவி நாயினேன் றனைப்புரந் தருளென விடைகொடு பார்வேந்தன்
கருணை யாற்சென்று பன்னகப் பொருப்பினைக் கண்ணுறக் கண்டானே.

சுற்றி யெங்கணும் பார்த்தனன் சிவனுக்குச் சுதலமித் தலமென்றே
கொற்ற வன்றிருச் சினகர மமைத்தனன் குவட்டினை வெளியாக்கிப்
பற்று டன்னொரு சிவலிங்கந் தாபித்தான் பணிந்துபூ சைகளாற்றி
யுற்ற பேர்வெள்ளி யம்பல நாதனென் றுரைத்தனன் றமிழ்மாறன். ()

நாத னூர்திருச் சுழியலிற் பரமனூர் நம்பனு ரந்நாளிற்
கோத மன்றனக் கிரங்கியே திருமணக் கோலங்காட் டியவாற்றுற்
பூத லத்துளோர் வியப்புற வுபய மா நதிநடு வதிற்போந்து
காத லாலொரு சிவலிங்கந் தாபித்தான் கவுண்டின்ய முனிதானே.(ரு)

தன்பெ ருந்துயர் தீர்தரச் சுழியலிற் றற்பரா பரமூர்த்தி
யின்ப மாகிய திருமணக் கோலத்தைக் காட்டிய வியல்பெண்ணித்
துன்ப மேயிலாக் கோதம னருச்சனை தோத்திரம் பலசெய்தா
னன்பி னுற்கலி யாணசுந் தரனென நாமமு மமைத்தானுல். (சு)

கந்த மாநதனச் சாரலி லிருந்தவக் காலவர் முன்னுளி
லெந்தை யார்திருச் சுழியலி னெல்லையின் வடதிசை தனிலெய்திச்
சிந்தை யாற்சிவ பூசனை புரியவோர் சிவலிங்கந் தாபித்துப்
புந்தி யாலருச் சனைசெய்தான் காலவ லிங்கமென் றிசைபோற்றி. (எ)

சலதி பொங்குராட் டவித்தற மயக்கிய கௌரியன் றனக்காகக்
கலைம திச்சடை யானெய்திப் பிரம்பினாற் கடல்சுழித் ததினின்ற
நிலையி லன்றொரு சிவலிங்கந் தாபித்துத் தன்பெயர் நிலைநிற்கந் [றே.
தொலைவின் மெய்ப்புகழ்ப் புரவல னருச்சித்தான் சோமசே கரனென்

ஆம தேவழி படுவது சிவனுக்கென் றறிபவ னலர்குலத்
தாம தேவனும் பிரமதே வனுமறி யாச்சுடர் தனைப்போற்றும்
வாம தேவனென் றொருதவ முனிவர னவன்பணி வழுவாதான்
றேம தேவள ரினமொழித் தண்ணளிக் கண்ணுவ னெனுஞ்சீடன். (கூ)

குரவன் மாடணைந் திருசர ணிறைஞ்சிநின் றடிகள்கூ றுவகேட்டி.
விரவு மெய்த்தவம் புரிவது கருதியென் னுளத்தினில் விருப்புற்றேன்
பரம னேயெளி யனுக்குநின் கருணையாற் பணித்தருள் விடையென்னக்
கரக மாதவ னாகிய தேசிகன் கண்ணுவர் தமைநோக்கி. (க0)

சுமதி யாலெலை வினவினை நன்றுநன் றென்றியாஞ் சொலக்கேட்டி
யமல னாருள் பெறத்தவ முயலுதற் கருத்தியுண் டாமாகிற்
றமர வாரிதி சூழ்பெரும் புவியினிற் றமிழ்வலஞ் செறிநாட்டிற்
கமல வாவிசூழ் திருச்சுழி யென்னுமூர் கண்ணுதல் பிரியாவூர். (கக)

எண்ணில் காலமுங் கயிலையெம் பரமனா ரிடைவிடா துறைமூதூர்
புண்ணி யங்கடா வரவடி வாய்நின்று போற்றியே வளர்மூதூர்
நண்ணு கோதமன் முதலியோர் தவஞ்செய்து வரம்பெறு நன்மூதூ
ரண்ண லார்திருச் சுழியலங் கேசென விடையளித் தனனாசான். (கஉ)

அடிகள் பங்கய வடிகளி லிறைஞ்சிநின் றன்புடன் விடைகொண்டே
படிகொ ளுடுகள் கோடிகொள் பருப்பதம் பதிநதி பலபோக்கிப்
பொடிகொண் மேனியன் பூங்கொன்றை வேணியன் பூமிநா யகன்மே
கடிகொண் மாநகர் முத்திமா நகரத்திற் கண்ணுவன் சென்றானால்.[வுங்

சென்று சூலதீர்த் தப்புன லாடிமெய் திகழவெண் பொடிபூசி
நின்ற புண்ணிய விருக்கத்தை வலங்கொண்டு நிமலனை தடிபோற்றி
யின்று நற்றவம் புரிவதற் கெங்ஙனை மிடமெனக் குணபாற்போ
யன்றி ருந்தனன் கண்ணுவ னிருகுரோ சத்தள வதனின்கண். (கச)

இருந்து தன்பெய ராலொரு சிவலிங்க மியற்றியாங் கொருதீர்த்தம்
பொருந்த நேமித்துப் பூமிநா யகனெனப் பாவித்துப் பூசித்து
வருந்தி மெய்த்தவம் புரிந்தனன் கடவுளாண் டொருசத மகிழ்வாகக்
காந்தை வேணிய னருடரக் கதிபெற்றான் கண்ணுவ முனிதானே. ()

ஏந்து பூங்கணைக் கருப்புவின் மதிக்குடைத் தென்றலந் தேரேறிப்
பாந்து ளேந்திய பூதல மெங்கணும் பவனியி னுலாமாரன்
போந்தனன்றிருச் சுழியலின் புறத்திலப் புரத்தினி னனிவாழு
மாந்தர் யாவரு மவன்விழிப் பார்வைக்கு வானுளோ ரெனக்கண்டே. ()

மன்னு மித்தல மகிமையின் விசேடமிம் மாநிலத் திலையென்றே
செந்நி றச்சடை யானுறை தானத்தின் றெக்கிணக் குணக்காகக்
கன்னல் வில்லுடைக் காமனோர் சிவலிங்க மமைத்தனன் கருத்தாக
விந்நி லத்துளோர் புகழ்ந்துகா மீச்சுர மெனப்பணி குவராமால். (கஎ)

ஆதி நாளொரு நிசாசர னவனிரு தாந்தக னெனும்பேரான்
பூத லந்தனி லுசாவினன் றொரு சிவலிங்கம் புதிதாக்க
நீதி யாமிட மெவ்விட மெனச்சென்று நேடினு னிகரில்லான்
கோதில் கோபிதார் வனங்கண்டா னுமிஃ தாமெனக் குறித்தானால். ()

ஈச னார்நறும் புன்னைநன் னீழலா ரெந்தையா ரெந்நாளும்
வாச மாவமர் தானத்தின் றெற்கதாங் கோபிதார் வனந்தன்னிற்
பூசை யாற்றுவா னொருசிவ லிங்கமன் றமைத்தனன் புவியுள்ளோர்
மாசி லாக்கிரு தாந்தகேச் சுரமெனப் புகழ்ந்தன ரிசைவாழ்த்தி. (க௯)

ஞாலந் தோன்றிய நாளையி லவரவர் நாடுகள் குறிக்கின்ற
காலந் தோன்றிய கதிரவன் பரிதிநன் னுடெனு மிடங்கண்டு
பாலந் தோன்றிய விழிச்சிவ லிங்கமுந் தாபித்தான் பணிந்தேத்திச்
சீலந் தோன்றிய நாமமுஞ் சாற்றினன் றினகரேச் சுரமென்றே. (உ0)

இன்ன தாகிய தாபித லிங்கமோ ரெட்டுஞ்சூழ் தரநாப்பட்
புன்னை நீழலி லிருக்கின்றான் சுழியலான் புராதனச் சுடராகிப்
பன்ன கக்கிரி யாதியாத் தெக்கிண பச்சிமத் திசைமட்டுஞ்
சொன்ன காரண விலிங்கங்க டொழுமவர் பிறவியிற் சுழலாரே. (உக)

வேறு.

சிவலிங்கத் தொகையோ ரெட்டுஞ் செப்பினே னோரெண் டீர்த்த
மவையிலா மகிமை சொல்வன் கேண்மின்க ளென்னா நன்மைச்
சவுனகன் முதலா வுள்ளோர் மகிழ்ந்தருந் தவத்தின் மிக்கோ
யுவகையாப் புகறி யென்னக் கூறுவா னுண்மைச் சூதன். (உஉ)

அட்டலிங்கச்சருக்கம் முற்றிற்று.

ஆ௨ திருவிருத்தம்-௫எ௨.

# அட்டதீர்த்தச்சருக்கம்.

இம்மைமால் வரையிற் றோன்றி யுலகமீ ரேழு மீன்ற
வுமையவள் விரும்ப வேண்டி யுமாபதி யளித்த தீர்த்தந்
தமதுகைச் சூலத் தாலே கண்டதாற் சாற்று நாம
மமலமாஞ் சூல தீர்த்தஞ் சிவகங்கை யென்று மாமே. (க)

சூலதீர்த் தத்திற் றெண்ணீர் படிந்துவான் றொடநின் றோங்கிச்
சாலநன் னீழ லாகுந் தருமதா வரத்தைச் சூழ்ந்து
வாலவெண் பிறைக்கோ டீர வரதனைப் பணிவா ரிந்தத்
தாலத்தின் மீண்டு வாரார் பிறப்பெனுஞ் சலமுந் தீர்ந்து. (உ)

ஏமநேத் திரத்தான் செங்கை நீண்டவுள் ளிடைந்தித் தோடம்
போமது கருதிச் செல்வப் பெருவய லூரிற் போந்து
தாமதி யாதோர் தீர்த்தம் விதித்துத்தற் பரனை யன்று
பூமிபூ சித்தா னந்தக் கூவமே பூமி தீர்த்தம். (ங)

புனிதமாய் விளங்குந் தெய்வப் பூமிதீர்த் தத்தி லாடிப்
பனிமதிச் சடைப்பூ மீசன் பதம்பணிந் திறைஞ்சி னோர்க
ளினியவாஞ் செல்வம் பெற்றே யிகத்தினில் வாழ்வர் பின்னுஞ்
சினமுறு கூற்றை வென்று சிவபதத் திருப்பர் தாமே. (ச)

உததிபொங் கியகா லத்தி லுமாபதி வழுதிக் காக
முதுநகர் முழுதும் போர்த்துச் சூலத்தின் முனையி லேந்து
மதிசயங் கண்டு போற்ற வந்தன னங்கோர் தீர்த்தஞ்
சதுர்முகன் விதித்தா னந்தத் தண்மடுப் பிரம தீர்த்தம். (ரு)

பிரமதீர்த் தத்தைத் தெய்வப் பிரயாகை யாமி தென்னப்
பரமர்முன் னுரைத்த துண்டே யன்னதிற் படிவோ ரெல்லாந்
தரணியிற் செல்வந் துய்த்துச் சமன்வசத் தகப்ப டாமற்
றிரமுடன் பிரம கற்பஞ் சத்திய லோகஞ் சேர்வார். (சு)

வீங்கொலிப் புணரி பொங்கு நாளின்மீ னவற்கா யீச
னோங்கியே பெருகு நீத்த மொழித்திடச் சுழித்து நின்ற
பூங்கழற் சுவட்டிற் றென்னன் சிவலிங்க மமைத்தான் போற்ற
வாங்கொரு தீர்த்தங் கண்டா னதுதிரி நயன தீர்த்தம். (எ)

அத்திரிநயன தீர்த்தம் படிந்துகை தவன மைத்துப்
பத்தியா லிறஞ்சுஞ் சோம சுந்தரம் பணிவோர் யார்க்குஞ்
சித்தத்தி னினைந்த யாவு மெளிதினில் வந்து சேரும்
புத்திரர் முதல வாய செல்வமும் பொருந்து வாரே. (அ)

தில்லையா னருளி னாலே திருநடங் காண்பா னெண்ணி
மல்லலம் பழனஞ் சூழு முத்திமா நகரில் வந்து
பல்லவச் சூதப் பாங்கர்க் கோதம முனிவன் பண்டு
நல்லதோர் தீர்த்தங் கண்டா னதன்பெயர் ஞான வாவி. (கூ)

ஞானவா வியினின் மூழ்கி நாதனைப் பணிந்தோர்க் கெல்லா
மூனமாம் பிணியுந் தீரும் பழவினை யொழிந்துநீங்கு
மாநிலத் தெவர்க ளேது விரும்பினும் வந்து வாய்க்கு
மானதோர் பிறவித் துன்ப மென்பதே யில்லை யம்மா. (க0)

கருங்கட லுடுவட் டோன்றுங் கந்தமா தனத்தை நீங்கி
யிருங்கலை முனிவ னான காலவன் சுழிய லெய்தி
மருங்கினுத் தரத்தோர் தீர்த்த மியற்றி மாதவங்கள் செய்தான்
கருங்கய லோடை தானே காலவ தீர்த்த மாகும். (கக)

பெருகுகா லவதீர்த் தத்திற் படிந்துபிஞ் ஞகனைப் போற்றிக்
கரைதனி லிருந்து பண்டைப் பிதிர்க்கட னாற்று வார்க்குச்
சரயுவிற் கங்கை யாற்றிற் றருபிர யாகை தன்னின்
மருவியே செய்ய வாய்க்கும் பலனெலாம் வழங்கு மென்றே. (கஉ)

குருவரு ளதனாற் சீடக் கண்ணுவர் விடைகொண் டெய்தித்
திருவளர் சுழிய லெல்லைக் குணதிசை தன்னிற் சென்றே
யொருசிவ லிங்கந் தாபித் தருகொரு தீர்த்தங் கண்டார்
கருணையி னுரிய நாமங் கண்ணுவ தீர்த்த மாகும். (கங)

கண்ணுவ விருடி தொட்ட கண்ணுவ தீர்த்த மென்னும்
புண்ணிய மடுவிற் றோய்ந்து புனல்குடைந் தாடி னோர்கள்
விண்ணவ ராவ ரென்று விரைகம ழிதழித் தாமக்
கண்ணுத லுரைத்த தண்டு முனிக்கருள் செய்யுங் காலை. (கச)

பாண்டவர் வனவா சத்திற் பயிலுநாட் பார்த்த னென்போ
னுண்டகை சுழியலீசன் சந்நிதிக் கருக தாகக்
காண்டிபக் கோட்டி னாலே கல்லியோர் தீர்த்தங் கண்டான்
பூண்டதோர் நாமங் கோடி தீர்த்தமப் புனிதக் கூவல். (கரு)

நீடிய புகழி ராமன் வினைகெட நின்று தன்விற்
கோடியாற் கீறிக் கண்டா னதுதனுக் கோடி யாகு
நாடிய சுழிய றன்னி னரநரா யணன்றன் கைவிற்
கோடியாற் கீண்ட வாற்று லதன்பெயர் கோடி தீர்த்தம். (கசு)

உமைக்கர னளித்த சூல தீர்த்தந்தொட் டுண்மைப் பார்த்த
னமைத்ததோர் கோடி தீர்த்தம் வரைக்குமே யட்ட தீர்த்தஞ்
சுமைப்பிறப் பொழிக்க வேண்டிற் றொல்லைவீ டடைய வேண்டி
லிமைப்பிலா திருக்க வேண்டி லெவர்களும் படிக மாதோ. (கஎ)

பதிகளிற் சுழியன் மூதூர்க் கொப்புறு பதிவே றில்லை
நதிகளிற் கடவுட் பாவ நாசினி ஞாலத் தில்லை
கதிர்மணி யிலிங்கம் பூமி யிலிங்கம்போற் கண்ட தில்லை
மதிமுகத் துணைமா லைக்கு நிகரில்லை வடிவின் மாதோ. (கஅ)

இன்னதீ ரட்ட தீர்த்த மியம்பின மிருடி காளெம்
முன்னவன் சுந்த ரற்கெம் முதல்வன்சீர்க் காளை யாகி
முன்னெழுந் தருளிக் காட்சி கொடுத்தருண் முதன்மைக் காதை
பின்னினிச் சொல்வன் கேட்பீ ரெனச்சூத னியம்பு வானால். (கக)

அட்டதீர்த்தச்சருக்கம் முற்றிற்று.

---

ஆ திருவிருத்தம்-௫கக.

---

## காளையார் காட்சிச் சருக்கம்.

உலகெலாம் புகழ வென்று மோங்கிய கார ணத்தாற்
குலவிய தன்னைக் கற்பே ரவ்வெனத் தன்பல் கூறு
மலையினை மெலாங்கொள் பாக்கு வழங்குறு வண்மைத் தெம்மான்
கலைபுக முமையு டன்வாழ் கைலைமால் வரையா மன்றே. (க)

அத்தகு வரைப்பின் மேன்மை யார்கொலோ வளக்கற் பாலார்
சத்தமோ டறுமா றுதி யளவைகள் சார வொண்ணுச்
சுத்தமெய்ஞ் ஞான மேனிச் சோதியை யுருவிற் கோத்து
வைத்திருந் திருகண் கூடா வுயிர்க்கெலாம் வழங்க லாலே. (உ)

அவ்வரை நவெட் செம்பொ னுலய முளதா லாண்டைச்
செவ்வொளிப் படலக் கென்றா முவமையாச் செப்ப வெம்மான்
மூவ்வொளிக் கண்ணு மொன்றாய் முயங்கியாற் இகலி யொன்றை
யிவ்வுழி யிசைத்தல் சால்போ கண்ணேட்ட மெமக்கி ருக்க. (ங)

செம்பொனு லயநன் ளோர்மங் கிரசிங்கா தனத்தின் மீதே
யம்பொன்மா மலய மீன்ற வருண்மக ளகில மீன்ற
வம்பையோர் பாகமேவ வகிலகா ரணரா மெங்க
ணம்பனு ரகிலம் போற்ற நயந்துவீற் றிருப்ப ரன்றே. (ச)

இருமூவு ருரவர் தாமு மின்னண மமர்வார் ஞால
மருவுமன் னுயிர்கட் கெல்லாம் வளர்யோக போகக் கோல
முரைதரு வேகக் கோல முசிதமாம் போதெ லாங்கொண்
டருளினுல் விளையாட் டெய்தி யன்பின்வாழ் வமர்நா ளோர்நாள். (ரு)

சுத்தமெய்ஞ் ஞான மேனிச் சோதியார் தமக்குந் தொல்லை
நித்தகல் யாணி யார்க்கு நிகழ்ந்தலீ லாவி நோத
மத்தியோர் விளையாட் டாலே வளரொளி நிலைக்கண் ணுடிப்
பித்திய தநிற்றன் னீழல் பெட்புற நோக்கி னரே. (சு)

வாலிய வமரர்க் கெல்லா மப்பெயர் வழக்கங் காக்குங்
காலமோ வவர்தம் மாதர் கழுத்தினிற் செம்பொற் றாலி
நூலது தவமோ தன்றொ° றனிமையை நீக்க நாக்குஞ்
சீலமோ வாடி நீழற் செல்வனுர் நோக்க மன்றே. (எ)

நோக்கிய நோக்கி னுண்மை யார்கொலோ நோக்க வல்லார்
வாக்கினுல் வகுக்க வல்லார் மனத்தினு னினைக்க வல்லார்
நோக்கிய வவரே யாண்டு நுணுகித்தா மவையா வாரே
மாக்கிளர் வியப்பின் மூழ்கித் தம்மையு மறந்தா ரென்றால். (அ)

வேறு.

சுட்டுணர் வில்லா வகண்டமாய் நிறைவாய்ச் சோதியாய்த் துக ளிலா முதலா, யெட்டுறு தைல மெனக்கலந் தியைந்த வெம்பிரா னிரு ளிரி யாடிக், கட்டுறு நிழலைக் கண்ணிறை யமுதாக் கண்டனன் களிக் கடன் மூழ்கி, மட்டுறு முக்கண் பெற்றபே றெமக்கு வாய்த்ததின் றெனமகிழ்ந் தனனல். (க)

அம்மைகண் புதைத்த ஞான்றினி லெவ்வா றந்தகா ரம்பரந் து லக, மும்மையு மூடிற் றங்ஙன மொளியின் முழுப்பட லம்பரந் தலக

மும்மையு மூடமுக்கணு விமையா முழுக்கலை கொண்டுநோக் குதலு, மெம்மையா ருயிருங் கண்டிறந் தியங்க லின்றியாங் காங்கியைந் தனவால். (௧0)

இருளினி னாதி மூழ்கிமிக் குறங்கு முயிர்க்கதி யெம்பிரா னேக்கி, யுருவுட லாதி யளித்திடச் சகலத் துற்றன ரொளிகனி காட்ட, வெருவின ரதனுற் சுத்தராம் பருவ மாகென நடுநிலை விட்டா, னிருளையு மாற்று ரொளியையு மாற்று ரிவர்க்குமற் றென்செய்மோ விறையே.()

அமரர்க ளெல்லா மந்தஞான் றிருளி லாழ்ந்தன மின்றுமற் றொளியின், றமநிலைப் படலங் கண்பொறி தட்டத் தரிக்ககில் லோமிமை யாத, கமதுபெற் றேமென் கடவமென் றுள்ளங் கலங்கினர் கண்ணுதற் பிரானுர், தமதுள மிரங்கி முழுக்கலைப் பார்வை தணந்தவர்த் தண்ணளி புரிந்து. (௧௨)

வேறு.

இந்தரா விசைந்த வேணி யெம்பிரான் ஞான நோக்காற்
கந்தரா தலங்கட் கெல்லாங் கண்ணிழ லதனை நோக்கி
யந்தராச் சரிய நல்கு மழகதி சயத்தி னாலே
சுந்தரா வென்றான் ஞானஞ் சொரிந்திடு தூய வாயால். (௧௩)

ஒருமுறை பார்த்தல் போதா துள்ளநா னுள்ள மட்டுந்
திருவுரு வழகை நோக்கச் செறிந்தபே ராசை போலும்
வருகசுந் தரவென் றெம்மான் வாய்மலர்ந் தழைத்தா னென்றால்
விரிதரு மாசை யாரை விட்டது விளம்பி லம்மா. (௧௪)

செந்தமிழ் விளங்க வந்த திருவாச கச்சொன் முக்க
ணந்தணன் றனைப்பே ராசை வாரிய னெனுமப் பேர்வி
தந்துரைத் ததுமிப் பெற்றி தகுமநு பவத்தாற் போலு
மந்தநன் னுசை தற்கில் லெனிலெவ னுயிர்க்காந் தன்பால். (௧௫)

சுந்தரன் வந்தான் ஞான சோபநன் வந்தா னென்று
மந்தரர் நரர்பா தாலர்க் காணிப்பொன் மகிபன் வந்தான்
சிந்தையில் வினைக டீர்க்குந் தீர்த்தன்வந் தானென் றெங்குஞ்
சந்தபல் லியங்க ளார்ப்பச் சாரதர் யாரும் போற்ற. (௧௬)

கரியதா னரக்கன் மோதத் தோன்றுகான் முனையு நாபிக்
குரியகான் முனையு முன்னு மும்பர்கள் வாழ்த்த ஞானத்
துரியமா கணங்கொண் டாடச் சுந்தரன் வந்தா னென்ப
விரிசடை யாளற் காடி விளங்கிழை குமர னாக. (௧௭)

ஐயநின் னழகை யின்னே காணுமா தரவா லுள்ள
மையுமென் செய்கோ வென்று நாயகி நகைத்து வேண்டத்
தையனின் கருத்து ணர்ந்தும் பார்க்கநஞ் சாயை யென்று
துய்யர்சுந் தரவென் றேதத் தோன்றினன் றுய்ய னென்ப. (௧௮)

வணங்கின ளம்மை யப்பர் மலரடி வீழ்ந்தா ளையன்
மணங்கமழ் மலர்க்கை தூக்கி யெடுத்துமார் புறவ ணைத்துக்
கணங்களுக் கதிப னாகிக் கைலையிற் பிரியா தென்று
மிணங்கிநந் தனிமைநீக்கி யின்புறீஇ வாழ்க வென்றான். (௧௯)

பிரமத கணங்க ளெல்லாம் பிம்பமெய்ப் பிரதி பிம்பப்
பெருமித வபேதச் சீராற் பிறையணி விமல வாழ்வை
வரதசுந் தரனார் தம்மை மயங்குந ரைய முற்றார்
திரிபைய மொரீஇ மகிழ்ந்தார் தெளிந்துமா தேவி தன்னால். (௨௦)

சுந்தரன் றன்னை ஞானத் தொல்பரஞ் சுடரை வேறு
தந்துணர் மார்க்க ஞானத் தையல்வாழ் பாக மென்றே
நந்தலில் கலைக ளெல்லா நாயக னாமஞ் சோம
சுந்தர னென்று சோப பதத்தினாற் சொற்ற வன்றே. (௨௧)

தனிமொழி யபிதா னஞ்சுந் தரனெனத் தாமே யுள்ளக்
கனிவினெம் பிரான ளித்த காரணங் கண்ட கண்ட
மனுமுயிர்க் கருள வேறு மாறுமா றாய கோலந்
தனையுறு மியலு மாறுந் தனக்கது தகாதென் றாங்கொல். (௨௨)

விறகுறு தலையும் யாழ்கொள் விருத்தக் கூனுடலும் வெண்பிட்
டுறைகருந் துணிமன் னொட்ட கோலமும் பிரம்பு விற்கற்
பொறையுடற் றழும்பு மாசை புரிந்து கொஃ டமக்கே னென்றோ
நிறைகொள்சுந் தரப்பே ரண்ணல் பெறநிறுத் திட்டார் சித்தர். (௨௩)

சிந்திடு மென்பு நீறுஞ் சீறுமா டரவுஞ் செற்ற
தந்திவல் லியத்தின் றோலுந் தணந்துகொஃ றரித்தோ தன்றால்
சுந்தர ஞானானந்த சுத்தசிற் சாயை தன்னைச்
சுந்தர புமானா நம்பர் தோற்றினார் துய்ய நோக்கால். (௨௪)

இத்திறந் தோற்று நம்பி யெம்பிராற் காளாய் நித்தஞ்
சுத்தவெண் ணீற்றுத் தட்டுந் தூமலர் மாலை யுந்தன்
கைத்தலத் தேந்திச் சாத்துங் கைங்கரி யந்த வாதாங்
குய்த்தன ரம்மை யப்பர்க் குவப்பினா லிந்நா ளோர்நாள். (௨௫)

## வேறு.

உம்பர்கண்மெய்ச் சிவமொருவித் தம்வரியா லொருகா
லூற்றபசிக் கொடுமைபொரு ருயரமிர்தம் வேண்டிப்
பம்பொலிப்பாற் கடல்கடைந்தார் பரனைமறப் பித்த
பழவினையைக் கடைந்தெடுத்த படிவமழு விடந்தான்
வம்பதுவா யுதித்தெங்கு மிருள்வாரி யிறைத்து
வான்புவியைச் சுருக்கியெங்கும் வட்டமிட்டுப் பரக்கத்
தம்பெரிய நிலைகுலைந்து தலைவிரிகோ லமதாய்த்
தாள்பிடரை யிடறிடவோட் டந்தனர்க ளன்றே. (உசு)

புக்கிடமற் றெதுவென்று புலம்புநரோ நேர்க்குப்
புக்கவிட மெலாம்விடமாய்ப் பொங்கிருளாய்ப் புகையாய
நக்ககொடுந் தீயாகி நலிக்கவந்நள் ளிருளி
னந்தாத வெளிவிளக்காய் ஞாலமெலாந் தாங்கி
நக்கரிருப் பிடமாகி வெள்ளொளிமன் கான்று
நாயகமெய்க் கைலைமலை தாயகமாய்த் தோன்றத்
தொக்கனர்த முளநெக்கு நெக்குருகித் தமது
தோடகினைந் துணர்ச்சிவர வோலமிட்டா ரன்றே. (உஎ)

வானவர்க ளோலமலைத் தானமெங்கு மடைப்ப
மன்னருமை பாகரஃ தென்னனமா கணங்க
டனர்களா யமரர்விடப் பானமதா யினரச்
செய்தியென விரங்கியவர்க் குய்தியருள் செய்வான்
றானவனாஞ் சுந்தரனை யானபுரி கெனப்பூ
தரமலர்வா யிலில்வந்து கரமலரை நீட்ட
ஞானமுனஞ் ஞானமென நடுங்கிவிட மொடுங்கி
நாவலதின் கனிபோற்கை மேவியதை யன்றே. (உஅ)

அங்கதைமெய்ச் சங்கரனார் தங்கரத்தே யளிப்ப
வவர்மகிழ்ந்து தவமலர்ந்தாங் கண்ணன்முக நோக்கித்
துங்கமலி யாலால சுந்தரனே யென்று
சொன்னாமம் வழங்கியும்பர் துன்னாம விடர்தீர்த்
தங்கணனா ரமர்ந்தனரா லாகலசுந் தரனா
ரானார்க்குத் திருமாலை யமைத்துவரு பணியூர்
இங்கண்மலி பொழிலதனிற் றங்குமலர் கொய்யச்
சென்றனர்பொன் மன்றரவர் திருவருளி னாலே. (உகூ)

வேறு.

ஆயிடைக் கமலினி யனிந்தி தைப்பெயர்ச்
சேயிழைச் சேடியர் தினமு மங்கைக்குத்
தூயநன் மலர்த்தொடை தொடுத்துச் சாத்துநர்
மேயின ரென்பநம் விகிர்த ராணையால். (௩௦)

நம்பியு மவர்தமை நயந்து நோக்கினன்
வம்பலர் குசத்தியர் தாமும் வாஞ்சையுட்
பம்பிட நோக்கினர் பாரும் வானமு
நம்பர்தம் பதமலர் நாடி நோக்கிட. (௩௧)

நோக்கின ரவரவர் தம்மு ளேக்கியே
தேக்கிய நீர்ச்சடைச் செம்மல் பாதமும்
பாக்கிய வதியுமை பதமு முன்னியே
மாக்கிள ராசையை மடக்கிச் சென்றனர். (௩௨)

உயிர்தொறு மொளித்திடு கள்வர் தாமுயிர்ப்
பயிர்நனி தழைத்திடும் பாக்கி யங்கொலோ
செயிர்தவிர் சுந்தரச் செம்மல் வான்முக
மயிர்வற நோக்கியே யருளன் மேயினார். (௩௩)

சுந்தர கந்தரத் தூம லர்க்குழற்
பந்துறு தனத்தியர் பாலு ளஞ்செல
வந்தனை நினக்குநா மகித லத்தினிற்
றந்தனந் தோற்றமத் தைய லார்களும். (௩௪)

கடலுடை வைப்பினிற் றோன்றிக் காமுறக்
கடவரங் கவர்தமைக் கலந்து பின்னர்நி
கடமதில் வருகெனக் கவலை யுள்ளுறீஇக்
கடவுரு மணியினைக் கண்பி ரிங்தெனை. (௩௫)

ஐயநின் னருள்பொழி நோக்கி னுகிய
துய்யமா தவத்தினேன் றுன்பந் தோய்கிலா
மெய்யனென் றென்னைநான் விதந்த பாவமோ
நொய்தினீ கைவிட றூக்கிற் றிவ்விடை. (௩௬)

அம்மையு மப்பனு மரிய வொக்கலுஞ்
செம்மைசேர் போகமுந் திருவு நீயென
மெய்ம்மைநா னெண்ணிய விதத்தைச் சாமிநீ
யெம்மையு மறிந்ததே யென்செய் கியானென. (௩௭)

தோன்றனீ யெமக்கொளி துறுகண் மாமணி
யென்றனை நின்வர விதற்குச் சான்றரோ
வான்றமா தவப்பல மவனி நண்ணிய
பூன்றகம் மருளினிற் போத மாற்றினேம். (௩௮)

காமனூர் பொடிபடு கைலை வெற்பினிற்
காமமெய் மனமுறுங் கதித்த நம்மரு
ளுமரு பம்பல நயக்கு மங்கதிற்
காமமென் ஞமுருக் கதுவிற் றுன்னிடை. (௩௯)

அகிலமீ ததுலசுங் தரணி யாகவி
னிகலிலிவ் வருள்விளை யாட்டிற் சேய்ந்திடு
தகவின னீயெனச் சதுர நம்மரு
டுகளினின் னுளத்திடைத் தோய்வித் தாமரோ. (௪௦)

காமனோர் சிறுவன்றன் கருட்பு வில்லினு
லேமல ருய்த்திட வெழுந்த காமச்செங்
தீமடுத் திடப்பெருந் தேவ ரென்றுதங்
காமமுய்த் தவர்பலர் நலிந்து மாய்ந்தனர். (௪௧)

தன்மகன் றீமைதன் பாற்ப லித்ததாற்
கன்மக னசுரன்கா தலிவி ருந்தையைப்
புன்மக தோடத்தாற் புக்கி லங்கைக்கோ
னின்மக ளேபற்ற விடர்ப்பட் டானன்றே. (௪௨)

அடலவ னெடியினி லநங்க ஞட்பொடி
படமுடித் ததுநந்தம் பார்வை யேயன்றே
விடரொழி யந்தநம் மருளே யேன்றுளம்
புடைபடக் காமரு பத்திற் புக்கதேல். (௪௩)

விண்ணினின் மண்ணினின் வேறு வைப்பினிற்
பண்ணவ ரிருடிகண் முனிவர் டாருளோ
ரெண்ணுறீ லெவர்கொலோ வெதிர்ந்து தாங்குநர்
திண்ணமார் தீத்திர டிரணந் தாங்குமோ. (௪௪)

அரியல னயனல னமரர் கோனலன்
றரியயோ திகள்பிற ரல்லர் சூழ்ந்திடிற்
றிரிபினம் மருட்சிருங் கார லீலையை
யுரியவன் றுங்கிட வொருவ னீயன்றே. (௪௫)

காய்த்துண் ஞானக்கட் கண்ணுற் றுண்ணிலார்
மாயக்கள் ளுண்டிடு வரட்ட சுக்கனா
யோய்வுற்று மரித்திடு மும்ப ரோவக
பாயத்த நம்மரு ளிலீலைப் பாத்திரர். (சசு)

அருளுறு காமமு மருளின் காமமு
மிருவித யாமையா லெய்ந்த வேட்கையா
மருளுறு காமத்தா லுயிர்கண் மாய்ந்திடு
மருளுறு காமத்தா லகில முய்யுமால். (சஎ)

இவற்றினுள் வேற்றுமை பலவி யைந்திடுங்
கவற்றிய மாயையைக் கடந்து கண்மனோ
பவற்றெற விழித்தநம் பான்மை காமமாய்த்
தவற்றொரீஇத் தரணியிற் சார்த்த வந்ததால். (சஅ)

காரண மென்னெனிற் காசி னித்தலை
யாரண மாகமம் வாழ வாண்டுயிர்
சீரண விடமற்றைச் சிதடர் மார்க்கங்கண்
மாரண மெய்திட வலித்த வாய்மையே. (சகூ)

கலியினி லுயிர்கண்மெய்க் கதியை மாறியே
நலியுமிவ் வர்த்தமா னத்தி னம்பிநீ
யொலியெழிற் றமிழ்நிலத் துதித்து நம்மருள்
பலிசைவ வைதிகம் பாலிப் பாயன்றே. (ரு0)

நின்றனை யிணைபிரி யாத நேமத்தேம்
புன்றலைப் புவிநிலைப் போக்கு வோமலோ
மன்றநா மேவந்துன் மனோர தங்களை
யொன்றொழி யாவகை யுறமு டித்துமால். (ருக)

மூர்த்தியுந் தீர்த்தமுந் தலமு முந்தியே
பூர்த்திசேர் தமிழ்நிலம் பொலியு மங்கதன்
சீர்த்தியா ரளக்குநர் சேணு ளோர்களு
மார்த்திமுற் றிடவெனி லுண்டு நண்ணுவார். (ருஉ)

சுந்தர விடங்கநீ தோற்றி யவ்விடைச்
செந்தமிழ்மாலைகொஞ் சிறக்கச் சாத்துவாய்
சந்தவெண் ணீற்றொளி தருவிப் பாய்நிலத்
திந்தமெய்த் தொண்டிரிந் தன்றென் றெண்ணலை. (ருங)

பூமலர் மாலையோ புலர்ந்து வாடுறும்
பாமலர் மாலைவா டாத பான்மைத்தாற்
பூமலர் மாலைப்புண் ணியத்தி னாலன்றே
பாமலர் மாலைமெய்ப் பணிப வித்ததே. (ருச)

நம்முரு நீற்றினை நயக்க வேந்தலின்
விம்முறு முயிர்க்குறு விழுமந் தீர்ந்திட
வம்மகிழ்ப் படாதஃ தேந்த லாமதே
மெய்ம்மைநாம் விரும்புபுண் ணியமெய் வித்தக. (ருரு)

கலிமிகு கொடுமையா லுயிரைக் காய்வதா
லொலிதமிழ் வைப்பினி லெழுபத் தொன்றென
மலிபுகழ்த் தொண்டர்கள் வந்த வான்புகழ்
சொலியொரு தொகைநின் னாற் றொகுப்ப வுன்னினாம். (ருசு)

நின்னிடை நமக்குறு நிலைகொ ணன்பினை
மண்ணுல கறியநாம் வலிந்து நின்றனைத்
துன்னுறீ யாண்டுதோ ழமையுங் கொண்டுசேற்
சின்னய லீலைகள் செயவிச் சித்தனம். (ருஎ)

சென்றுழி யெலாநினைச் சென்று நிற்பம்யாஞ்
சென்றுழி யெலாநிற்குச் சிறப்புண் டாகுமாற்
சென்றுழிச் சேரல னன்புஞ் சேர்தருஞ்
சென்றுழி நின்னைமா லயனுஞ் சேவிட்பர். (ருஅ)

நின்றனான் மாநிலஞ் சிறந்து நேரிலா
மன்றலுற் சவங்கொளீஇ வாழ்த்த வாழ்ந்துநங்
குன்றுயர் கைலையைக் குறுகுவா யென
வென்றனி நாயக னியம்ப வேந்தறான். (ருகூ)

சேவடி யிறைஞ்சிவீழ்ந் திடத்தஞ் செங்கையா
லாவயி னெடுத்துமார் புறவ ணைத்தருட்
டாவில்வெண் ணீற்றினைச் சாத்தி னாரென்ப
மூவருந் தேடரு முதல்வ னாரன்றே. (சுO)

## வேறு.

அன்றீனாப் பிரிகன்றா கன்மிகத்தாற் குதித்தோடி யயற்க ணாடிப், பின்றாயைக் குறுகலெனும் பெற்றியருள் விளையாட்டைப் பேணி யுண்ணல், குன்றானை யுரித்தானை மென்றாமரசபாதங் குழைந்து சென்

ணி, யொன்றாக வைத்தருளாற் பின்றுது தென்றேத்தை யுளத்திற் கொண்டார். (சுக)

சாயையுரு வாய்ச்சகள நிட்களமாஞ் சதாசிவமே யென்றுஞ் சால்பான், மாயைகடந் தோர்துதிக்கும் வள்ளலா ரெழுந்தருள மனத்திற் கொள்ள, லாயதெனி லவதரிக்க லாயதெனி னம்புயக்கா லருளிற் றீண்ட, லாயதெனி லாயதிலாப் பாக்கியமென் றென்னாட்டிற் கவனி மீதே. (சுஉ)

பொன்னாட்டும் வடநாட்டும் புவிநாட்டு மாதரமாய்ப் பொலிந்து நின்று, கன்னாட்டுங் கடனாட்டுங் காமர்மத்து நாட்டுமுயர் கைலை யென்னப், பன்னாட்டும் பணிநாட்டும் பரவுசிவப் பணிநாட்டும் பான்மையாலே, தென்னாட்டு வேந்தர்வரத் தென்னாட்டின் செய்தவத்தைச் செப்பற் பாற்றே. (சுங)

தென்னாட்டிற் றிருமூலப்பா டிந்நாட்டிற் றிருநாவலூரிற் சேர்வார், சின்னாட்ட மொரீஇச்சிவத்திற் சிந்நாட்டம் வைத்தசிவத் துவிசர் சீர்சா, றென்னாட்ட மரபிலிசை ஞானியார் சடையர்தவத் தோன்றலாராய்ப், பொன்னாட்டும் மண்ணாடே புகழ்படைக்கத் தோன்றினார் புவன நாதர். (சுச)

வேதவா கமம்வாழ விதிவாழ வெண்ணீறைந் தெழுத்து வெல்லச் சாதநெறி யொடுங்கவுயர் போதநெறி தலையெடுக்கச் சமண்புத் தாதி வாதநெறி புறங்கொடுக்க மன்னியசீர் நாவலகர் மன்னர் வந்த காதையுல கெலாம்புகழ வருள்காட்ட வெவ்வுயிருங் களித்த வன்றே.

சுரர்நரர்வாழ்த் திடவந்த சுந்தரனார் வளர்ந்திளமைத் துணைவ ரோடு மருவிவீ தியிற்சிறுதேர் விளையாட்டில் வந்துழியவ் வைப்பின் மன்னர் நரசிங்க முனையரையர் கண்டுமகிழ்ந் தெடுத்தணைத்து நயந்து பெற்ற குரவரது மதியாற்றம் மரண்மனையிற் கொடுபோந்துகுலாவிப்போற்ற.

வளர்ந்தவரு வார்தமக்குத் திருமணநாள் வரமரபின் வாய்த்த கந்நி,' கிளர்ந்தமர போர்வழுத்த நியமித்து மணப்பந்தர் கெழுமு காலை, யளந்தமா லும்மயனுங் காணரியா ராவணங்கொண் டடிமை பேசித், தளர்ந்தவார்த் திகங்காட்டி வழக்குருசு பண்ணவெண்ணெய் நல்லூர் சார்ந்து. (சுஎ)

வெண்ணெய்நல்லூர்ப் பித்தர்பின்னே நம்பியொடு மணச்சபையோர் மேவிச் சூழ, வண்ணலா ரந்தணர்க ளவைமுன்னே வழக்கினில் வென் றடிமை கொண்டு, நண்ணுறுநும் மகங்காட்டு கென்னவிது

வென்னவருட் டுறைபி ஞதர், கண்ணினூற் காண்பரியார் மறைந்தரு ளத் தொடர்ந்துகம்பி காண ராகி. (கூகூ)

நிலைத்துநிற்பத் தேற்றுவார் தேற்றுக்காற் றேற்றுநர்யா ரதனூற் செவ்வே, யுலைத்தவிடை மேலுமைபா லுற்றவருட் காட்சிதந்தாங் குண்மை தேற்றப், பலைப்புலத்தை வென்றுருந் தொடர்வரியார் பழ வுணர்வு முழுதும் பற்றித், தலைப்பில்பர மாநந்த வெள்ளத்திற் படிந் தாரு ரருளின் சார்பால். (சுக)

பித்தாவென் றெம்மானைப் பேசியவம் மொழிமுதலே முதலாப் பேணிச், சித்தாந்த மறைப்பொருண்மெய்த் தமிழ்பாடிச் சிவனுறை வைப் பெங்குஞ் சென்று, கொத்தார்நற் றொண்டர்தொழப் பாடிவரு வாராரூர் குறுகிப் பான்மை, யொத்தாண்டே கமலினியார் பரவை யென வுற்றுரை யுவந்து கூடி. (எ0)

அற்புதலீ லையின்மகிழ்வா ரரனருளாற் றிருத்தொண்டத் தொ கையென் றுழ்ந்த, சொற்பதிகம் பாடியடி யார்குலத்தைத் துலக்கி யிக்கத் தொல்லை ஞால, நற்பதத்தை யடையுமொற்றி மாநகரிற் சங் கிலியை நம்பர் கூறுங், கற்பனையான் மணந்துசில நாளமர்ந்தா ரூர் நினைந்து கடிது மீண்டு. (எக)

பரவையார் பிணக்கொழிப்பான் றூதுவேண் டிடவாரூர்ப் பர மர் பாதி, யிரவிலிரு நடைபரவை வாசனடந் தியைவிக்க வெம்பி தே திக், கரையிலரு ளானந்தக் கடல்படிந்தாங் கருட்கரைக்கோர் காட் டாய்க் கண்ணுய், விரவுவார் சேரலனூர் நண்பருளம் பலக்கூத்தர் மேவு விக்க. (எஉ)

மலைநாட்டு வேந்தர்வரக் கலைநாட்டு வேந்தரெதிர் வந்தார் வாழ் வு, சிலைநாட்டு வில்லார்த மருளூட்டிற் றென்றரசர் செம்மாந் துள் ளந், தலைநாட்டு மன்பதனூற் றலைநாட்டி நம்பிபதந் தாழ நம்பி கலைநாட்டு விற்கொடியார்க் கருளூட்டத் தொடுவணங்கிக் கரத்தாற் றாக்கி. (எங)

ஓருயிருக் கீருடலென் றுயர்புலவர் நண்புரிமைக் குறுதி சொற் று, மோருயிருக் கோருடலே யெனநம்பி யுதியர்பிரான் றனையுவந்தே, மார்பிறுகத் தழுவியன்பு பாராட்ட விருவர்சந்தி மீகோற்ச வத்தைப், பார்மட்டோ சுரர்மகிழ்ந்து பார்த்துமலர் மழையான்மண் போர்த்திட் டாரே. (எச)

ஆரூரர் புரவலராப் புரவலரா ரூரரென வபேதச் செல்வச்
சீரூர்மெய்ப் பெருவாழ்விற் சேரமான் றோழர்கொடைச் சேர ரோடு
பாரூர்புநீ றுறைமணியை வீதிவிடங் கக்கோவைப் பரிந்து கண்கள்
வாரூரக் கும்பிட்டுப் பதிகமா லைகள்சாத்தி மகிழ்வித் தாரால். (௭௬)

போகமடை வார்பரவை மாளிகையி லரசுரிமைக் குகந்த ராச
போகவிருந் தமைத்துமகிழ் விக்கநாள் சிலவுறைந்தாங் குலக முய்ய
மாகநதி யார்திருப்புத் தூர்வணங்கி மதுரைநகர் வருவார் மாற
னுரைமொழி யதுகேட்டு நகரலங்கா ரஞ்செய்வித் துவகை யுற்றான்.

தன்மகளைத் திருவேட்ட செழியர்பிரா னும்வேப்பந் தாரோன் றானு, முன்மனங்கொண் மணிவிளக்கா நாவலூர்ப் பெருந்தகையை புதிய ரோடு, மன்மகிமை பெறவெதிர்கொண் டெழுவிக்க வாரூரர் மகிழ்ந்து வாழ்ந்தாங், குன்மனைக்க ணிதவைப்பார் துவாதசாந் தப் பதியை யுவந்துற் றாரால். (௭௭)

கோயிலினுள் ளெழுந்தருளி யங்கயற்கண் வல்லிபடர் குலப்பொற் குன்றை, மீயுயர்தென் னாட்டரசை மெய்த்தமிழ்ச்சங் கக்கோவை விழைந்து போற்றிப், பாயசுவைத் தமிழ்பாடிச் செழியர்சே ரலர் பாண்டி மன்ன ரென்றுங், காயமும்மை முடிவேந்தர் சேவிப்ப விருந் துகொண்டங் கமரு நாளில். (௭௮)

வேறு.

பாண்டிநாட் டிடைப்பரமர் பதிபலவுஞ் சென்றிறைஞ்சி
வேண்டியமா மன்மருக னிருவருக்கும் விடைகொடுத்துத்
தூண்டுபுகழ்க் குற்றாலஞ் சென்றுதுதித் துத்தொல்சீ
நீண்டுதிரு நெல்வேலிக் கெழுந்தருளி யின்புறுவார். (௭௯)

அந்தணர்க ளடியார்க ளாண்டுநக ரலங்கரித்துச்
சுந்தரனார் சேரர்குலத் தூண்டுசுடர் விளக்கனையார்
வந்தனர்நம் வாழ்விதுவென் றெதிர்கொண்டு மலரடிக்கீ
ழுய்ந்தனரா மென்வீழ்ந்து பணிந்தனர்மெய் யுவகையராய். (௮0)

எம்பிரான் றானுமெதிர் பணிந்திறைமைச் சேரரொடு
நம்புமெனக் கன்னையாய் நயந்தெடுத்து வளர்த்தவரு
ளம்மைதிருக் காந்திமதிக் கழகியநா யகர்பாதச்
செம்பதும மலர்பணிந்து திருந்துதமி ழிசைபாடி. (௮௧)

பொருநைநதிப் பெருக்கழகாற் பொருவில்செல்வச் செருக்கெழிலாற்
றிருமலிநெல் வேலியெனுஞ் சிவராச தானியிடை

யருளாகவ ரததான நாதரார சவைக்களமார்
திருவருளோ லக்காகனி சேவித்துச் சிறப்புறுவார். (அஉ)

சேரர்பிரான் றனக்குமந்தச் சிறப்புவிளங் கக்காட்டி
யார்வமுறு துலாமாசத் தம்மைசெல்லைக் கம்பையினிற்
சாரரிய தவமிருப்பச் சாலிவா டீசர்தரு
போர்விடைமேற் காட்சிதரும் பொற்பவனி சேவித்து. (அங)

எங்குமிலாச் சிறப்பிதுவென் றிமையவரு மெடுத்தேத்தப்
பொங்கெழிற்பூங் காவடர்ந்த புகழ்வசந்த மண்டபத்தே
திங்கண்மலி சித்திரையிற் சேர்வசந்தோற் சவப்பவனி
யங்கணுறச் சேவித்தார் சேரரொடு மாரூரர். (அச)

சேவித்தங் கருள்பெற்றுத் திருவிரா மேச்சுரத்தின்
மேவித்தன் பழிதீர்க்க வேண்டிரகு நாதனுக்குக்
காவித்தண் கருவிழியாள் சாநகிக்குக் கருணைநனி
பாவித்த பர்வதவர்த் தனிநாதர் பதம்பணிந்தார். (அரு)

இன்னிசைவண் டமிழ்பாடி யெழில்கொள்சிவ பூமியெனப்
பன்னுபுகழ்த் திருமூலர் பரவீழ மண்டலத்தின்
முன்னியசீர் மாதோட்டத் திருக்கேதீச் சரந்துதித்தாங்
குன்னியங்க ணமர்ந்தபடி பாடியுவந் துறையுநாள். (அசு)

வேறு.

உற்றதொரு வைபவமீண் டுரைத்துய்வே னுமைபாக ருவந்து மன்னும், பற்றுளது தேவர்முனி வோர்பழிச்சும் பான்மையது பழு தின் றுண்மை, கற்றவர்க்குக் கனிபழுத்த கற்பகமா வதுமாயைக் கடலு ளாழ்ந்த, சிற்றுயிரைக் கரைசேர்க்குந் திருச்சுழியன் மாநக ரைச் சிந்தை செய்தார். (அஎ)

சிந்தைசெய்வார்க் கெண்ணியவெண் ணியவாங்கே யெய்துவிக் கும் தெய்வத் தான, மெந்தையார் திருச்சுழியன் மாநகரென் றெடுத் தேத்து மியனூ லெண்ணிற், சுந்தரவென் றெந்தையார் தோழிறுபிரான் றனைத்துதிக்கச் சூழக் காண, வந்தியா நிற்கவிச்சித் தவரெனிற்றான் றனையவர்க்கு வழங்கா தாமோ. (அஅ)

நாவலூர் மன்னரவர் மலைநாட்டு மன்னர்க்கு நம்ப னூர்தம்
மாவலூர் திருச்சுழியல் சென்றுவணங் குதுவென்றுங் களவி றுனை
பாவலூர் பயணமுறப் புறம்போந்து சிவாலயங்கள் பலவும் போற்றி
யேவலூர் மலைவில்லார் திருச்சுழியற் கணித்தாக வெய்தி னரே.(அக)

அண்ணலா ரிருவோரு மெழுந்தருளு மவ்வார்த்தை யளவில் செல்ல, நண்ணலார் திருச்சுழியல் வாணர்கள்கேட் டென்னைகொலோ. காமுன்னுளிற், பண்ணலார் தவமென்றே பாராட்டி யுவகையுறீஇப் பாரும் வானும், கண்ணலார் தரநகரை யலங்கரிப்பித் தெதிர்கொண் டார். களிப்பி லாழ்ந்தே. (சுO)

வீதியெலா மலகிடுவார் புண்ணியநீர் தெளிப்பிப்பார் விளங்கு தீபங், கோதின்மண நறுந்தூப மிடுவார்பூ கதங்கதலி குழைக்க ரும்பு, மேதகவி னிரைத்திடுவார் பூரணகும் பம்வரிப்பார் விரைப்பூஞ் சும் மை, யாதகுநெற் பொரிசொன்ன் பொடியிறைப்பார் பல்லியங்க ளார்ப்ப வெங்கும். (சுக)

அந்தணர்க டருப்பையா சிலைதோய்நீர்க் கரகங்க ளங்கை யேந்திச் சந்தமறை யெடுத்தோதிச் சாருவார் சிவனடியார் சார்சா ராக வந்துகளிப் பிற்றம்மை மறந்தாடிப் பாடியெங்கும் வட்ட மிட்டுச் சுந்தரசுந் தரவென்பா ரரகரவென் பார்கடலின் சும்மை மான. (சுஉ)

ஏந்திழையார் மங்கலங்க ளெடுத்தேந்தி யாலத்தி யெடுப்ப வெங் கும், பூந்துகிற்பொற் பாவாடை விரித்துவரு மார்க்கமெலாம் பொலி வித் தார்கள், சாந்தணிதார் மார்பரெங்க ளாரூரர் சேரலர்கோன் றா ணி மீதே, போந்துவரு ஞானபா நுவும்யோக மதியுமெனப் பொலிந் தா ரன்றே. (சுஙு)

ஞானதீ பம்யோக தீபமென விருவர்பெரு மக்க ணண்ணு, மா னமகோற் சவம்வீதி வாழ்புருடர் மகளிரெல்லாம் வயங்கக் கண்டே, மானவராய்ப் பிறந்தபயன் பெற்றோங்கண் ணிரண்டுபெற்ற மகிமை பெற்றோம், போனபிறப் பும்பெற்றோம் பெறுப்பேறிங் கென்னைகொ லோ புகலி னென்றார். (சுச)

கடுநாடிக் கைப்பிடித்த பெருமாளாஞ் சுந்தரராய்க் கரைநா மேற விடுநாடிக் கெலாம்புகழ நாவலூ ரருளுருவின் மேவிற் றென்பார் கடுநாடி நூபிச்சிலம்பி னொலிநாடி நடராசர் நயந்து கேட்பித் திடுநாடி நாலுணர்முத் தமிழ்வேந்தர் சேரலனு ரிவர்தா மென்பார்.

மணக்காலைக் காவணத்தி னுவணத்தா லெம்பெருமான் வயோதி கத்தாறீ, பிணக்கான்மெய் யிணக்குரையால் வழக்காண்ட வன்றொண் டர் பேணுமென்பார், பணக்கார ரெணக்காரர் திருமுகப்பா சுரங் கொணர்ந்த பாண னுரைப், பணக்கார ராக்கிவிட்ட குணக்காரர் சே ரலனூர் பாரீ ரென்பார். (சுரு)

புகலூரிற் செங்கல்பொன்னாப் புரிவித்த சித்தசிகா மணியார் பூவி, லகலூர்கண் முழுதுமுய்ய வாண்டகுரு நாதரம்ம வணைந்தா ரென்பார், தகலூர்ப்பொற் சிலம்பொலியோர் பகர்சிறிது தாழ்த்தே தத் தணிந்து சொற்று, மிகலூர்ப்பொன் னம்பலத்தா ரிசைத்துவா விதியடைத்தார் வேந்த ரென்பார். (௯௭)

மன்வண்ண மணவண்ணந் தன்வண்ண மெனக்கொண்டு மண் ணோர் விண்ணோர், சின்வண்ண முறவளித்த ஞானசிகா மணியாரூர்ச் செல்வ ரென்பா, ரென்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மாகியவீ சனுக்கே யென்று, பொன்வண்ணத் தமிழ்த்தொடைபொற் சபை யரங்கேற் றியபுலவர் பொறைய ரென்பார். (௯௮)

குருகாவூ ரதிற்றண்ணீர்ப் பந்தர்வைத்துங் கச்சூரிற் பிச்சை கொண்டு, மருகாவூர் பசிக்கரனா ரளித்தசெல்வப் பிள்ளையெங்க ளைய ரென்பார், மருகாவூர் வெறுத்திருந்த மண்காவூர் கொள்கமலை வாணர்க் கேய்ந்த, திருகாவூர் மும்மணிக்கோ வைப்பரிசி லளித்தவரிச் சேர ரென்பார். (௯௯)

வேறு.

பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கு மெனக்கும்
பற்றாய பெருமானென் றுற்றதிருப் பதிகத்
தெண்மயத்த வுலகறியச் சிவசகச விநோத
மெடுத்தியம்பு ராசதுரை யெங்கதுரை யென்பார்
விண்மயத்த நடருறவுங் கூடலர்தங் கூட்டும்
விழைந்துபெற்றுஞ் சேரலராய் மேவியரு ணம்பிக்
கண்மயத்த சேரமான் றோழரெனு மகிமை
யளித்தகொடைச் சேரதுரை யடுத்ததுரை யென்பார். (௧00)

வேறு.

தாதுமுதற் பணிபுரியுந் தோழர்தியா கேசரெனுஞ் சுலபத் தோழ
நாதர்தமிழ் நாதர்குரு நாதர்புகழ் வரம்புரைக்க நாமா ரென்பார்
வாதையுயிர்க் கொழிந்தகழ நிற்றறிவா ரெனுமகிமை மகுட நாமம்
போதபரி பூரணர்பாற் பெற்றவர்சீர் நாம்புகலப் போமோ வென்பார்.

என்றுதிருச் சுழியனகர் வீதியுள்ளார் சார்சாரா வெடுத்தி யம்பித், துன்றுமொலி மறையொலிபல் லாண்டிசைவொலி மங்கலத்தொல் லியங் கொ ளோதை, மன்றசிவ நாமவொலி யிருவர்துணர மக்கள்பெயர் வாழ்த்து மோதை, சென்றுதிக்கு முழுதுமண்டப் பித்திகடந் தப்பு றத்துஞ் சென்ற தன்றே. (௧0௧)

பன்முகமாய் வருமோசை யொருமுகமாய்த் திரண்டவொலிப் பண்ணை நோக்கிப், பொன்முகநாட் டிறமமரர் பிளயமோ வென்று புறம் போந்து நோக்கிச், சின்முகநா யகரிருவர் நவேணுறுந் திருக்கூட் டந் தெரிசித் தார்ந்து, நன்முகமா யொருங்கிமலர் மழைபொழிந்தார் நாரணர்ப்பி னயந்தார்த் தாரால். (௧0௩)

இத்திறத்துப் பெருஞ்சிறப்பெங் கெங்குநிகழ் தரமறையோ ரடியா ரெல்லாஞ், சுத்தபரி பூரணசுந் தரர்பாதஞ் சென்னியுறத் தாழ்ந்து தாய, தத்துவமெய்ப் பொருளுணர்த்துந் தாரகபா ரகஞான தயாரா சைக, சித்ததநு மான்றமிழ்க்கு வேந்தர்நீர் வரத்தவமென் செய்தோ மென்றார். (௧0௪)

என்றவருக் கெதிர்வணங்கி யெடுத்தினிய பலகூறி யருளி யெம்மான், றன்றிருமா நகர்ச்சுழிய லெல்லை நனி வணங்கியுள்ளே சார்ந்து வீதி, யொன்றொழியா வகைசிறப்பித் துள்ளவெலாங் கண்டுமகிழ்த் துண்மை யாளர்க், கென்றுமினி யார்கோயிற் கோபுரத்தை யிறைஞ் சியுள்ளா லேகி னாரால். (௧0௫)

மாளிகையை வலங்கொண்டு சந்நிதிவந் தெட்டுறுப்பு மண்மேற் றோய, வாளுடையார் திருச்சுழிய லாளுடையா ரெம்மையுமா ளுடை யார் தம்மைக், கோளுடையார் வினையொழிக்குங் கோளுடையார் தாடலைமேற் கொண்டிட் சென்று, நீளிடையார் கன்றுவை யணைந்த தெனப் பரிந்தணுகி நெடிது நின்றே. (௧0௬)

ஆனந்த பரவசரா யருட்சோதி நிறைவிலடர்ந் தடங்கி ஞான
வானந்த முறநின்று கண்ணீர்கம் பலைகொள்ள மலர்ந்தா ராது
ஞானந்த முருவாவா ரருணினைந்து நெக்குநெக்கு ணயர்ந்து ஞாலத்
தானந்த மொழித்தருள வூனுயென் றிசைப்பதிக முரைத்தா ரன்றே.

## திருச்சுழியல் தேவாரம்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊனுடுயிர் புகலாயக விடமாய்முகில் பொழியும்
வானுய்வரு மதியாய்விதி வருவானிடம் பொழிலின்
றேனுதரித் திசைவண்டின மிழற்றுந்திருச் சுழிய
லானுவித நினைவார்தமை நலியார்நமன் றமரே. (௧)

சீரூர் தரு விமலன்றிரு வனையார்க்கய லருகே
தேரூர் தரு மரக்கன்சிர நெரித்தான்றிருச் சுழியல்
பேரூரென வுறைவானடி பெயர்நாவலர் கோமா
னாரூரன் றமிழ்மாலைபத் தறிவார்துய ரிலரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

செந்தமிழ்ப்பாற் கடலுதித்த திருப்பதிகத் தெள்ளமுதஞ் சீற்ற நஞ்சு
முந்தைநாட் கரம்பிடித்துக் கொடுத்தகுறை யம்மையுள முழுது நீங்க
வெந்தையார் திருச்சுழிய னாதரஃ துண்டகடுப் பிரிந்துள் ளாலா
லந்தமுறச் செவிப்புகட்டி யின்பகர ரானாரா ரூர ரன்றே. (௧0அ)

ஊனாயென் றெடுத்தமுதன் மந்திரந்தா னகந்தூய்மை யுயர்ந்த சேவை, தானாகச் சுழியனினை வார்மிருத்துஞ் சயராகுந் தகவாந் தண்டேர்த், தேனார்பின் மந்திரந்தா னதன்வழியென் னென்பார்க்குச் செப்புப் போலு, மானாமைத் தொண்டுசெய்ய வல்லார்நல் லார்துய ரின்றமையு மாறே. (௧0௯)

இறுதியது மகத்ததுமாம் பயனமைக கண்கூடா வின்னே சாரு, முறுதியதென் னென்பார்க்குத் திவ்வியதீர்த் தங்கௌவ்வைக் கடலென் றோதி, யெறியுமது கரைமுத்தந் துவர்வாயார் குடைவரென விறைச்சி செய்தஃ, தறியவவ்வத் திசைக்கரசா குவரவரா ளரியாளென் றருளிற் றுங்கொல். (௧௧0)

செல்வத்தாற் கேவலமென் பயன்பழுதி னீங்கியுள்ளஞ் சிறப்பினன்றோ, வொல்வதென்பார்க் குரைபோலுஞ் சுழியலா னடிதொழுவா ருள்ளிற் குற்றஞ், சொல்லவவை நிலையார்மெய்ப் புகழால்வா னுறுசுருதி தொழுவார்க் கூறு, பல்வகைய வுறல்காண்டு மென்பார்க்குப் போலுமுயர் பண்பி னாலே. (௧௧௧)

எம்பெருமான் சுழியல்பெற்று னினிதுறையத் திறம்பாமை யிவன்சீர் நாமந், தம்பராலாக் கற்றார்க ளெவ்வுழியு மெத்திறத்துங் கதியுட்சார்வ, ரிம்பரவன் றனையேத்தல் கடன்பயனை யெதிர்நோக்க லிறைஞ்சு வோர்க, டம்பரமன் றவன்பரமே யென்றைந்தா மந்திரஞ் சாற் றிற்றுப் போலும். (௧௧௨)

பயனுக்கா ரெவரேத்தும் பண்பெவனென் பார்க்கருளப் பாசத்தாலாந், துயர்கொள்பிறப் பறுப்பவரே யவர்மலராற் கொழும்புகையாற் றூய சோதி, பயினினைவா லவன்புகழைப் பரிந்துகேட் கும்

யண்பாற் பற்றற் றூர்சொ, லுயர்தவமாஞ் சதுராமென் றுறுமாறுஞ்
சுழியன்மறு வுணர்த்திற் றன்றே. (கக௩)

அற்றேலங் கவனுருவென் குணங்குறியென் பயனென்கொ லிஃ
தான்,றக்காட், சுற்றுவினை யவந்திரி னன்றோவவ் வாமென்னிற் சுழிய
லெந்தை, சொற்றவவ னுருச்சைவ நீறுகுறி யேறேறு சோறூன் றெ
ய்த, லுற்றபய னடிநிலைவே விளைத்தீர்வின் சாதனமென் றுரைத்த
தாமே. (கக௪)

எத்தனையா யினுமுடிவிற் சுழியலிறை குருவாய்வந் தேன்று லன்
றிச், சித்தமுடி வெங்ஙனமா மென்பார்க்குச் சித்தாந்தத் தேசிவன்
றன், பத்திகண்டு குருவடிவி னமைசிரத்தான் றன்னடியாம் பண்பு
தந்து, வைத்தபிறப் பறுத்தின்ப மருள்வனென்றெட் டாஞ்சுருதி
வகுத்த தன்றே. (கக௫)

இந்நெறியின் வாராதோர் வைதிகத்து மவைதிகத்து மிசைந்தார்
பல்லோ, ரந்நெறியோ ரும்வாழ்ந ரவர்க்கெனெனப் பூர்வபக்க மறை
கு வார்க்குச், சின்னெறித்தக் கன்மகஞ்சாக் கியர்சமணர் நெறியுறு
திண் டாட்டந் தேற்றி, யந்நெறிச்சீர் வெதிரேகத் தொன்பதாஞ்
சுருதியெடுத் தேத்திற் றன்றே. (கக௬)

எத்தனைதுட் டர்களாயு மருட்குவிலக் கெனினதனுக் கிழுக்கா
மென்பார்க், கித்தனையும் பின்றேறிச் சரணடையி னருள்புரிதற் கில
ங்கைக் கோனை, வைத்துணர்த்தித் திருச்சுழியன் மகிழ்திருமே னிக்
கோவை வள்ளல் சாற்றுஞ், சத்தபலந் தயரின்மை திருக்கடைக்காப்
புச்சுருதி சாற்றிற் றென்ப. (கக௭)

தேனைப்பா லைக்கரும்பைச் சர்க்கரையைத் தெள்ளமுதைத் திர
ட்டிச் சேர்த்த, ஞானப்பா டன்மறையைப் பொருள்வரம்பு செய்தெ
ளியே னவின்றே னல்லேன், வானப்பா லரும்வல்லார் மற்றென்கொ
றிருச்சுழியல் வாணர்க் கன்ப, ரானப்பே ரானைவழி யாசையன்பா
லொருபுடையஞ் சிவித்த தாமே. (கக௮)

இத்திப்பாந் தமிழ்மாலை மறைபாடி யாரூரர் சேர ரோடு
மத்திப்பாம் பணிந்தபிரான் றுணைமாலை கேள்வர்திருச் சுழிய லுதர்
பத்திப்பாற் கண்ணருவி பொழியவழி பட்டருள்கை பற்றி யாண்டு
மெத்திக்கா ளரும்புகழ வெளிவந்தா ரடியர்கண மெங்கு மார்ப்ப. ()

ஆங்கொருசார் குண்டாற்றி னருகுதிரு மடங்காட்டி யையர் வே
ண்டும், பாங்குதிரு விருந்தளித்துத் திருச்சுழியன் மாநகரார் பணிந்

து போற்றத், தாங்கரிய மகிழ்ச்சியினுற் சிலநாளங் கமர்வாரித் தகவி ஞேர்நா, ளோங்குமிக மற்புதத்தை யுரைக்கவென்று லுரைப்பாற்ரு வுணர்வின் பாற்ரு. (கஉ0)

அரியாலு மயனுலு மறையாலு மளப்பரியா ரளவை யாலுந் [ரப் தெரியாதா ருண்டிலேயோ வென்பார்க்கங் கதுவதுவாய்த் தேரத் தே பரியாரா யணுவாகிப் பரமவணு வாயொன்றும் பரமர் தாமே தரியாரெம் பெருமக்க டிருமடத்தி லோரிரவிற் றுயிலும் வேலே. ()

ஆளையா வாளையா வென்றுமுனி வோர்தவத்த ரமர ரெல்லாங் கேளையோ தித்துதிப்பக் கேளாதா ரெவ்வுழியுங் கிட்டார் தாமே காளையா கட்டுமென்று நாட்கழிப்பார் தாமாரூர் நம்பி யார்க்குக் காளையா ரெனுமுருவிற் கனவிலெழுந் தருளினர் கண்ணிற் காண. ()

கண்டொன்று மொழியாது தனைமறந்தா னந்தவெள்ளக் கடலு ளாய, கண்டொன்று செங்காச்சொற் பெருந்தகைக்குப் பொற்செ ண்டு கையிலேந்திக், கண்டொன்று மூன்றுனர் கருதாதார் கருத்தொ ழித்துக் கருது முள்ளக், கண்டொன்று தொட்டுறைவார் திருமுக மண் டலக்காட்சி கனிவா னல்கி. (கஉங)

கானப்பேர் நாமிருப்ப தெனுமொர்மொழி யமிர்துசெவிக் கட்டு கட்டி, வானப்பேர் கனவினிலுமடிச்சுவடுங் காட்டாத வள்ள லார் மற், றானப்பேர் புகாதிருச் சுழியலார் மாமூலத் துறவுங் காட்டி, ஞானப்பேர் தமைவசிக்கும் பவளவாய்க் குறுஞ்சிரிப்பு நல்கி னரே. ()

நல்கியவர் மறைந்தருள நம்பிவிழித் துணர்ந்துநட ராச ராசர் பல்குகரு ணைப்பெருக்கின் பரமநா டகச்சிறப்பாம் பண்பு தேறி [க்கட் மல்குவிழி பொழிமழையும் மயிர்ப்புளகாங் கமுஞ்செங்கை மலர்த லை புல்குதிரு வஞ்சலியு மாயின ருண்ணிகழ்வைப் புகலப் போமோ. ()

எங்கேநா னிருக்குமிடந் தேடியெழுந் திருவெழுச்சி யெங்கே நா யேன், பங்கேரு கப்பதந்தன் னிலைமுடிமேற் றீண்டவென்ன பாக்கி யந் தா, னிங்கேர்கொண் மண்மகள்செய் தாள்கொல்லோ வெழிற்பொற் செண் டேந்து கையுங், கொங்கேர்நற் சுழியமுடிக் கோலமுமின் னுங் காணக் கூடுங் கொல்லோ. (கஉசு)

நின்றநிலை யதுவியக்கோ நடந்தகுறு நடைவியக்கோ நித்த சுத் தப், பொன்றிருமே னிப்பெருமான் கைச்செண் டின் புகல்வியக்கோ புரிந்த ஞான, வென்றெனலர் மொழிவியக்கோ குறுஞ்சிரிப்பி னியல்

வியக்கோ விறைஞ்சு வோர்தந், துன்றிடர்தீர்த் தாள்கடைக்கட் டொ
ழில் வியக்கோ வெதை யெதைநான் வியந்து சொல்கோ. (௧௨௭)

எந்தலூர் யார்நீரென் றியக்கவுருக் கொண்டதன்னை யிலைந்து
வேண்டி, வந்து வந்து கேட்கப்பா வகன்கேட்க வமரர்குழாம் மயக்கி
லாழ, வந்தலூர் பேர்வினவ நீர்யார்நும் வலியறிலைத் துரும்ப சைக்
கென், றிந்தவாய் மலரோநா மிருட்பதுகா ளப்பேரென் றிசைத்த
தம்மா. (௧௨௮)

வலியவந்து விஞவியுமவ் வானோர்க்கு விடையிறுக்கா வண்ண
மென்னோ, வலியவந்து தாமேநா யேன்வினு வாதும்விடை வழங்கிற்
றென்னோ, வலியவவர்த் திரற்கரித்து மோகவிருட் படுத்திமறைந் தரு
ளிற் றென்னோ, வலியமந்த நகைகாட்டி வாவென்று வசித்துமறைந்
தருளிற் றென்னோ. (௧௨௯)

மாலாககன றடிச்சுவடு காட்டாத மாகிதியோ மறைநான்
கென்ற, நூலார்க்கு முடிமுடிவு தோற்றுத நுண்ணொளியோ நோன்ற
ஞானந், தோலார்க்குந் துலங்காத துவெளியோ காலையுருத் தோற்றி
யென்னன், பாலார்ப்புண் டடிமுடியுங் காட்டியரு ணைகைகாட்டிப்
பாலித் தன்றே. (௧௩0)

எத்தனைநா ளெத்தனைபே ரெத்தனைநோன் பாற்றிடினு மென்னு
மென்னு, மத்தனவர் திறநோக்கிச் சித்தமிரங் காவிடினிவ் வவனி
யீதித், தத்துவத்தை யுணரார்க ளகம்பிரமா திகள்பேசித் தலைவர்ப்
பேணு, தெய்த்தனர்கள் ணியர்காமக் கலன்புனைந்தாங் கேகாந்த மிலைய
க்த தேபோல். (௧௩௧)

என்றுபல நினைந்துதிரு வாக்கிலு லெடுத்தேத்தி யெம்மான்
றன்பா, லொன்றியசே ரலனுர்க்கிவ் வுண்மையெலா முணர்த்திவிடுக்
துற்ற காலைத், துன்றுகெளவ்வைக் கடல்பாவ கரிதீர்த்தம் படிந்து
துணை மாலை தோய்ந்த, குன்றுயர்தோட் டிருச்சுழியற் கோமானைச்
சந்நிதியிற் குறுகி னுரால். (௧௩௨)

விண்ணோர்க்குந் தெரிவருநின் மேன்மையெங்கே யானெங்கே
விமல னாயேற், கண்ணுவென் னுரமுதே யளியனமர் தருமிடத்தி லளை
யி ராவி, லெண்ணுரக் கனவினில்வந் தருட்காலைத் திருக்கோல மெளி
மைத் தாக்கிக், கண்ணுரக் காட்டியது மென்றரமோ வெனக்குறுகண்
களையுந் தேவே. (௧௩௩)

என்னவிவை பலகூறிச் சேரர்குலப் பெருமானெ டெழில்கொ ளுவன், மன்னர்தமிழ் மன்னர்கண்ணீர் மழைவார வெட்டுறுப்பு மண் மேற் றேயத், துன்னிவிழுந் தெழுந்துதமிழ் மாலேபுனைந் தடிபரவத் துணைமா லேக்குத், தன்னமர்பா கம்மளித்த தென்னவர்கோ மானரு ளித் தறுவில் வாக்கால். (௧௩௪)

ஐயவிந்தத் திருச்சுழிய னகர்ட்பெருமை யளக்கொணு தகில மீன்ற, தையறுணே மாலேயொடு சோதிலிங்க மாய்ஞானத் தான மாய, துய்யதல மிதிலுறைவோ மேகாந்த சோதிவன மென்று தோலா, மெ ய்யரிதன் பேருரைப்ப ரிதனுண்மை யெல்லார்க்கும் விளங்க வேண்டி.

நள்ளிருளி னுள்ளொளியார் காளேயுருப் போற்செண்டு நயந்து தாங்கிக், கொள்ளலினின் திருமடந்தான் காளேயார் கோயிலெனக் குலவ வீண்டுக், கள்ளவுணர் வதுநீக்கித் தொழுவார்க்குக் காட்சிதந்து கருணே செய்வோம், கொள்ளவவ ரவர்வேண்டும் வரங்கொடுப்போ மெவ்விதத்துங் குறைவை யாதே. (௧௩௬)

வேறு.

அண்டர் பிரானிவண மருடரு முறுதிமொழி
யாரூர் நாவலர்கோ னற்புத முறவேற்றுத்
தொண்ட ரடித்தொழலுஞ் சோதி யிளம்பிறையுஞ்
சோபந வடையாளத் தொன்மைகள் பலவோதிக்
கண்டு தொழப்பெறுவ தென்றுகொலோ வடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளேயையென்
றெண்டகு பதிகமறை கண்டெடன வோதியரு
ளினேவளர் கானப்பேர் நிலேவொ டெழுந்தனரே. (௧௩௭)

---

சுந்தரமூர்த்தி நாயனுர் - பண் புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

தொண்ட ரடித்தொழலுஞ் சோதி யிளம்பிறையுஞ்
சூதனமென் முலேயாள் பாகமு மாகிவரும்
புண்டரி கப்பரிசா மேனியும் வானவர்கள்
பூசலி டக்கடனஞ் சுண்ட கருத்தமருங்
கொண்ட லெனத்திகழுங் கண்டமு மெண்டோளுங்
கோல நறுஞ்சடைமேல் வண்ணமுங் கண்குளிரக்
கண்டு தொழப்பெறுவ தென்றுகொ லோவடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளேயையே. (௧)

கன்னலே யீன்முறைக் கார்வயல் சூழ்கானப்
 பேருறை காரைக்யொண் சீருறை தண்டமிழா
லுன்னி முனத்தயரா வுள்ளுரு கிப்பரவு
 மொண்மொழி ஞவலர்கோ ஞகிய வாரூரன்
புன்னு மிசைக்கிளவி பத்திவை பாடவல்லார்
 பத்தர் குணத்தினரா யெத்திசை யும்புகழ
மன்னி யிருப்பவர்கள் வானினி மிந்திடினு
 மண்டல நாயகராய் வாழ்வது நிச்சயமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

வேறு.

காரையா ரறிவார்நம் முடைநாளோ நமனுளோ நமன்வாராமுன், பாரையார் கமுகடவி யுடுத்ததிருக் கானப்பேர் பற்றி நாயேன், காரையார் [redacted]யன்று காண்பதெனச் சிவசோதி கதறிற் றென்று, னீரையார் தருமிவ்வாழ் வெனநினைக்குஞ் சோம்பர்க்கென் னிகழ்ந்து வோமே. (௧௩௫)

உண்டார்க்கே யின்புறுத்து முயரமிர்த முதவன்றி யுவந்து தன்னைக், கண்டார்க்கே யின்புறுத்துங் காரையா ரமிர்தமென்னுங் கருத்துக் கொல்லோ, வண்டார்க்கேய் பொழிறுவன் மன்னவனூர் காண்பதற் காம் வாஞ்சை காட்டிப், பண்டார்க்கேய் பதிகமொழி பரவினு ரரவினூர் பணியார்ப் போற்றி. (௧௩௬)

தமக்குமாத் திரங்காட்டித் தோழர்தமை மறைத்தவஞ்சந் தனை யுட் கொண்டோ, விமைப்பின்வந்து மொழிந்துமறைந் ததற்கேதுத் தனிவரவென் றெண்ணிக் கொல்லோ, நமைப்புரக்கு நாவலனூர் தொண்டரடித் தொழலைமுத னயந்து நாட்டிக், கமைப்பதிகங் கட்டுரைத்தார் காரையார் களவுவெளி காட்டு வாராய். (௧௪0)

கண்டமட்டி லின்புறுத்து மெனிலியக்க வுருவமரர் கண்டா ரன்றே, யண்டரவ ரின்புறலின் றவ்வியாத் திக்குற்ற முறுகிற் றென்பார்க், கெண்டகுமங் கதவிலக்கற் கன்றேகா ணப்பெறுவ தென்று தெங்க, டொண்டர்நா யகங்கண்டு தொழப்பெறுவ தெனச்சூழ்ந்து சொற்று தன்றே. (௧௪௧)

பூதமொடு பொறிபுலன்கள் குணங்கரண மான்மாயை புகன்ற மேலா, நாதநா தாந்தமிவை கடந்தபொரு ளெனைதென் றற்ற கண்ட, போதபூ ரணர்தமையும் விழுங்குபொருள் கண்டுதொழப் புகும

தோமுன், மாதவத்தா லருள்பெற்று லன்றியெனப் பெறுசொனம்பி வழங்கிற் றன்றே. (௧௪௨)

மாதவத்தா லருட்பேறுங் கண்டுதொழு பேறுமிவை வாய்ப்ப தற்கு, மாதவனுக் கிடைசிறுத்த முலைபருத்து மணப்பருவம் வாய்ப்ப தேபோ, லோதவத்தை பலவழுந்தி யிருவினையு நுகர்ந்தவற்றி ஞெப்பு வாய்க்கும், போதுபரு வம்பார்த்தே யிறையுமருள் புரியுமெனல் புக ன்ற தென்றே. (௧௪௩)

பருவம்பார்த் திறையருளு மெனிலிறையென் பருவநாம் பார்க்க வென்னிற், பருவந்த னெறிபலதின் றுனுற்றுபல புண்ணியத்தின் பான் மை தன்னுற், குருவெவன்யாண் டையன்கண்டார் யாரெனத்தீ யெரி சிகையன் குருட னீரைத், துருவலெனு மருட்டேட்டஞ் சோம்பலெ ன்று கொலோநம்பி சொல்லிற் றுமால். (௧௪௪)

இத்திறத்து மருளாள ரினும்பொருள்கொ ளத்திறத்து மயைத் தஞான, வத்துவுணர் பதிகமறைத் திருக்கடைக்காப் பிற்பலந்தான் வான்சீ ரெய்திப், பத்தர்குணர் மண்டலநா யகராகி வாழ்வதுகிச் சய மாப் பாடி, யத்தர்பதி கந்துணையாக் கானப்பேர் வழிக்கொண்டங் கடைந்தா ரன்றே. (௧௪௫)

மோனமுனி வீர்முத்தி மாநகராந் திருச்சுழியன் முற்றி யன்றோ, மானகௌ ணியமுனிவன் றவஞ்செய்து பேறுபெற்றான் வாழ்வா மெ ங்கண், ஞானமுனி சம்பந்தன் சீகாழித் துரைவள்ள னயந்து தண்சீ, ரானகுலத் தவதரிக்கத் தன்பேரைத் தவதரிகக வருள்பெற் றுனல்.()

சோதிவனங் காலையாா கோயிலெனுந் தொன்னுமச் சுழியற் றெ ய்வ, வாதிநக ரந்தத்தும் பிரளயசித் தெனத்தோணி யப்பர் வாழ்க்கை, மாதொடமர் சீகாழி மாநகர்போன் றருட்காழி வள்ளல் வந்த, சாதி முதல் கவுணியற்குச் சார்பருளி யதினுமுன்மை சார்ந்த தன்றே. ()

ஆதலினுற் றிருச்சுழியன் மாநகரின் பெருமையெஞ்சொ ளல விற்றோவெந், நாதர்துணை மாலைமகிழ் நாதர்திரு மேனியெழி ஞுதர் செம்பொற், பாதமலர் வழிபட்டுப் பயன்வேண்டிற் றெலாம்பெறுக பண்பாலென்று, மாதவத்துச் சூதனுரைத் திடமுனிவர் கேட்டுனி மகிழ்ந்தா ரன்றே. (௧௪௮)

நைமிசத்தின் முனிவராவான் வழிக்கொண்டு திருச்சுழிய னகரி னண்ணிப், பைமிசைப்பாப் பணிபார்மெய்த் துணைமாலை பாகர்தனி

பணிந்துட் புக்கு, மெய்மிசைத்த பத்தியினாற் பூசைமுற்றித் துதித்த ருளினின் விளைந்த வின்பங், கைமிசைத்தாங் கதுபெற்றுத் தவவனமீண் டெய்புக்கார் களிப்பி னாலே. (கசகூ)

வே று.

சொற்ற மிழ்த்தென் சுழியற் புராணத்திற்
பற்று ளோரும் படிக்கப் பெருவிருப்
புற்ற பேரும் புராணத் தொருகவி
கற்ற பேருங் கடவுள ராவரே. (கருo)

மாதர் கற்பு மனுநெறி வாய்மையு
நீதி மன்னர்செங் கோலு நிலைக்குக
சோதி யெந்தை சுழியற் புராணமிப்
பூத லத்திற் பொலிந்தினி தோங்கவே. (கருக)

வே று.

திருச்சுழிய னகர்வாழி துணைமாலை வாழிதிரு மேனிச் செல்வ
மருச்சுழிய விதழிமுடி யார்வாழி மறைகளா கமங்கள் வாழி
கருச்சுழியின் வீழாதே காக்குமைந்தக் கரநீற்றுக் கணங்கள் வாழி
பருச்சுழிய ஞாலமெலாம் வைதிகசை வம்புரக்கும் பணியோர் வாழி.

நால்வர்தமிழ் வாழியெங்க ளுலொன்பா னிரட்டியன்பர் நயந்து வாழி, பால்வருமத் தொண்டர்சீர் பரவுவார் வாழிதிருச் சுழியற் பற்றி, மால்வருகண் டத்தார்க்குப் பணிபுரிந்த சேதுபதி மரபுவாழி, சால்வருமப் பணியேன்றன் பாற்செயன்ப ரிட்டசித்தி சார்ந்து வாழி.

திருச்சிற்றம்பலம்.

காளையார் காட்சிச் சருக்கம் முற்றிற்று.

---

மெய்கண்டதேவன் மெல்லடிவாழ்க.
சேக்கிழார்பெருமான் சேவடிவாழ்க.

---

ஆ திருவிருத்தம்-எசச.

---

## திருச்சுழியற் புராணம் முற்றுப்பெற்றது.

---

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ரு | உஅ | வேதிகையும் | வேதிகையுங் |
| உகூ | கூ | வும்மு | வும்மூர |
| உள | ௩ | பயிறத்தோய் | பயிறவத்தோய் |
| ,, | கக | தனைய | தணையக் |
| ௩௩ | கசு | விலவாய் | விலனுய் |
| சக | ௩0 | வரைக்குந் | வரையுந் |
| சரு | கஅ | வடினின் | வடிவினின் |
| சஅ | ககூ | வரணு | வரனு |
| சகூ | கஉ | யச்சுவத்தினீழ | யச்சுவத்தநீழ |
| ,, | உ0 | மொடுங்குற | மொருங்குற |
| ருக | ௩உ | யின்றி | யன்றி |
| ருஅ | க௩ | வளர் | வளரர் |
| எகூ | ௩ | இறஞ்சு | இறைஞ்சு |
| அ0 | எ | வரைக்குமே | வரையுமே |
| ,, | கரு | காளையாகி | காளையாராய் |
| அ௩ | கஉ | வரத | வரதர் |
| ,, | உ௩ | மண்ணெட்ட | மண்ணெட்டக் |
| அச | ௩ | தம்வரியா | தம்வலியா |
| ,, | சு | படிவமழு | படிவினெழு |
| அரு | ௩௩ | மெய்ம்மை | மெய்மை |
| அசு | க0 | தரணி | தரணீ |
| அஅ | கஎ | சின்னய | சிந்நய |
| அகூ | உகூ | காணரியா | காண்பரியா |
| கூஉ | கஅ | கேதீச்சர | கேதீச்சுர |
| | ௩உ | குதுவென்று | குதுமென்று |
| கூ௩ | அ | பூகதம் | பூகம் |
| ,, | ௩0 | வயோதிக | வயோதிக்க |
| கூச | சு | விதியடைத்தார் | விதிபடைத்தார் |
| கூகூ | உசு | கௌவ்வை | கௌவை |
| க00 | கக | போற்செண்டு | பொற்செண்டு |
| ,, | உஎ | தொழுனுஞ் | தொழநுஞ் |
| க0உ | க0 | பருவந்தனெறி | பருவந்தானெறி |
| ,, | உக | தண்சீர் | தஞ்சீர் |
| ,, | உஎ | சொளல | சொலள |